நிறுவன ஆசிரியர் உரை



# கிறிஸ்துவுக்குள்

## *In Christ*

### *J.C. Choate*

சரீரப் பிரகாரமாக நாம் ஒவ்வொருவரும் பாவமில்லாமல் பிறக்கிறோம் என்று வேதாகமம் போதிக்கிறது. இதினிமித்தம் நாம் ஆவிக்குரிய நிலையில், கள்ளங்கபடமற்றவர்களாக பாதுகாப்பாக இருக்கிறோம். நாம் வளர்ந்து பெரியவர்களாகும்போது, கணக்குக் கொடுக்கும் வயதை அடையும் போது, அதாவது தீமையிலிருந்து நன்மையை அறியும்போது, நம்முடைய மீறுதல்களால் பாவிகளாகிறோம் (ரோமர் 3:23). எனவே தான், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்க வேண்டுமென்றால் நாம் மாற்றப்பட்டு சிறு பிள்ளை களைப் போல ஆக வேண்டுமென்று இயேசு சொன்னார் (மத். 18:3).

தேவனுடைய பிரமாணத்தை மீறியதினிமித்தம் பாவிகளான நாம் இரட்சிக்கப்படுவது அவசியமாயிருக்கிறது (1 யோவான் 3:4). பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன் (ரோமர் 6:23) என்று பவுல் நினைப்பூட்டுகிறார்.

ஆனால், நாம் பாவத்திலிருந்தும், மரணத்திலிருந்தும் எப்படி தப்பித்துக் கொள்ள முடியும்? நாம் எப்படி மன்னிக்கப்பட முடியும். இரட்சிப்பின் நிலைக்குள் நாம் எப்படி வர முடியும்? நாம் விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றால் அவர் நம்மை இரட்சிப்பதாக இயேசு சொன்னார் (மாற்கு 16:16). பேதுரு திரளான கூட்டத்தில் பிரசங்கித்த போது, அவர்கள் விசுவாசிகளானார்கள். மேலும், அவர்கள் வேறு என்ன செய்ய வேண்டுமென்பதை அறிய விரும்பினார்கள். அப்பொழுது பேதுரு, அவர்கள் மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டுமென்று அவர்களிடம் சொன்னார் (அப். 2:38). “ இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் ” (அப் 2:47).

ஞானஸ்நானமானது ஒருவன் கர்த்தருக்குக் கீழ்ப்படிகிற காரியத்தில் கடைசிப் படியாக இருக்கிறது. ஞானஸ்நானம் நம்மை இவ்வுலகத்திலிருந்து கிறிஸ்துவுக்குள்ளும், சபைக்குள்ளும் உட்படுத்துகிறது. ஞானஸ்நானத்திற்கு முன்பு தேவனிடத்திலும், கிறிஸ்துவினிடத்திலும் விசுவாசமும், நம்

பாவத்திலிருந்து மனந்திரும்புதலும், கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று அவரிடத்தில் நாம் வைத்திருக்கும் விசுவாசத்தையும் அறிக்கை செய்வதும் இல்லையென்றால் வெறும் ஞானஸ்நானம் மாத்திரம் நமக்கு எந்த நன்மையும் செய்யாது. கர்த்தருடைய போதனைகளின்படி - நம் பாவங்கள் கழுவப்படும்படி தண்ணீரில் அடக்கம் பண்ணப்படும் போது, அதாவது, முழுகி ஞானஸ்நானம் பெறும்போது, அந்த ஞானஸ்நானம் நம்மை இரட்சிக்கிறது (I பேதுரு 3:21). தண்ணீர் நம்மை இரட்சிப்பதில்லை. ஆனால், நாம் அவருடைய சித்தத்தின்படி ஞானஸ்நானம் பெற்றிருக்கிறபடியால் கிறிஸ்து நம்மை இரட்சிக்கிறார். I பேதுரு 3:21ல், பேதுரு சொல்லியிருக்கிறபடி ஞானஸ்நானமானது மாம்ச அழுக்கை நீக்குதலாயிராமல் தேவனைப் பற்றும் நல்மனச்சாட்சியின் உடன்படிக்கையாயிருக்கிறது.

இங்கே ஒரு கேள்வி வருகிறது. "ஒருவர் தேவன் என்ன சொல்லியிருக்கிறாரோ அதைச் செய்யும் வரை தேவனோடு அல்லது தேவனுக்கு முன்பாக எப்படி நல் மனச்சாட்சியோடே இருக்க முடியும்? " " நிச்சயமாக அது முடியாத காரியமாயிருக்கிறது. எனவே, மனந்திரும்பிய விசுவாசி ஞானஸ்நானம் பெறுவது அவசியமாகிறது".

இரட்சிக்கப்படுவதற்கும், புதிய சிருஷ்டியாவதற்கும் ஒருவர் கிறிஸ்துவுக்குள் இருக்க வேண்டும்; கிறிஸ்துவுக்குள் இருப்பதற்கு ஒரே வழி தான் இருக்கிறது. அப்போஸ்தலனாகிய பவுல் இவ்விதமாகச் சொன்னார். "கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா? மேலும், பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு, அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம் (ரோமர் 6:3-4).

இதைத்தான் II கொரி. 5:17 ல் பவுல் சொல்கிறார். அந்தப் புதிதான ஜீவன் கிறிஸ்துவுக்குள் புதிய சிருஷ்டிகளாக, புதிய மக்களாக இருப்பதினால் உண்டான பலனாயிருக்கிறது. பவுல் மறுபடியும், இவ்விதமாகச் சொல்கிறார். " நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவைப் பற்றும் விசுவாசத்தினால் தேவனுடைய புத்திரராயிருக்கிறீர்களே", ஏனெனில், உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனைபேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவைத் தரித்துக் கொண்டீர்களே என்று (கலா. 3:26,27).

உதாரணமாக, ஒருவர் மேலாடையை அணியும் போது அவர் மேலாடைக்கு உள்ளிருக்கிறாரா அல்லது வெளியில் இருக்கிறாரா? நிச்சயமாக உள்ளே தான் இருக்கிறார். எனவே, ஒருவர் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெறும் போது, அதன் பொருள் அவர் கிறிஸ்துவுக்குள் இருக்கிறார் என்பதாகும். கிறிஸ்துவுக்கு வெளியே இல்லை. மேலும், அதன் பொருள்

ஒருவர் கிறிஸ்துவுக்குள் தேவனுடைய பிள்ளையாக இருக்கிறார் என்பதே.

வாழ்க்கையின் ஏதோ ஒரு காலகட்டத்தில் இரட்சிக்கப்பட்டு, அதன் பின்பு தாங்கள் ஞானஸ்நானம் பெற்றதாகச் சொல்கிறவர்கள் தாங்கள் கிறிஸ்துவுக்கு வெளியே அல்லது கிறிஸ்து இல்லாமல் இரட்சிக்கப்பட்டதாகவே சொல்கிறார்கள். அதெப்படி முடியும்? ஒருவர் இரட்சிக்கப்பட கிறிஸ்துவுக்குள் இருக்கவேண்டுமென்றும், ஞானஸ்நானம்தான் ஒருவரை கிறிஸ்துவுக்குள் இருக்கச் செய்கிறதென்றும் வசனங்கள் போதித்தால், அதன் பொருள் ஞானஸ்நானத்திற்கு முன்பு ஒருவர் இரட்சிக்கப்படுவதென்பது முடியாத காரியமாகும்!

மறுபடியும், பவுல் 1 கொரி. 12:13ல் நாம் ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டிருக்கிறோம் என்று சொல்கிறார், மேலும், கொலோ. 1:18 ல் அவர் அந்த சரீரம் சபை என்று சொல்கிறார். பவுல் (எபே. 1:22,23) ல் அந்த சபை சரீரமாயிருக்கிறது என்று காட்டுகிறது. கடைசியாக, எபே 4:4 ல் ஒரே சரீரம் தான் உண்டு என்று வெளிப்படுத்துகிறார்.

ஒரே சரீரம் சபையாக இருக்குமானால், அதன் பொருள் ஒரே சபை தான் இருக்கிறது என்பதாகும். நாம் அந்த சரீரத்திற்குள்ளாகவோ அல்லது சபைக்குள்ளாகவோ ஞானஸ்நானம் பெற்றிருந்தால், அந்த ஒரு சபைக்குள்ளாகப் பிரவேசிப்பதற்கு ஒரே வழி தான் இருக்கிறது. அந்த வழி ஞானஸ்நானம் பெற்றுக்கொள்வது தான்! இதெல்லாம் மிகவும் நியாயமாகத் தான் இருக்கிறது !

மேற்சொல்லப்பட்ட கருத்துக்களையெல்லாம் இணைத்துப் பார்த்தால், நாம் ஞானஸ்நானத்தில் கர்த்தருக்குக் கீழ்ப்படியும் போது, ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறந்தவர்களாக கிறிஸ்துவுக்குள் அவருடைய சபைக்குள் பிரவேசிக்கிறோம். அதே நேரத்தில், கிறிஸ்து நம்மை அவருடைய சபையில் சேர்க்கிறார்.

சரீரப்பிரகாரமான உறவில், அதாவது, ஒரு குடும்பத்தில் நாம் பிறந்திருக்கும் போது, நாம் எப்போதும் அந்தக் குடும்பத்தில் தான் இருப்போம். நாம் அந்தக் குடும்பத்தில் பிறக்காதவர்கள் போல இருக்க முடியாது. நாம் நம் குடும்பத்திலுள்ள உண்மையுள்ள, விசுவாசமுள்ள அங்கத்தினராக இருந்து நன்மைகளைப் பெற்றுக்கொள்ளலாம் அல்லது நம் பங்கை அல்லது சுதந்திரத்தை பறிகொடுக்கத்தக்கதான வாழ்க்கையையும் வாழலாம், ஆனால், நம் பெற்றோர்களுக்கு நாம் எப்போதும் மகனாகவோ அல்லது மகளாகவோ தான் இருப்போம்.

ஆவிக்குரிய பிரகாரமாகவும் இது உண்மையாயிருக்கிறது, நாம் கிறிஸ்துவின் சபைக்குள்ளோ அல்லது அவருடைய குடும்பத்திற்குள்ளோ வந்துவிட்டால், நாம் எப்போதுமே கிறிஸ்துவுக்குள் இருப்போம். அந்த ஒரே குடும்பத்தில் அங்கத்தினர்களாகவே இருப்போம்.

ஆனால், நாம் ஒன்றில் விசுவாச முள்ளவர்களாக இருப்போம் அல்லது விசுவாசமில்லாதவர்களாக இருப்போம். தேவனுடைய பிள்ளை யாக நாம் மரணபரியந்தம் அவருக்கு உண்மையுள்ளவர்களாக இருக்கும் போது, கர்த்தர் நமக்கு ஜீவக் கிரீடத் தைத் தருவதாக வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் (வெளி. 2:10)

நாம் உண்மையில்லாதவர் களாக இருந்தால், இவ்வுலகில் உள்ளூர் சபை என்கிற நம் குடும்பத் தால் ஐக்கியத்திலிருந்து விலக்கி வைக்கப்படலாம். நாம் மனந் திரும் பாமல் போனால் நித்தியமாக இழந் தும் போகலாம் (மத். 25:46). பாவங் களிலிருந்து மனந்திரும்பி, கர்த்தரி டத்தில் திரும்பினால் நம் பாவங்கள் மன்னிக்கப்பட்டு கர்த்தருடையவர் களுக்கு வரும் நன்மைகளை நாம் மறுபடியும் பெற்றுக் கொள்ள முடியும். இந்த ஆவிக்குரிய குடும்ப உறவை சரியாகப் புரிந்து கொள்வதற்கு லூக்கா 15 ல் இடம் பெற்றுள்ள அந்த ஊதாரித்தனமான அல்லது கெட்ட குமாரனுடைய சம்பவத்தை வாசியுங்கள்.

நீங்கள் கிறிஸ்துவுக்குள் இருக்கிறீர்களா? நீங்கள் அவரு டைய சபையின் அங்கத்தினர்களாக இருக்கிறீர்களா? நீங்கள் உண்மை யுள்ள தேவனுடைய பிள்ளையாக இருக்கிறீர்களா? இல்லையென் றால், நீங்கள் இழந்து போன நிலை யில் இருக்கிறீர்கள் என்பது சோக மான உண்மையாயிருக்கிறது. கால தாமதமாவதற்கு முன்பாக அவரிடத் தில் வருவதற்கு கர்த்தருடைய அழைப்பை தயவு செய்து ஏற்றுக் கொள்ளுங்கள்.

## தேவை ஒரு நிமிடமே...

...நின்று நீங்கள் காண்கிற புதியவரிடம் ஹலோ என்று சொல்லி சில வார்த்தைகளைப் பேசுவதற்கு.

... ஈர்ப்பதற்கு அந்நியராக உணரும் ஒருவரோடு பேச்சை ஆரம்பிப்பதற்கு

.... செய்வதற்கு நட்பை உண்டாக்கும் அறிமுகம் செய்வதற்கு

... எழுதுவதற்கு வியாதியாயிருக்கிற ஒருவருக்கு அல்லது குடும்ப அங்கத்தினரை இழந்து போன ஒருவருக்கு ஆறுதல் கடிதம் எழுத

... உண்மையாகவே கவனிக்க ஒரு குழந்தை மழலை மொழியில் உங்களிடம் எதைச் சொல்ல முயற்சிக்கிறதோ அதைக் கவனிக்க

... எடுக்க பிரச்சினைகளை மறந்து மற்றவர்களைப் பற்றி நமக்குத் தெரிந்த நல்ல காரியங்களைப் பரப்ப

... தூக்கி நிறுத்த தாழ்வு மனப்பான்மை உடைய ஒருவரையோ அல்லது கவலை யாகவோ அல்லது சோர்வாகவோ காணப்படுகிற ஒருவரையோ தூக்கி நிறுத்த

நிர்வாக ஆசிரியர் உரை

# நான் ஒரு பரிசேயனா

## AM I A PHARISEE?

### *E.Z.S. Rajanayagam*

பரிசேயர்கள் பற்றி நமக்குப் பரிச்சயம் இல்லாவிட்டாலும், அடிக்கடி அவர்களைப் பற்றிக் கேட்பதால் ஏதோ நமக்குப் பழக்கமானவர்களாகவே படுவர். இயேசு கிறிஸ்துவின் நாட்களில், சமுதாயத்தின் மேல்தட்டில் அமர்ந்து, செருக்கோடு வாழ்க்கை நடத்தியவர்கள்தான் இந்தப் பரிசேயர்கள். யூதமார்க்கத்தில் பிரதானமாக இருந்த நான்கு பிரிவுகளில் இவர்கள் முதன்மையானவர்கள். வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகள் போல் காட்சி தந்து, பக்தியின் வேடம் தரித்து, மோசேயின் பிரமாணங்களைத் தங்கள் வாயிலும், நீதியைத் தங்கள் கரங்களிலும் ஏந்திக் கொண்டு, எல்லாவித பெருமையோடும் சமுதாயத்தில் வலம் வந்தனர். வெளிப்புறமான ஆசாரங்களைக் கடைபிடிப்பதிலும், பாரமான பாரம்பரியங்களை முக்கியப்படுத்திப் பேசுவதிலும் இவர்களுக்கு இணை இவர்களே.

இவர்கள் யாரென்பதை இன்னும் சரியாகப் புரிந்துகொள்ள பழைய, புதிய ஏற்பாடுகளுக்கிடையில் புகுந்து பார்ப்பது அவசியம். ஏனெனில், புதிய ஏற்பாட்டின் ஆரம்ப நாட்களில் மிகப் பிரபலமாகத் திரியும் இவர்களைப் பற்றி, பழைய ஏற்பாடு ஒன்றுமே பேசுவதில்லை.

பழைய ஏற்பாட்டில், "*ஜெப ஆலயத்தை*"க் காண முடியாது. ஆனால், புதிய ஏற்பாட்டில் அது மிகப் பிரபல்யம். இயேசுவின் நாட்களிலும், அப்போஸ்தலர்களின் காலத்திலும் மூலைக்கு மூலை இருந்தது. முதல் நூற்றாண்டின் மத்திய கட்டத்தில், எருசலேமில் மாத்திரம் சுமார் 350 ஜெப ஆலயங்கள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது.

இவ்வளவு தீவிரமாக இவை பரவியதற்கு ஒரு முக்கியக் காரணம் உண்டு. "*ஜெப ஆலயங்களை*" எசேக்கியேல் தீர்க்கனால் உரைக்கப்பட்ட தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக யூதர்கள் நம்பினர். அவன் சொல்வதைக் கேளுங்கள். "*ஆகையால், நான் அவர்களைத் தூரமாகப் புறஜாதிகளுக்குள்ளே துரத்தியிருந்தாலும், நான் அவர்களை தேசங்களிலே சிதறடித்திருந்தாலும், நான் அவர்கள் போன தேசங்களில் அவர்களுக்குக் கொஞ்ச காலத்துக்குப் பரிசுத்த ஸ்தலமாக இருப்பேன் என்று கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறார் என்று சொல்*" (எசே. 11:16) என்றுள்ளது. ஆகவே, எருசலேம் ஆலயத்தில் போய் தொழ முடியவில்லை என்ற குறையை, ஜெப ஆலயங்களை ஏற்படுத்துவதின் மூலம் நிவர்த்தி செய்தனர்.

மீண்டும் ஒரு நிலையில் யூதர்கள் பலவாறாகச் சிதறடிக்கப்பட்டு, பலருடைய ஆட்சியின் கீழாக கொடுமைப்படுத்தப்பட்டனர். பக்திப்

பரவசத்தில் மூழ்கியிருந்த அந்நாட்களில், சரீர வாழ்வுக்கெதிரான அடக்கு முறைகளைப் பற்றி அவர்கள் கொஞ்சமும் அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால், அவர்களின் மத நம்பிக்கைகளும், தேவ பக்தியும் கேலிக்கிடமாக் கப்பட்டபோது வெகுண்டு எழுந்தனர்.

ஆம், ஒரு கட்டத்தில் (கி.மு. 168) நான்காம் அந்தியோகுஸ் எபிப்பேனஸ் என்ற அரசன், யூதர்களால் அருவருப்பாகக் கருதப்பட்ட மிருகமாகிய பன்றியை பலி செலுத்தி, பலிபீடத்தைக் கறைப்படுத்தி அதின் இரத்தத்தை, தேவாலயத்துச் சுவர்களில் தெளித்து, விருத்த சேதனத்தைத் தடை செய்து, யூதர்களை அடிமைகளாய் விற்றான். அது மாத்திரமல்ல, யூப்பித்தரின் உருவங்களை உண்டாக்கி தேவாலயத்தை விக்கிரகங்களால் நிறைத்தான். இது போதாதென்று, தன்னால் கண்டுபிடிக்கப்பட்ட பழைய ஏற்பாட்டுப் பிரதி களையெல்லாம் தீயிட்டுக் கொளுத்தினான். இப்படி நிலைமை மிகவும் அத்துமீறிப் போய்க் கொண்டிருந்தது.

இந்நாட்களில் தான் மக்கபேயர்கள் என்பவர்கள் மத சுதந்திரத்திற் காகவும், தாய் நாட்டு விடுதலைக்காகவும் போர்க்கொடி தூக்கினர். ஆசாரிய னாகிய மத்தத்தியா என்பவன் தலைமையில் இப்போராட்டம் நடந்தது. அவனுடைய ஐந்து மக்கள் இதில் முக்கிய பங்கு வகித்தனர். இறுதியில், அவனுடைய மூத்த குமாரனாகிய யூதாஸ் என்பவனின் தலைமையில் எருசலேமில் புதிய ஆட்சி மலர்ந்தது. (கி.மு. 165). அவனுடைய நாட்களில் தான் தீட்டுப்பட்ட தேவாலயம் பரிசுத்தமாக்கப்பட்டது.

எங்கேயோ போய் விட்டோம் என்று நினைக்கிறீர்களா? இல்லை. பரிசேயர்களின் பெருமைக்குண்டான காரியங்களைச் சொல்லவே வருகிறேன். ஆம், இந்தப் பரிசேயர்கள் யூத மத நம்பிக்கைகளுக்கு இழுக்கு வந்தபோது எதிர்த்துப்போராடி, உரிமையை நிலைநாட்டி, மத சுதந்திரத்தை மீட்டுக் கொடுத்த மக்கபேயர்களின் வாரிசு என்று தங்களைப் பெருமையாகக் கூறி கொள்வர். ஆகவே தான், தங்களைப் பிரிக்கப்பட்டவர்கள் என்று கூறி, யாரோடும் ஒட்டாமல் தனித்துவம் காத்தனர். இவர்கள் நெஞ்சு நிமிர்த்தி நடந்ததற்கு இதுவும் ஒரு காரணம். இதில், என்ன தவறு என்கிறீர்களா?.

நான் ஒன்றும் அவர்களைக் குறை சொல்லவில்லை. ஆனால், என் ஆண்டவர் அவர்களைக் கடுமையாகக் குற்றம் சாட்டுகிறாரே, நான் என்ன செய்யட்டும்? அவர்கள் நினைப்பும், வாழ்க்கையும் சரியில்லையென்று அவர் சொல்லும் போது, நான் அவர்களுக்காக வக்காலத்து வாங்க முடியுமா? ஒன்று செய்வோம். அவர்களின் வாழ்க்கையை அலசிப் பார்த்து, நம்முடைய வாழ்க்கையோடு ஒப்பிட்டு, சில பாடங்கள் கற்று, நம் வாழ்க்கையை சீர்படுத்திக் கொள்ளலாம். அது நியாயமானதாக இருக்கும்.

## I பரிசேயர், மனிதர் காண வேண்டுமென்று செய்தார்கள்

பரிசேயர்களைப் பற்றியதான தமது பல கருத்துக்களை, தம் ஊழியத்தின் இறுதி நாட்களில் இயேசு வெளிப்படுத்தினார். சொல்லப் போனால், அவர்களைத் திட்டியே ஒரு அதிகாரம் தீர்ந்து விட்டது (மத். 23 அதி). இவ்வதிகாரத்தில், இயேசு பரிசேயர்களை ஓட ஓட விரட்டியுள்ளார்.

அதில், அவர்களைப் பற்றி இவ்விதமாகக் குறிப்பிடுகிறார். " *தங்கள் கிரியைகளை மனுஷர் காணவேண்டுமென்று செய்கிறார்கள்....* " (23:5) என்று. ஒருவன் செய்கின்ற எல்லாவற்றையும் நான்கு சுவற்றுக்குள்ளாகச் செய்ய வேண்டுமென்று இங்கே இயேசு சொல்லவில்லை. மாறாக, எதைச் செய்தாலும், குறிப்பாக பக்தி முயற்சிக்குண்டான காரியங்கள் பொறுத்த மட்டில், அவை மனிதர்கள் பார்க்க வேண்டுமென்பதற்காகவே செய்யக் கூடாது என்றே வலியுறுத்துகிறார்.

ஆனால், இந்த சுய நீதிக்காரர்களோ, இயேசுவின் போதனைகளுக்கு நேர் எதிர். ஆம், ஜெபம் என்றால் நீண்ட ஜெபம், (வ.14) வஸ்திரம் என்றால் அது தொங்கலானது (வ.5) காப்பு நாடா என்றால், அது அகலமானது (வ.5). ஒரு கூட்டம் என்று சொன்னால், முதன்மையான இடம் (வ.6) காணிக்கை என்றால் தசமபாகம் (வ.23) என்று எல்லாமே மனிதர் மத்தியில் மதிப்பைப் பெறவேசெய்தனர். அவர்கள் செய்த எதிலுமே நீதி வெளிப்படவில்லை. மாறாக படோடாபம் தான் உயர்ந்து நின்றது.

சமீபத்தில் எங்கள் ஊருக்கு, அற்புதங்கள் நடத்தி அருளுரை ஆற்ற ஒரு சாது வந்திருந்தார். தலையிலே நீண்ட முடி, முகத்திலே தாடி, உடை காவி, ஜெபம் கண்ணீருடன் கூடியது, அற்புதங்களுக்கு அமர்க்களமான விளம்பரம், கூட்டம் திரண்டு வந்தது. ஆனால், அவரது பேச்சில் அனர்த்தமான அர்த்தம் தரும் வார்த்தைகள் தாராளமாக வந்தது.

இவரிடம் மாத்திரமல்ல, இன்று அற்புதங்களைச் செய்கிறேன், பிசாசு களைத் துரத்துகிறேன் என்று விளம்பரப்படுத்தி, ஆண்டவர் பெயரால், முதலீடில்லா வியாபாரத்தை அருமையாக நடத்திக் கொண்டு வரும் ஆன்மீக வியாபாரிகள் ஒவ்வொருவரிடமும், இதே போல அல்லது வேறு வகையைச் சேர்ந்த பித்தலாட்டங்கள் குவிந்து கிடக்கிறது. உண்மை நிலை தெரியாமல் ஜனக்கூட்டம் அவர்கள் பின்னால் அலைமோதுகிறது.

நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளை அள்ளி வீசி, இழிவான ஆசை களுக்குத் தீனி போடும் விளம்பரங்களைக் காட்டி, ஜனங்களை ஏமாற்றிய போலி நிதி நிறுவனங்களைக் கட்டுப்படுத்தவாகிலும் அரசாங்கம் ஒரு சட்டம் கொண்டு வந்துள்ளது. ஆனால், இந்த மத மோசக் கும்பலை எப்படிக் கட்டுப் படுத்துவதென்றே தெரியவில்லை. பொதுவாகவே, நம் மக்களுக்கு நஷ்டம் கண்ணுக்குத் தெரிந்தால் தான் அல்லது அதை அனுபவித்தால் தான் உணர்வே வருகிறது. ஆகவே, உடனடியாக விளைவு தெரியாததால், ஆவிக்குரிய நஷ்டம் பற்றி யாரும் பெரிதாகக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. ஆனால், ஒன்றை நினைவிலே வைத்துக் கொள்ளுங்கள். ஒரு நாளில் (அப். 17.30) தேவன் உண்மையை வெளிச்சத்துக்குக் கொண்டு வரும்போது, "*ஏமாந்தோர் சங்கம்* " என்று ஒன்றை அமைத்து நாம் போராட முடியாது. மறு வாழ்வுக்கு வழி இல்லை. நித்திய நரகத்திலே போய்ச் சேர வேண்டியது தான்.

இப்படி எல்லாவற்றிலும் மாய்மாலம் மலிந்து கிடப்பதைப் பார்க்கும் பொழுது, நமக்குப் பரிசேயர்களின் நாட்கள் தான் நினைவுக்கு வருகிறது. அவர்கள் தான் விளம்பரத்திற்கென்றே காரியமாற்றினர். இன்று, பரிசேயர்கள் இல்லாவிட்டாலும் அவர்களின் வாரிசுகள் நிரம்ப உண்டு. அதே பாணி. உதாரணமாக, உபவாசத்தைக் குறித்து, இயேசுவின் போதனை என்ன?

மலைப்பிரசங்கத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டுள்ளது. (மத். 6:16-18) ஆனால் இன்று எப்படி? "*வால்போஸ்ட்* " அடித்து விளம்பரம் செய்து, உபவாசக் கூட்டம் நடத்துகிறார்கள். அதுவும் எப்படி காலை 9.00 முதல் மாலை 3.00 மணி வரை. இதிலே என்ன உபவாசம் இருக்கிறதென்று தெரியவில்லை. நான் உபவாசத்திற்கு எதிரி அல்ல. புதிய பிரமாணத்தில் அது கட்டளையாகக் கொடுக்கப்படவில்லை. ஆனால், தடை செய்யப்படவுமில்லை. உபவாசமிருந்தால், அதன் உண்மையையும், மேன்மையையும் உணர்ந்து வசனங்களின் அடிப்படையில் இருக்க வேண்டும். விளம்பரம் கூடாது. ஆகவே, பரிசேயர்கள் போல மனுஷர் காணவேண்டுமென்பதற்காக எதையும் செய்யாமல், தேவன் பார்க்கிறார் என்ற எண்ணத்தோடு எல்லாவற்றையும் செய்வோம்.

## II பரிசேயர், பாரம்பரியத்திற்கு முக்கியத்துவம் கொடுத்தனர்

இன்றைக்கு மெய் கிறிஸ்தவம் தழைத்து ஓங்கத் தடையாக, பல காரணங்கள் இருக்கிறது. அவைகளுள் முதலிடம் பெறத் தகுதியாக இருப்பது இந்தப் பாரம்பரியம் தான்.

"*பாரம்பரியம்* " என்ற வார்த்தையும் பழைய பிரமாணத்தில் இல்லாத ஒன்றே. இரண்டு ஏற்பாடுகளுக்கிடையில் தான் இந்தப் பாரம்பரியப் பழக்கங்கள் ஆரம்பமாகியிருக்கிறது. இவைகள் பெரும்பாலும் யூத "*ரபிகளால்*" உருவாக்கப்பட்டு, மோசேயின் பிரமாணங்களுக்கு இணையானவைகள் என்ற அந்தஸ்தோடு அவைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. மோசேயினால் கொடுக்கப்பட்டவைகள் " வரிவேதம் " என்றும், ரபிகளால் போதிக்கப்பட்டவை " *ஒலிவேதம்* " என்றும் கூட சொல்லிக் கொண்டனர்.

இயேசு " *உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கி வருகிறீர்கள்* " (மத். 15:6) எனச் சாடினார். தேவனுடைய வார்த்தைகளடங்கிய மோசேயின் பிரமாணத்தை ஓரமாக ஒதுக்கிவிட்டு, " *மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள்* " (15:9) என்று அங்கலாய்த்தார்.

இயேசுவின் இக்கருத்தினடிப்படையில் பார்த்தால், மற்ற பாவங்களைக் காட்டிலும், பாரம்பரியம் என்ற பாவம் தான் பரிசேயரை தேவனிடமிருந்து பிரித்துள்ளது. இவர்களிடம் பக்திக்குப் பஞ்சமில்லை. ஆனால், மெய் பக்தி மருந்துக்குக் கூட இல்லை. பிரச்சனை இதுதான். பாரம்பரிய பக்தி மெய் பக்தியை இருட்டடிப்பு செய்து விட்டது. மார்க்க கடமைகளை நிறைவேற்றுவதில் இவர்களுக்குள்ள ஆர்வத்தைப் பார்த்தால், இவர்களை ஆன்மீகவாதி அல்ல என்று யாராலும் சொல்ல முடியாது. ஆனால், அறிவுள்ள ஆன்மீகவாதிகள் என்று இவர்களை அழைக்க முடியுமா? என்பதே கேள்வி. தேவனுடைய பிரமாணங்களைப் பின்னுக்குத் தள்ளும் ஒருவன் எப்படி அறிவுள்ள ஆன்மீகவாதியாக இருக்க முடியும்? நீங்களே சொல்லுங்கள்.

பாரம்பரியத்திற்குப் பாடை கட்டாத பரிசேயனை ஆண்டவர் என்ன பாடாய்ப்படுத்தினார் என்று இப்பொழுது புரிகிறதா? இவர்கள் மனிதனின் வாய்மொழியாக வந்த வார்த்தைகளைக் கொண்டு, பரிசுத்த தேவனின் கட்டளைகளை அவமதித்தனர். ஏசாயா தீர்க்கனைக் கொண்டு, தேவன் சொல்லும் ஒரு வசனத்தைக் கவனியுங்கள். " .....*ஆனாலும், சிறுமைப்பட்டு,*

*ஆவியில் நொறுங்குண்டு என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்* " (ஏசா. 66:2) என்று தேவன் சொல்லும்போது. நாம் எனக்குப் பாரம்பரியம் தான் முக்கியம், தேவ வசனம் எனக்கு இரண்டாம் பட்சம் தான் என்று சொல்வோமானால், நம்மை அவர் நோக்கிப் பார்ப்பாரா? நீங்களே சொல்லுங்கள், " *மாட்டார்* " என்றால், பின் ஏன் நாம் கிறிஸ்தவர்களாக ஜீவிக்க வேண்டும்? நம்மை நோக்கிப் பார்க்காத ஒருவரை நாம் ஏன் நாளும் துதிக்க வேண்டும்?.

வேத வசனங்களின் ஆதாரம் இல்லாத அனைத்துமே பாரம்பரியங்கள் தான். திரும்பத் திரும்பச் சொல்வதில் எனக்கு வெட்கமில்லை. உலகம் முழுவதும் இந்தப் பாரம்பரியக் கொள்கைகளை ஏற்றிருந்தாலும் அதைக் குறித்துக் கவலையில்லை. அன்று பாரம்பரியத்தின் படி செய்தவர்கள் சமுதாயத்திற்குப் பகட்டாகவே காட்சி தந்தார்கள். இன்றும், நிலைமை அப்படியே தான் உள்ளது. பரவாயில்லை.

இந்த அருமையான சந்தர்ப்பத்தில் ஒரு சம்பவத்தை உங்களுக்கு நினைவுபடுத்துகிறேன். ஒரு சமயம், பேதுருவும், மற்ற அப்போஸ்தலரும், பாரம்பரியத்தில் நாட்டம் கொண்டு பக்தி வேடமணிந்து திரிந்த பரிசேயர் களும், சதுசேயர்களும் நிறைந்த ஆலோசனைச் சங்கத்திற்கு முன்பாக நிறுத்தப்பட்டு விசாரிக்கப்பட்டனர். மெய் பக்திமானாகிய பேருதுவின் பேச்சால் மூர்க்கமடைந்த இந்த அறிவில்லாத ஆன்மீகவாதிகள் பேதுரு வையும், மற்ற அப்போஸ்தலர்களையும் கொலை செய்ய ஆலோசனை பண்ணினார்கள். இவர்களின் புத்தியில்லாத இவ்வாலோசனைக்கு உடன் படாத கனம் பெற்ற நியாய சாஸ்திரியாகிய கமாலியேல், ஆலோசனைச் சங்கத்தாருக்கு சில சரித்திர சம்பவங்களை எடுத்துக்காட்டி, ஓர் எச்சரிப்புச் செய்தார். அந்த எச்சரிப்பு இன்றைக்கு நமக்கு அப்படியே நூற்றுக்கு நூறு பொருந்துகிறதாக உள்ளது. எச்சரிப்பைப் பாருங்கள். " *....தேவனோடு போர் செய்கிறவர்களாய்க் காணப்படாத படிக்குப் பாருங்கள்* ". (அப். 5:29-39).

பரிசேயர்கள் பற்றிப் பார்த்த இந்த இரண்டு காரியங்களையும் நம்முடைய வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்க்கும்படி அன்பாய் வேண்டுகி றேன். மனிதர்கள் பார்வையில் மதிப்பைப் பெற நாம் ஒன்றும் செய்ய வேண்டாம். அதற்குப் பலன் இல்லை. அடுத்து, பாரம்பரிய காரியங்கள் நம்மிடம் ஏதாகிலும் இருந்தால், என்ன விலை கொடுக்க நேர்ந்தாலும் புறம்பே தள்ளுவோம். இது சாதாரண வேலையல்ல. ஒருவேளை, குடும்பத்திலும், சமுதாயத்திலும் நாம் தனிமரமாய் நிற்க வேண்டி வரலாம். கவலைப்படாதீர்கள். இக்கட்டான நேரத்தில், அப்போஸ்தலன் பவுல், பிலிப்பியருக்கு எழுதின வசனத்தை நினைவில் வைத்துக் கொண்டு செயல் படுங்கள். "*என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு* " (பிலி. 4:13).

பரலோகத்தின் தேவன் தாமே உங்களோடிருந்து உங்களை வழி நடத்துவாராக!

# உள்ளடக்கம்


நிறுவன ஆசிரியர் உரை ..... 1

நிர்வாக ஆசிரியர் உரை ..... 5

சிறப்பு ஆசிரியர் உரை ..... 12


## தேவன்


இயேசுவை ஆராதித்தல் ..... 15

நிபந்தனையற்ற அன்பின் வரம்புகள் ..... 18


## சாட்சியங்கள்


ஆதியாகமும், பரிணாமக் கொள்கையும் ..... 21

சிருஷ்டிப்பு பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது? ..... 23


## தேவனுடைய வார்த்தை


மாபெரும் ஆலோசகர் ..... 25

நீங்களும், வேதாகமமும் ..... 27


## வாழ்வதற்கான உபதேசங்கள்


சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை நாங்கள் ... ..... 29

பேதுருவின் விசுவாசம் ..... 32

எருசலேமுக்கு வெகுதூரமா? ..... 35

முழுமையான சத்தியம் ..... 38

பரிசேயர்களிடமிருந்து நாம் எதை கற்றுக்கொள்ள முடியும்? ..... 40

கழிந்து கொள்ளுதல் ..... 43


## சபை


தேவனுடைய குடும்பம் ..... 45

நான் சுதந்திரமாயிருக்கிறேன் ..... 49

இயேசுவின் இரத்தம் ..... 51


## இரட்சிப்பு


மேல் நோக்கியா அல்லது கீழ்நோக்கியா? ..... 54

தமஸ்குவுக்குப் போகும் பாதையில் சவுல் இரட்சிக்கப்பட்டாரா? ..... 57

மனமாற்றம் ..... 60

மன்னிப்பு ..... 62

யார் கிறிஸ்தவன்? ..... 64

சோக முடிவு ..... 67

ஊக்கமான ஜெபம் ..... 69

## செயலில் கிறிஸ்தவம்

மாபெரும் ஊழியம் .....72

நாங்கள் என்ன செய்ய வேண்டும்? .....74

நெருக்கடி .....79

வெளிப்படையாக்கு .....81

## சபை வளர்ச்சி

எனக்குப் பொறுக்கூடாமற் போயிற்று.....83

## அனுதின கிறிஸ்தவ வாழ்க்கை

மேலானவைகளைத் தேடுங்கள் .....89

ஜீவன் என்னும் ஈவு .....91

இன்று நேற்றைய தினத்தின் நாளையாக இருக்கும் ..... 93

முக்கியமற்றவை, முக்கியமானவை, மிக முக்கியமானவை .....95

பாவத்தின் அதிகப்படியான விலை .....97

உங்கள் வேலையோடு நிறுத்திக் கொள்ளாதீர்கள் ..... 99

கர்த்தர் வெறுக்கும் ஏழு காரியங்கள்.....101

## கிறிஸ்தவ இல்லம்

இல்லம் .....104

கணவன்களும், மனைவிகளும் .....106

## வேதாகமக் கதாப்பாத்திரங்கள்

நிலைமாறும் யோசபாத் ....108

பவுலின் கடைசி நாட்கள் ····110

சிறப்பு ஆசிரியர் உரை

# ஊழியக்காரர்கள்—யார் அவர்கள்?

## Ministers - Who are they?

### *Byron Nichols*

முன்பெல்லாம் "பிரசங்கியார்கள்" அல்லது "சுவிசேஷப் பிரசங்கியார்கள் " என்று அடையாளங்காணப்பட்டவர்கள், இப்போதெல்லாம ஊழியக்காரர்" என்ற பதத்தில் பொதுவாக அடையாளப்படுத்தப்படுவதைக் கவனித்திருக்கிறீர்களா? இதைச் செய்தித்தாளிலும், சகோதரத்துவ வெளியீடுகளிலும், தொலைபேசி கையேடுகளிலும், சபை செய்தி அறிக்கையிலும், அலுவல் அட்டையிலும், முகவுரைகளிலும், உரையாடலிலும், பெரும்பாலான விளம்பரங்களிலும் நாம் கவனிக்க முடியும். சிலர், " இதில் ஏதாவது பிரச்சனை இருக்கிறதா? " என்று கேட்கலாம். நான் அப்படி இருக்கலாம் என்று நம்புகிறேன்.

புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்டிருக்கிற கிரேக்க வார்த்தைகள் எல்லாவற்றையும், அதை பெயர்ச் சொல்லாகவோ, வினைச் சொல்லாகவோ வைத்து, விவரமாக "ஊழியக்காரர்" என்றால் என்ன? என்று ஆராய வேண்டிய அவசியமில்லை. அந்த கிரேக்கப் பதங்கள் அனைத்தும் ஒரு வேலைக்காரன், ஓர் உதவிக்காரன் அல்லது இப்படிப்பட்டவர்களால் செயல்படுத்தப்படும் செயலைக் குறிக்கிறது என்பதே இதற்குப் போதுமானது. வேறுவிதமாகச் சொன்னால், புதிய ஏற்பாட்டு "ஊழியக்காரர்" ஏதோ ஒரு வகையான சேவையில் தங்களை ஈடுபடுத்திக்கொள்கிறார்கள். புதிய ஏற்பாட்டை எப்போதாவது படித்தால் கூட, அது ஒவ்வொரு கிறிஸ்தவனும், இயேசு கிறிஸ்துவின் ஒவ்வொரு சீடனும் ஊழியக்காரனாக, வேலைக்காரனாக இருக்கும்படி உத்தேசப்பட்டிருக்கிறார்கள் என்கிற உண்மையை எடுத்துரைக்கிறது. நேரக்குறைவின் காரணமாக ரோமர் 12 மற்றும் 1 கொரி. 12 ஆம் அதிகாரங்களை மாத்திரம் உங்களுக்குக் குறிப்பிடுகிறேன். இந்த மாபெரும் அதிகாரங்கள், முழு சபையானது செயல்படும்படியாக, சேவை செய்யும்படியாக, வேலை செய்யும்படியாக அல்லது ஊழியம் செய்யும்படியாக வித்தியாசமான அவயவங்களால் உண்டாக்கப்பட்டிருக்கிறது என்பதை முற்றிலும் தெளிவாகக் காட்டுகிறது. ஒவ்வொரு அவயமும் வித்தியாசமானது. ஆனால், ஒவ்வொன்றிற்கும் நிறைவேற்றுவதற்கென செயல்பாடுகள் உண்டு. தனக்கு கொடுக்கப்பட்ட வேலையின் பகுதியைச் செய்வதன் மூலம் சரீரமாகிய சபையின் ஒவ்வொரு அங்கத்தினரும் ஓர் ஊழியக்காரராக ஊழியம் செய்கிறார்கள்.

இன்று பல வேளைகளில், பிரசங்கியார் ஒரு குறிப்பிட்ட சபையின் ஊழியக்காரராகத்தான் அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறார். ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஊழியம் செய்கிறவர்களாக இருந்தால், பிரசங்கியார் மாத்திரம் தான் பணிபுரிகிற சபையின் ஊழியக்காரராக மட்டும் இருப்ப தில்லை. அப்படி இல்லையென்றால், பிராந்திய சபையில் உள்ள மற்றவர்கள் கிறிஸ்து அவர்களிடத்தில் எதை எதிர்பார்க்கிறாரோ அதைச் செய்யத் தவறு கிறார்கள் என்று தான் அர்த்தம். இப்பொருளினடிப்படையில் எவ்விடத்திலும் ஒரு பிராந்திய சபை, ஒரே ஒரு ஊழியக்காரரை மாத்திரம் கொண்டிருப்ப தற்கான வாய்ப்புகள் மிகக் குறைவே. ஒருவேளை, அப்படிப்பட்ட ஒரு சபை கண்டுபிடிக்கப்பட்டால், அங்கே பிரசங்கியார் மாத்திரம் ஊழியராக இல்லாமல்; வேத வசனங்களின்படி மற்ற பலரும் கிறிஸ்துவின் ஊழியக் காரர்களாக இருக்கவே வாய்ப்புண்டு.

"ஊழியக்காரர்" "ஊழியம்" மற்றும் "ஊழியம்" செய்தல் போன்ற பதங்கள் பல்வேறுப்பட்ட வழிகளில் புதிய ஏற்பாட்டில் பயன்படுத்தப்படு கின்றன. பிரசங்கியார்களை ஊழியக்காரர்கள் என்று அழைக்கின்ற வசனங் கள் பல உள்ளன என்பது உண்மைதான். ஆனால், பிரசங்கிக்காதவர்கள் கூட துல்லியமாக மிகப் பொருத்தமாக ஊழியக்காரர்களாக அடையாளப் படுத்தப்படுகிறார்கள். பலதரப்பட்ட கிறிஸ்தவர்கள் சில வேளைகளில் ஊழியக்காரர்கள் என்று அழைக்கப்படுவது கவனிக்கத்தக்கது. (எபிரெயர் 6:10)ல் காரியம் அப்படியாகத்தான் இருந்தது. அங்கே எபிரெய எழுத்தாளர் பொதுவாக பலதரப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு எழுதுகிறார், வேறு சிலருக்கு அவர்கள் ஊழியம் செய்தததையும் அங்கே குறிப்பிடுகிறார். பேதுருவும் பலதரப்பட்ட பொதுவான கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது, ஒருவருக் கொருவர் ஊழியம் செய்வதைக் குறிப்பிடுகிறார் (1 பேதுரு 4:10). பவுல் (ரோமர் 15:27)ல் மக்கதோனியாவிலும், அகாயாவிலும் இருந்த புறஜாதிக் கிறிஸ்த வர்கள் எருசலேமிலிருந்த யூதக்கிறிஸ்தவர்களுக்கு பொருளாதார உதவி களைச் செய்ததை ஊழியம் செய்ததாகச் சுட்டிக்காட்டுகிறார்.

பெண்கள் ஊழியக்காரிகளாக தெளிவாக அழைக்கப்பட்டிருக் கிறார்கள். இதற்கு சிறந்த முன்னுதாரணம் பேதுருவின் மாமியார் (மத். 8:15); மத். 7:55ல் பார்க்கும்போது, அநேக ஊழியக்காரிகள் இருந்திருக்கிறார்கள்; லூக்கா 8:3ல் அநேக ஊழியக்காரிகள் இருந்திருப்பதை நாம் காண முடியும்.

மக்கள் தாங்கள் ஊழியக்காரர்களாக இருப்பதை உணராமல் இருந்தால் கூட, அவர்களால் ஊழியக்காரர்களாக இருக்க முடியும் என்பதை கண்டறிவது கவனிக்கத்தக்கது. மேலான அதிகாரத்தில் இருப்பவர்கள் உண்மையாகவே தேவனுடைய ஊழியக்காரர்களாக இருக்கிறார்கள் (ரோ. 13:1-7). சிலர் அந்த உண்மையை அறியாதிருக்கிறார்கள் என்பது மிகவும் வெளிப்படையாகவே தெரிகிறது, இருந்தபோதிலும், அது உண்மையாயிருக் கிறது.

சில விதிவிலக்குகள் தவிர, புதிய ஏற்பாடு, ஊழியக்காரர்கள் பற்றியும், ஊழியம் செய்வது பற்றியும் விரிவாகப் பேசுகிறது, இது எல்லா

கிறிஸ்தவர்களையும் உள்ளடக்குகிறது; பிரதானமாக, தேவனுடைய வார்த்தையைப் பிரசங்கிப்பவர்களை மட்டும் குறிக்காது. ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஊழியம் செய்பவராக இருக்க வேண்டும். ஒவ்வொருவரும் தேவனால் அங்கீகரிக்கப் பட்டிருக்கிற, உத்தேசிக்கப்பட்டிருக்கிற வழியில், ஆண்களும், பெண்களும், வாலிபரும், வயதானவர்களும், திறமைமிக்கவர் களும், திறமை இல்லாதவர்களும், ஊழியம் செய்ய வேண்டும். ஊழியக்காரர் என்கிற வார்த்தையை வழக்கமான முறையில் பார்த்தால், அதில் தவறு ஏதும் இல்லை. ஆனால், ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவின் ஊழியக்காரனாக இருக்க வேண்டும்.

ஒரு பிரசங்கியாரை ஊழியக்காரர் என்று குறிப்பிடுவது வேதாகமத்தின் அடிப்படையில் தவறு அல்ல. ஏனென்றால், அவர் அப்படியாகத்தான் இருக்கிறார். ஆனால், வேத வசனங்களின் உபதேசப்படியான கிறிஸ்தவர்க ளெல்லாம் ஊழியக்காரர்களாக இருக்கிறபடியால், அந்தப் பதம் பொதுவாக தேவனுடைய வார்த்தைகளைப் பிரசங்கிப்பவர்களை மட்டும் கட்டுப் படுத்தாது அல்லது அது அவர்களுக்கு மட்டும் பொருந்தாது. அது மாத்திர மல்ல, அது சிறந்ததாகவும், ஞானமானதாகவும், வேதாகமத்தின் அடிப்படை யில் சரியானதாகவும் இருக்காது.

மீண்டுமாக, புதிய ஏற்பாட்டில் "ஊழியக்காரர்" என்று மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிற பல்வேறு கிரேக்கப் பதங்கள் இருப்பது உண்மைதான். சில வேளைகளில், அந்த வார்த்தைகளுக்கு சற்று வித்தியாசமான பொருள் களும் உண்டு. ஆயினும், புதிய ஏற்பாட்டில் ஊழியக்காரர் என்கிற வார்த்தை யானது ஏதோ ஒரு வகையில் தேவனுக்கு ஊழியம் செய்பவர்களைக் குறிப்ப தற்காக பயன்படுத்தப்படுவதே உண்மையாக நியாயமானதாயும், சரியானதாயும் இருக்கும். ஒவ்வொரு கிறிஸ்தவனும் கர்த்தருக்கு உண்மை யுள்ள ஊழியக்காரனாக, ஊக்கமாகச் சேவை செய்கிறவர்களாயிருப் பார்களாக!.

## கர்த்தருடைய ஊழியக்காரன்

*கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டை பண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதக சமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்க வேண்டும் (2 தீமோத். 2:24).*

# இயேசுவை ஆராதித்தல்

## Worshipping Jesus

***Ray Hawk***

" யோவான் புத்தகம் ஆரம்பிக்கும் போதே, இயேசு முன்னமே இருந்தவர் என்று கூறுகிறது. " ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது.... அந்த வார்த்தை மாம்சமாகி, நமக்குள்ளே வாசம் பண்ணினார் " என்று வாசிக்கிறோம். (யோவான் 1:1,14).

இயேசு தேவனாயிருந்தபடியால், அவர் தேவனாக ஆராதிக்கப்பட்டார். கிழக்கிலிருந்து சாஸ்திரிகள் வந்த போது " யூதருக்கு ராஜாவாகப் பிறந்திருக்கிறவர் எங்கே? கிழக்கிலே அவருடைய நட்சத்திரத்தைக் கண்டு அவரைப் பணிந்து கொள்ள வந்தோம் " என்றார்கள். (மத். 2:2) பின்பு, இயேசு இருந்த அந்த வீட்டிற்கு வந்து சேர்ந்தபோது இயேசுவைக் கண்டு, சாஷ்டாங்கமாய் விழுந்து பணிந்து கொண்டார்கள். "அவர்கள் தங்கள் பொக்கிஷங்களைத் திறந்து பொன்னையும், தூபவர்க்கத்தையும் வெள்ளைப்போளத்தையும் இயேசுவுக்குக் காணிக்கையாக வைத்தார்கள் " (மத். 2:11).

ஒருவர் இயேசுவை ஏன் தொழுது கொள்ள வேண்டும்? அவர் சோதிக்கப்பட்டபோது இயேசு சாத்தானிடம் " *உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக* " என்று சொன்னார் (மத். 4:10). இயேசு தேவன் தானா? இயேசு தேவனாக இருந்தால் நாம் அவரை ஆராதிப்பது மட்டுமல்ல அவரை ஆராதிக்க நாம் கடன்பட்டிருக்கிறோம்.

இயேசு தேவனாயிருந்தால், அவருக்கு ஏறெடுக்கப்படும் ஆராதனையை அவர் ஏற்றுக்கொள்வார். அவர் தேவனாக இல்லையென்றால், தேவனுக்கு மாத்திரம் ஏறெடுக்கப்படும்படி வைக்கப்பட்டிருக்கிற ஆராதனையை அவருக்குச் செலுத்துவது தேவதூஷணமாயிருக்கும். இன்று பலர் கிறிஸ்துவின் பெயரைத் தரித்துக் கொண்டு அவரை ஆராதிக்கத் தவறும் போது, முதல் நூற்றாண்டில் இருந்த மக்கள் எதற்காக கிறிஸ்துவை தேவனாக அடையாளங்கண்டு அவருக்கு ஆராதனையை ஏறெடுத்தார்கள்? சிலர் தங்கள் பாடல் புத்தகங்களை ஜாக்கிரதையாகப் பரிசோதித்து இயேசுவை நேரடியாக ஆராதிக்கும் விதமாக இடம் பெற்றுள்ள வார்த்தைகளை நீக்கிப் போட்டிருக்கிறார்கள்.

"முதல் நூற்றாண்டில் ஒரு குஷ்டரோகி இயேசுவினிடத்தில் வந்து அவரைப்பணிந்து கொண்டான்" (மத். 8:2). அந்தக் குஷ்டரோகி குழப்பமடையவில்லை. இவன் மாத்திரம் அப்படி பணிந்து கொள்ளவில்லை. மற்றுமொரு சூழ்நிலையில் தலைவன் ஒருவன் அப்படியாக பணிந்து கொண்டான் (மத். 9:18). உண்மையில், ஒரு முறை இயேசுவை பணிந்து கொண்டவர்கள் " மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன்" என்று சொன்னார்கள் (மத். 14:13). மற்றுமொரு சம்பவத்தில், ஒரு ஸ்திரீ வந்து ஆண்டவரே எனக்கு உதவி செய்யும் என்று அவரைப் பணிந்து கொண்டாள். வேறு சிலரும் அவரைப் பணிந்து கொண்டிருக்கிறார்கள் (மத். 18:26; 20:20).

இயேசு மரித்தோரிலிருந்து உயிரோடு எழுந்த பிறகு, சில பெண் சீஷர்களை சந்தித்தார், அவர்கள் அவரைப் பணிந்து கொண்டார்கள் (லூக்கா 24:52).

ஒருவர் எபிரெயர் புத்தகத்தை திறக்கும்போது, அது இவ்விதமாக வெளிப்படுத்துகிறது. இவர் தேவதூதரைப் பார்க்கிலும் எவ்வளவு விசேஷித்த நாமத்தைச் சுதந்தரித்துக் கொண்டாரோ, அவ்வளவு அதிகமாய் அவர்களிலும் மேன்மையுள்ளவரானார். எப்படியெனில், நீர் என்னுடைய குமாரன் இன்று நான் உம்மை ஜெநிப்பித்தேன் என்றும், நான் அவருக்குப் பிதாவாயிருப்பேன், அவர் எனக்குக் குமாரனாயிருப்பார் என்றும், அவர் தூதர்களில் யாருக்காவது எப்போதாகிலும் சொன்ன துண்டா? தேவதூதரைக் குறித்தோ, தம்முடைய தூதர்களைக் காற்றுகளாகவும், தம்முடைய ஊழியக்காரரை அக்கினி ஜுவாலைகளாகவும் செய்கிறார் என்று சொல்லியிருக்கிறது. குமாரனை நோக்கி தேவனே, உம்முடைய ராஜ்யத்தின் செங்கோல் நீதியுள்ள செங்கோலாயிருக்கிறது (எபி. 1:4,8) என்கிறது.

ஏதோ ஒன்று இவ்விதமாகத் தான் இருக்கிறது என்பதை தேவன் எத்தனை முறை தான் சொல்ல வேண்டும்? ஒரே ஒரு முறை போதும்! சபை தொடங்கியதற்குப் பிறகு சகோதரர்கள் அப்பம்பிட்கும்படி கூடி வந்தார்கள் என்பதற்கு நமக்கு எத்தனை உதாரணங்கள் உள்ளன? ஒன்று! (அப். 20:7). அதை நம்மைக் கட்டுப்படுத்துகிற உதாரணமாக ஆக்கிக் கொண்டு, அதே நேரத்தில் இயேசு ஆராதனையை ஏற்றுக் கொள்வதாக கொடுக்கப்பட்டுள்ள அநேக உதாரணங்களை கண்டு கொள்ளாமல் இருந்தால் அது எப்படி? முதல் நூற்றாண்டில் மக்களுக்கும், தேவதூதர்களுக்கும் இயேசுவை ஆராதிப்பது சரியாக இருந்திருந்தால், இன்றும் அப்படிச் செய்வது சரியானதே. அப்படிச் செய்ய வில்லையென்றால் ஏன் அப்படிச் செய்யக்கூடாது?

அவர் என் ஆண்டவர் :

தோமா, "என் ஆண்டவரே என் தேவனே" என்று கதறினார் (யோவான் 20:28). அவர் உங்கள் ஆண்டவராயிருக்கிறாரா?.

அவர் என் ராஜா :

அவர் ராஜாதி ராஜாவாகவும் கர்த்தாதி கர்த்தாவாகவும் இருக்கிறார். (1 தீமோத். 5:15), (வெளி. 17:14; 19:16) அவர் உங்கள் ராஜாவாயிருக்கிறாரா?

அவர் என் இரட்சகர் :

(லூக். 2:11; யோ. 4:42; 5:31; எபே. 5:23; தீத்து. 2:13)
அவர் உங்கள் இரட்சகராயிருக்கிறாரா?.

அவர் என் தலை :

(எபேசி. 1:22,23; கொலோ. 1:18,24) அவர் உங்கள் தலையாயிருக்கிறாரா?

அவர் என் தேவன் :

(யோவான் 10:28; தீத்து. 2:13) அவர் உங்கள் தேவனாயிருக்கிறாரா?

அவர் என் பிரதான ஆசாரியர் :

(எபி. 3:1; 4:14; 5:5; 6:20; 9:11)

அவர் உங்கள் பிரதான ஆசாரியராயிருக்கிறாரா?

அவர் என் மணவாளன் :

ஏனென்றால், நான் அவருடைய மணவாட்டியாக சபைக்குள் இருக்கிறேன் (ரோ. 7:4; வெளி. 21:29) நீங்கள் அவருக்கு மணவாட்டியாக இருக்கிறீர்களா?

அவர் தம்முடைய இரத்தத்தால் என்னை வாங்கினார் :

(அப். 20:28)

அவர் உங்களை வாங்கி இருக்கிறாரா?


அப்போஸ்தலர்கள் இயேசுவை பணிந்து கொண்டது சரிதான் என்பதைக் கண்டு கொண்டேன். அது நான் இயேசுவை பணிந்து கொள்ள அங்கீகரிக்கப்பட்ட அப்போஸ்தல உதாரணத்தை இன்று எனக்குத் தருகிறது.

இயேசுவே, என்னை நேசித்து, இரட்சிப்பதற்கு உமக்கு நன்றி!

## விழித்திருங்கள்

உன் பக்தி வாழ்க்கையில் நீ உறங்கிக் கொண்டிருக்கும் நேரத்தில் தான், எதிராளியாகிய பிசாசு தீவிரமாய் திட்டமிடுகிறான்.

" தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருங்கள், விழித்திருங்கள்; ஏனெனில், உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல் எவனை விழுங்கலாமோ என்று வகை தேடிச் சுற்றித் திரிகிறான் ". (1 பேதுரு 5:8)



# நிபந்தனையற்ற அன்பின் வரம்புகள்

## The Limitations of Unconditional Love

***David W. Chadwell***

" **அ**நேகமாக தேவனைப் பற்றிய மிக குழப்பமான உண்மைத் தன்மை மனித இனத்தின் மீதான அவருடைய நிபந்தனையற்ற அன்பாகத்தான் இருக்கும். ஆதாமும், ஏவாளும் தேவனோடு கொண்டிருந்த உறவில் தோற்றுப் போனபோதும் கூட அவருடைய அன்பு தொடர்ந்து நீடித்திருந்தது (ஆதியாகமம் 3) நோவாவின் காலத்தில் வாழ்ந்த மக்களின் இருதயத்து நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததாக, துன்மார்க்கமாக இருந்த போதிலும் கூட தேவனுடைய அன்பு தொடர்ந்து நீடித்திருந்தது (ஆதி. 6:5). வனாந்தரத்தில் இஸ்ரவேலின் மன்னிக்க முடியாத தோல்விகளின்

போதும் கூட அந்த அன்பு தொடர்ந்து நீடித்திருந்தது; அதே போல நியாயாதிபதிகளின் காலத்தில் அவர்களுடைய நம்ப முடியாத துன்மார்க்கத்தின் போதும், ராஜ்யம் பிரிந்து போன நாட்களில் அவர்கள் விக்கிரக ஆராதனையில் ஈடுபட்டு அவர்களுடைய துன்மார்க்கத்தின் காரணமாக அசீரிய மற்றும் பாபிலோனிய சிறை பிடிப்புக்கு காரணமான நிலையிலும் தேவ அன்பு தொடர்ந்து நீடித்தது.

தேவனுடைய நிபந்தனை. யற்ற அன்பு இஸ்ரவேலிடத்தில் மட்டும் வெளிப்படுத்தப்படவில்லை. கொடுமையான விக்கிரக ஆராதனை நிறைந்த அசீரியர்களிடத்தில் கூட தேவன் அன்பு கூர்ந்தார் என்பதை யோனா கசப்பான அனுபவங்களோடு கற்றுக் கொண்டார். தேவன் இஸ்ரவேலை தம்முடைய தேசமாகத் தெரிந்து கொண்டார் என்பது அவர் மற்ற தேசத்து மக்களிடத்தில் அன்பு கூரவில்லை என்பதற்கு அத்தாட்சி ஆகாது. உண்மையில் சொல்லப் போனால், முழு மனித இனத்தையும் தேவன் நேசித்தபடியால் தான் அவர் இஸ்ரவேலை தம்முடைய ஜனமாகத் தெரிந்து கொண்டார். இஸ்ரவேலர்கள் தான் பதிலளிக்க வேண்டியவர்களாக, கவனிக்க வேண்டிய ஜனங்களாக இருந்தார்கள். அவர்கள் மூலமாகத் தான் தேவன் இவ்வுலகிற்கு இரட்சகரைக் கொண்டு வர வேண்டியதாயிருந்தது. யோவான் நற்செய்தி நூல், தேவன் தன்னில் ஒரு பகுதியாகிய தம் குமாரனை இவ்வுலகத்திற்கு அனுப்பிய நம்ப முடியாத செயலைப் பற்றி விளக்கும் போது இவ்விதமாக வெளிப்படுத்துகிறது. தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார் (யோவான் 3:16) என்று.

தேவன் எல்லா மக்களையும் நேசிக்கிறார் என்பது உண்மை யாகும். தேவன் துன்மார்க்கரையும், நீதிமான்களையும், எல்லா கலாச் சாரத்தின் மக்களையும், எல்லாப் பின்னணியைச் சார்ந்த மக்களையும் நேசிக்கிறார். தேவனுடைய அன்பிலிருந்து விடுபட யாருமே மிகச்சிறியவர்களாகவோ, யாருமே முக்கிய மற்றமவர்களாகவோ, யாருமே அதிக குற்ற உணர்வு உடையவர்களாகவோ, யாருமே அதிக பெலவீனர்களாகவோ, அதிக வெறுப்பை ஏற்படுத்துகிறவர்களாகவோ இருக்க முடியாது.

கிறிஸ்துவின் சிலுவைக்கும், உயிர்த்தெழுதலுக்கும் பிறகு வாழும் எல்லா மக்களுக்கும் தேவனுடைய நிபந்தனையற்ற அன்பின் செய்தி என்ன? செய்தி: மனந்திரும்பி, தன்னுடைய விசுவாசத்தையும், வாழ்க்கையையும் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவினிடத்தில் வைக்கும் எந்த ஒரு மனிதனையும் மன்னிப்பதற்கு, அவனுடைய எப்படிப்பட்ட தீமையோ, துன்மார்க்கமோ, அவரைப் பாதிப்படையச் செய்து விடுவதில்லை. உணர்வடைந்து வீடு திரும்பும் எல்லா கெட்ட குமாரர்களையும் அன்போடும்

மகிழ்ச்சியோடும் வரவேற்கும் பிதாவாக இருக்கிறார். தேவன் நம்மை மன்னிப்பதற்கு காலம் கடந்து விடவில்லை, நிலைமை மோசமாகி விடவில்லை, அல்லது காரியம் கை மீறிப் போய் விடவில்லை. சிலுவையில் அறையப்பட்ட குமாரனுடைய பாவ நிவர்த்தியை ஏற்றுக்கொள்ளும் எந்த ஒரு நபருக்கும் அவர் தொடக்கத்தின் தேவனாயிருக்கிறார். அவர் முழு மன்னிப்பின் தேவனாக, பூரண சுத்திகரிப்பின் தேவனாக, உண்மையாக மனந்திரும்பும் ஒவ்வொருவரையும் எவ்வித சந்தேகமுமின்றி, தகுதியுமின்றி நேசிக்கிற தேவனாயிருக்கிறார்.

தேவனுடைய நிபந்தனையற்ற அன்பின் செய்தி எதுவல்ல என்பதையும் நாம் கவனிக்க வேண்டும். தேவனுடைய நிபந்தனை யற்ற அன்பு இருப்பதால் மட்டும் ஒருவர் தான் கணக்கு ஒப்புவிப்பதிலிருந்தும், தன் பாவங்களுக்குப் பொறுப்பேற்பதிலிருந்தும் தப்பித்துக் கொள்ள முடியமா? தேவனுடைய நிபந்தனையற்ற அன்பு ஒருவருக்கு இருப்பதனால் அவர் தன்னுடைய பாவங்களையும், மீறுதல்களையும் அறியாமல் இருக்கலாமா?.

தேவனுடைய நிபந்தனையற்ற அன்பு ஒருவருடைய கணக்கொப்புவிக்கும் தன்மையையும், பொறுப்பையும் அல்லது மனந்திரும்பாமல் இருப்பவருடைய பாவங்களையும் இல்லாமல் போகச் செய்வதில்லை. உண்மையில், தேவனுடைய நிபந்தனையற்ற அன்பு மனந்திரும்பாத ஒருவருக்கு கண்டிப்பாக உதவி செய்வதில்லை. அந்த அன்பு மனந்திரும்பி, கிறிஸ்துவினிடத்தில் திரும்பும் ஒருவருக்கு மன்னிப்பு, இரக்கம், கிருபை போன்றவைகளுக்கு வாய்ப்புக் கதவுகளைத் திறக்கிறது. நிபந்தனையற்ற தேவ அன்பைப் பற்றிய உண்மை இவ்விதமாக இருக்கின்ற போதிலும், மனந்திரும்பி இயேசுவில் உண்டான தேவனுடைய தியாகத்தை ஏற்றுக்கொள்ள மறுக்கும் பலருடைய நிலைமையும், பொறுப்பும் மாறாமல் அப்படியே இருப்பது மிகுந்த வேதனைக்குரியது.

### தேவனுடைய நிபந்தனையற்ற அன்பு :

மனந்திரும்பி, கிறிஸ்துவுக்குள் பிரவேசிக்கும் ஒருவருக்கு அது உயரிய ஈவாக இருக்கிறது! ஆனால், கிறிஸ்துவை மறுக்கும் ஒருவருக்கு என்றென்றும் எட்டாக் கனியாக இருக்கிறது!!

### நான்கு வகையான ஆராதனைகள்

| | |
|---|---|
| 1. வீணான ஆராதனை | (மத். 15:9) |
| 2. அறியாமையுள்ள ஆராதனை | (அப். 17:23) |
| 3. சுய இஷ்டமான ஆராதனை | (கொலோ. 2:23) |
| 4. உண்மையான ஆராதனை | (யோவான் 4:24) |

சாட்சியங்கள்

# ஆதியாகமும், பரிணாமக் கொள்கையும்

## Evolution Versus The Genesis Account

### *Max Patterson*

" வேதாகமத்தையும், பரிணாமக் கொள்கையையும் சேர்த்து உறுதியாகப் பிடித்துக் கொள்ள விரும்புபவர்களும் இருக்கிறார்கள். எனவே தான், இறை பரிணாமம் என்கிற கொள்கை கண்டுபிடிக்கப்பட்டது. அதாவது, அவர்கள் தேவன் இவ்வுலகத்தை உண்டாக்கினதாகப் போதிக்கிறார்கள், அது சரிதான், ஆனால், தேவன் பரிணாம முறையில் இவ்வுலகத்தை உண்டாக்கினதாகவும் போதிக்கிறார்கள். இருப்பினும், ஆதியாகமப் புத்தகத் திற்கும், இந்த நியாயமற்ற கேலிக்கூத்தான கொள்கைக்கும் இடையே அநேகப் பிரச்சனைகளும், முரண்பாடுகளும் இருக்கின்றன. அவைகளுள் சில :

1. ஆதியாகமப் புத்தகம் சூரியன் உண்டாக்கப்படுவத்ற்கு முன்பே புல் பூண்டுகளை தேவன் உண்டாக்கினார் என்று வெளிப்படுத்துகிறது (ஆதி. 1:11-14). ஆனால், பரிணாமக் கொள்கையோ முதல் செடி உருவாவதற்கு பல லட்ச வருடங்களுக்கு முன்பிருந்தே சூரியன் ஒளி வீசி வருகிறது என்று சொல்லுகிறது.

2. ஆதியாகமப் புத்தகம் சிருஷ்டிப்பின் ஐந்தாம் நாளிலே பறவைகள் உண்டாக்கப்பட்டதென்றும், ஆறாம் நாளில் ஊரும் பிராணிகள் உண்டாக்கப் பட்டன என்றும் உறுதியாக வெளிப்படுத்துகிறது (ஆதி. 1:21,24) ஆனால், பரிணாமக் கொள்கையோ பூச்சிகளும், ஊர்வனவைகளும், தோன்றி நீண்ட காலத்திற்குப்பின்புதான் பறவைகள் உருப்பெற்றன என்று போதிக்கிறது.

3. ஆதியாகமப் புத்தகம் மனிதன் பூமியின் மண்ணினாலே தேவனால் உண்டாக்கப்பட்டான் என்று போதிக்கிறது (ஆதி. 2:7; 3:19; 1 கொரி. 15:45). ஆனால், பரிணாமக் கொள்கையோ மனிதன் குரங்கு போன்ற விலங்கினத் திலிருந்து வந்தவன் என்று சொல்லிக் கொள்கிறது.

4. ஆதியாகமப் புத்தகம் கனி கொடுக்கும் மரங்கள் மீன்கள் உண்டாக் கப்படுவதற்கு முன்பே உண்டாக்கப்பட்டது என்று குறிப்பிடுகிறது (ஆதி. 1:11). ஆனால், பரிணாமக் கொள்கையோ கனிக் கொடுக்கும் மரங்கள் தோன்று வதற்கு வெகுக் காலத்திற்கு முன்பே மீன்கள் இருந்ததாகக் கூறுகிறது.

5. ஆதியாகமப் புத்தகம் உலகளாவிய ஜலப்பிரளயத்தைப் பற்றித் தெளிவாகப் பேசுகிறது (ஆதி. 7:10-12, 17-20). ஆனால், பரிணாமக் கொள்கை அப்படிப்பட்ட உலகளாவிய ஜலப்பிரளயம் ஏற்படவில்லை என்று அடித்துச் சொல்லுகிறது.

சரியானதைத் தெரிந்து கொள்வது என்று வரும்போது யாரோ ஒரு மனிதன் யூகிப்பதை ஏற்றுக் கொண்டு நம்புவதை விட, தேவன் என்ன சொல்லியிருக்கிறாரோ அதையே நான் நம்புவேன். நாம் வேதாகமத்தின் பக்கம் நின்றால் ஒருபோதும் தவறிழைக்கமாட்டோம். வாழ்க்கை, தேவன் நமக்குத் தந்த பரிசாக இருக்கிறது. அதை வைத்து நாம் என்ன செய்கிறோம் என்பது நாம் தேவனுக்குக் கொடுக்கும் பரிசாக இருக்கிறது.

நம்முடைய விசுவாசம் தேவன் என்ன சொல்லுகிறார் என்பதை ஆதாரமாக வைத்துத்தான் இருக்க வேண்டுமேயொழிய, மனிதர்களிடத்தில் கற்றவைகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்கக்கூடாது.

## உன் கையில் என்ன இருக்கிறது?

மோசேயே, உன் கையில் என்ன இருக்கிறது?
மேய்ப்பனுடைய கோல்தான்,
பணிவான பணிக்கான சாதாரண கோல்தான் அது
ஆனால், அது தேவனால் அற்புதமாக பயன்படுத்தப்பட்டது.

சங்கீதக்காரனாகிய தாவீதே,
உன் கையில் எதைப் பிடித்துக் கொண்டிருக்கிறாய்?
மிகப் பெரிய வில்லை உண்டாக்க
சலசலப்பான நீரோடையிலிருந்து எடுக்கப்பட்ட கவணும்,
கூழாங்கற்களும் தான் உண்டு.

வறுமையால் வாட்டப்பட்ட அந்த ஏழை விதவை
காணிக்கைப் பெட்டியில், தன்னிடம் இருந்த இரண்டு காசுகளை
தியாகமாகப் போட்டது தேவனால் பார்க்கப்பட்டது,
அவள் ஆசீர்வதிக்கப்பட்டாள்.

கிறிஸ்தவனே, உன் கையில் என்ன இருக்கிறது?
நீ எதை வைத்துக் கொண்டிருக்கிறாய்?
அதன் மதிப்பு சிறியதாகவோ, பெரியதாகவோ இருக்கலாம்
கர்த்தரால் அந்த பயன்படுத்தவும், ஆசீர்வதிக்கவும் முடியும்.

# சிருஷ்டிப்பு பற்றி வேதாகமம் என்ன சொல்கிறது?

## What does the Bible say about the Creation?

*Don L. Norwood*



"இப்பிரபஞ்சத்தை உண்டாக்கின நம் தேவன் நித்திய மானவர்; அவர் எப்போதுமே இருந்து வருகிறார்; அவர் சர்வ வல்லமையுள்ளவராயிருக்கிறார். சங்கீதக்காரன் இவ்விதமாக எழுதும் படியாக ஏவப்பட்டார். "பர்வதங்கள் தோன்று முன்னும், நீர் பூமியையும் உலகத்தையும் உருவாக்கு முன்னும், நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக் கிறீர்" (சங் 90:2). "நீர் ஆதியிலே பூமியை அஸ்திபாரப்படுத்தினீர்; வானங்கள் உம்முடைய கரத்தின் கிரியையாயிருக்கிறது" (சங். 102:25). ஆகவே தான், வேதாகமம் இந்த வார்த்தைகளுடன் ஆரம்பமாகிறது. "ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதி. 1:1). வார்த்தையாகிய தேவன் சிருஷ்டிப்பிலே தம்முடைய பங்களிப்பை வெளிப்படுத்தியிருக் கிறார் (யோ. 1:14,14; கொலோ. 1:16; எபி. 1:2; சங். 33:6-9).

கர்த்தர் ஆறுநாட்களில் வானத்தையும், பூமியையும் உருவாக்கி ஏழாம் நாளில் ஓய்ந்தி ருந்தார் (யாத். 31:17). அந்த நாட்கள் இன்று இருக்கிற நாட்களைப் போல சாதாரண நாட்கள் தான். இது, 2 பேதுரு 3:3,4 வசனங்களோடு ஆதி. 8:22 வசனத்தை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, அவைகள் சாதாரண நாட்க ளாகவே காட்டப்பட்டுள்ளது. எபிரெயப் பதமான "YOM" என்பது ஆங்கில மொழியில் பகல் என்று

மொழியாக்கம் செய்யப்பட்டுள்ளது. அது வெளிச்சத்தை உள்ளடக்கிய வழக்கமான ஒரு பகல் பொழுதைத் தான் குறிக்கிறது. இந்த உண்மை யை ஆழ்ந்து சிந்தித்து விட்டு, பின்பு ஆதி. 1:5 ஐ மிக ஜாக்கிரதையாக வாசியுங்கள். வெளிச்சத்தை உள்ள டக்கிய காலையும், சாயங்காலமும் தான் பகல் என்று அழைக்கப்பட்டது. இருளை உள்ளடக்கிய வேளை இரவு என்று அழைக்கப்பட்டது (சங். 74:16) சிருஷ்டிப்பின் முதல் நாளிலே வெளிச்சம் உண்டாக்கப்பட்டது. வெளிச்சத்தையும், இருளையும் தேவன் வெவ்வேறாகப் பிரித்தார்.

இரண்டாம் நாளில் தேவன் ஆகாய விரிவை உண்டு பண்ணி ஆகாய விரிவுக்குக் கீழே இருக்கிற ஜலத்திற்கும், ஆகாய விரிவுக்கு மேலே இருக்கிற ஜலத்திற்கும் பிரிவுண்டாக்கினார். தேவன் ஆகாய விரிவுக்கு வானம் என்று பெயரிட்டார்.

மூன்றாம் நாளில் தேவன் வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும் செய்தார். தேவன் வெட்டாந்தரைக்குப் பூமி என்றும் சேர்ந்த ஜலத்திற்கு சமுத்திரம் என்று பெயரிட்டார்.

நான்காம் நாளில் தேவன் பூமிக்கு ஒளிக்கொடுத்து அடையா ளங்களையும், காலங்களையும், நாட்களையும், வருடங்களையும் ஒழுங்குபடுத்துவதற்காக ஆகாய விரிவிலே சூரியனையும், சந்திரனை யும் வைத்தார் (ஆதி. 1:14).

ஐந்தாம் நாளில், தேவன் கடல் வாழ் உயிரினங்களையும், பூமியின் மேல் வானம் என்கிற ஆகாய விரிவிலே பறப்பதற்கு பறவைகளையும் உண்டாக்கினார்.

ஆறாம் நாளில் தேவன் பூமியில் வாழும் உயிரினங்களை உண்டாக்கினார். அந்தப் படைப்பு களிலேயே மிகப்பெரியது மனித இனம். ஏனென்றால், மனித இனம் தேவசாயலில் உண்டாக்கப்பட்டது. அது மட்டுமல்ல, மனித இனத்துக்குத் தான், சகலவற்றையும், ஆண்டு கொள்ளும் உரிமையைக் கொடுத் தார் (ஆதி. 1:27,28)

தேவன் தம்முடைய கிரியை களையெல்லாம் முடித்து விட்டு ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார் (ஆதி. 2:1-4)

ஒன்றுமில்லாமையிலிருந்து எல்லாவற்றையும் உண்டாக்க தேவனால் முடியும் அல்லது தேவ னுக்கு வல்லமை உண்டு என்பதை நாம் விசுவாசித்தால், அவர் தம்மு டைய வார்த்தையில் வெளிப்படுத்தி யிருக்கிறபடி அவைகளை 24 மணி நேரக் கால அளவைக் கொண்ட ஒரு நாளிலேயே உண்டாக்கினார் என்பதை விசுவாசிப்பதில் நமக்கு எந்த பிரச்சனையும் இருக்காது.

நாம் நம் எண்ணங்களை விடத் தூய்மையாகவோ, கொள்கை களை விட உயர்வாகவும் இருக்க முடியாது. நம் கனவுகளை விட மகத்தானவர்களாகவும் இருக்கவும் முடியாது. ஆகவே, நாம் சரியாக யோசித்து உயரிய கொள்ளைகளை வளர்த்து, கற்பனைச் சிறகுகளில் சத்தியம் மற்றும் அனுபவங்களில் உயர்நிலையை அடைய வேண்டும்.




# மாபெரும் ஆலோசகர்

"எங்கள் திருமணத்தில் பிரச்சனை வரும் என்பதை என்னால் நம்பவே முடியவில்லை. நீண்டகாலமாக காரியங்கள் மென்மையாகப் போய்க் கொண்டிருந்தது.... ஆனால், இப்போது அப்படி இல்லை. சில காலத்திற்கு முன்பு ஒரு காரியத்தின் நிமித்தம் எங்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்ட போது பிரச்சனை தொடங்கியது. எங்களுக்குள் சிறிய சண்டை ஏற்பட்டு, கோபத்துடன் படுக்கைக்குச் சென்றோம். அடுத்த நாள் எங்களுக்கு ஒரு சிறந்த நாளாக இருக்கவில்லை. இப்போது காலம் கடந்து விட்டது. எங்களுக் கிடையே ஒரு பெரிய சுவர் உருவாகியிருக்கிறது, நாங்கள் அதை இப்போது இடித்துத் தள்ள அல்லது அந்தப் பிரச்சனையை கண்டு கொள்ளாமலும் இருக்க முயற்சி செய்கிறோம்; ஆனாலும், அது அடிக்கடி எங்கள் கண்களில் தோன்றி பாடாய்ப்படுத்துகிறது. இதைக் குறித்து வேறு யாரிடமாவது பேசலாமா? ".

இதே விதமாக அல்லது இதுபோன்ற உணர்வுகளை நீங்கள் எப்பொழு தாவது வெளிப்படுத்தியிருக்கிறீர்களா? பலர் அப்படி செய்திருக்கிறார்கள். ஆயினும், பெரும்பாலான திருமணப் பிரச்சனைகள் நீதிமன்றத்திற்குப் போய் தீர்வு காணும் அளவிற்கு மோசமாகிவிடவில்லை.

உங்கள் திருமணத்திற்கும் உதவித் தேவை என்று நீங்கள் ஒருநாள் உணர்ந்தால், அப்போது யாரிடம் அல்லது எங்கே போவீர்கள்? வெளியில் இருப்பவர்களிடம் உங்கள் குடும்பப் பிரச்சனைகளைப் பேச விருப்பமில்லாமல் இருக்கிறீர்களா? இதோ உங்களுக்கு ஓர் நற்செய்தி; " மிகச் சிறந்த மாபெரும் திருமண ஆலோசகர் எல்லோருக்கும் இலவசமாகவே ஆலோசனைகளை வழங்கி வருகிறார். நீங்கள் பெற்றுக்கொள்ளும் விலை மதிப்பில்லா ஆலோசனையின் மாதிரி இதோ; மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல. இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும், தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடு இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள்" என்று ஆதியிலே சொன்னார்.

புருஷன் மனைவிக்குத் தலையாயிருக்கிறான். புருஷர்களே உங்கள் மனைவிகளில் அன்பு கூருங்கள்.... புருஷர்களும் தங்கள் மனைவிகளைத் தங்கள் சொந்த சரீரங்களாகப் பாவித்து அவர்களில் அன்பு கூர வேண்டும்: தன் மனைவியில் அன்பு கூருகிறவன் தன்னில்தான் அன்பு கூறுகிறான். எப்படியும், உங்களில் அவனவன் தன்னிடத்தில் அன்பு கூருவதுபோல, தன் தன் மனைவியினிடத்திலும் அன்புகூரக்கடவன்; மனைவியும் புருஷனிடத்தில் பயபக்தியாயிருக்கக்கடவள்.

" அந்தப்படி மனைவிகளே, உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப் படிந்திருங்கள்; அப்பொழுது அவர்களில் யாராவது திருவசனத்திற்குக் கீழ்ப் படியாதவர்களாயிருந்தால், பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து, போதனையின்றி, மனைவிகளின் நடக்கையினாலேயே ஆதாயப்படுத்திக் கொள்ளப்படுவார்கள். மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக் கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல், அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாகிய இருதயத்தில் மறைந்திருக்கிற குணமே உங்களுக்கு அலங்காரமாயிருக்கக்கடவது; அதுவே தேவனுடைய பார்வையில் விலையேறப் பெற்றது "

மேற்சொல்லப்பட்ட காரியங்களைக் குறித்து நீங்கள் ஆச்சரியப் பட்டால் ஆதியாகமம் 2, எபேசி. 5, 1 பேதுரு 3 ஆகிய புத்தகங்களிலுள்ள பல்வேறுப்பட்ட வசனப்பகுதிகள் தான் இவைகள். இங்கே கவனிக்க வேண்டிய கருத்து இதுதான். எந்த ஒரு வாழ்க்கை பிரச்சனைக்கும் வேதாகமத்தில் பதில் இல்லை என்கிற பேச்சுக்கே இடமில்லை.

வேதாகமத்தைப் படியுங்கள். தேவனுடைய வார்த்தை உங்கள் குடும்ப வாழ்வை இறுதிவரை அழைத்துச் செல்லும்.



# நீங்களும் வேதாகமமும்

## You and the Bible

*Bobby Key*

அநேக ஜனங்கள் குறைந்தபட்சம் வேதாகமத்தின் ஒரு பகுதியை யாவது தாங்கள் விசுவாசிப்பதாகச் சொல்லிக்கொள்கிறார்கள். ஆயினும், பக்தியுள்ள ஜனங்களில் பெரும்பாலானவர்கள் தேவனுடைய வார்த்தை மட்டும் நம்மை பக்தி ரீதியாக வழிநடத்துவதற்கு போதுமானது என்று விசுவாசிப்பதில்லை. சிலர் வேதாகமம் உண்மை அல்ல என்று சொல்கிறார்கள். அதே சமயம் மற்றவர்கள் நாம் தேவனை சேவிப்பதற்குத் தேவையான எல்லா சத்தியத்தையும் அது உள்ளடக்கியதல்ல என்றும் சொல்கிறார்கள். இது போன்ற மனப்பான்மையின் விளைவாக, தேவனுடைய வார்த்தையில் குறைவுண்டு என்று எண்ணி அதை ஈடுகட்டும்படியாக சில கொள்கைகளை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

நிச்சயமாகவே, நாம் வேதாகமத்தை விசுவாசிக்கும் வரை அது நமக்கு உதவி செய்யாது. எபிரெய எழுத்தாளர் இவ்விதமாகச் சொன்னார். "*ஏனெனில், சுவிசேஷம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டது போல நமக்கும் அறிவிக்கப்பட்டது; கேட்டவர்கள் விசுவாசமில்லாமல் கேட்டபடியினால், அவர்கள் கேட்ட வசனம் அவர்களுக்குப் பிரயோஜனப்படவில்லை* " (எபி. 4:2) " *சிலுவைப்பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்குப் பைத்தியமாயி ருக்கிறது, இரட்சிக்கப்படுகிற நமக்கோ அது தேவ பெலனாயிருக்கிறது; பைத்தியமாகத் தோன்றுகிற பிரசங்கித்தினாலே விசுவாசிகளை இரட்சிக்க தேவனுக்குப் பிரியமாயிற்று* " (1 கொரி. 1:18.21).

வேதாகமம் சத்தியத்தைத் தன்னகத்தே கொண்டுள்ளதாகச் சொல்லிக் கொள்கிறது. அது நாம் அறிந்து கொள்ளத் தேவையான எல்லாவற்றையும், நாம் விசுவாசிப்பதற்குத் தேவையான எல்லாவற்றையும், கிறிஸ்துவுக்குள் நம்மைத் தேறினவர்களாக்க நாம் செய்ய வேண்டிய எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்டுள்ளது (2 தீமோ. 3:15-17). வேதாகமம் வாசிக்கப்பட வில்லையென்றால் அது யாருக்கும் பிரயோஜனமாயிராது. தேவனுடைய வார்த்தையைக் கேட்டு விட்டு அதன்படி செய்யவில்லையென்றால், அது உங்கள் ஆத்துமாவை இரட்சிக்காது. கீழ்க்காணும் காரியங்களை ஜாக்கிர தையாகப் படியுங்கள்:

தேவனுடைய வார்த்தை சுத்தமானது; ஆயினும் அது அதற்குக் கீழ்ப் படிகிறவர்களையே பூரணமாக்குகிறது (யாக். 1:22-25). தேவனுடைய வார்த்தை இரட்சிக்கும் வல்லமை பெற்றிருக்கிறது; ஆயினும், அதை விசுவாசித்து, அதற்குக் கீழ்ப்படிகிறவர்களையே அது இரட்சிக்கிறது (ரோமர் 1:16). தேவனுடைய வார்த்தை என்றென்றும் நிலைத்திருக்கிறது (1 யோவான் 2:17; மத். 7:21). தேவனுடைய வார்த்தை ஜீவனைக் கொடுக்கக் கூடியதாக இருக்கிறது; ஆயினும், அதன்படி வாழ்பவர்களுக்கே அது ஜீவனைக் கொடுக்கிறது (யோவான் 3:3-8; லூக்கா 1:8). தேவனுடைய வார்த்தை முற்றிலும் தேறினதாக இருக்கிறது; ஆனால், நம் நம்பிக்கைகளும், நடைமுறைகளும் அதன் போதனைக்கு ஒத்தவாறு இருக்கவேண்டும். அப்போதுதான் அது நம்மை தேறினவர்களாக்கும் (2 தீமோ. 3:16,17).


பிரியமான வாசகரே, நீங்கள் வேதாகமத்திற்குச் செய்ய வேண்டிய கடமை ஒன்று உண்டு. பவுலின் புத்திமதியைப் பின்பற்றுங்கள். மேலும், "கிறிஸ்துவின் வசனம் உங்களுக்குள்ளே சகல ஞானத்தோடும் பரிபூரணமாக வாசமாயிருப்பதாக " (கொலோ. 3:16). " இப்போது லேசாக எடுத்துக் கொள்ளப்படும் தேவனுடைய வார்த்தை எல்லா நாட்களிலும் மகத்தான நாளாகிய நியாயத் தீர்ப்பின் நாளிலே நம்மை நியாயந்தீர்க்கும் என்பதை நினைவில் கொள்ளுங்கள் " (யோவான் 12:48).

## ஒத்திப் போடுகிறவர்களே, கவனியுங்கள்!

**வேத வசனங்களைக் கேட்கத் தவிர்ப்பவன்**
**மனமாற்றம் அடையும் வாய்ப்பை ஒத்திப்போடுகிறான்.**
**மனமாற்றத்தைத் தவிர்ப்பவன்**
**இரட்சிப்பின் பாக்கியத்தை ஒத்திப் போடுகிறான்**
***ஆனால்,***
**இரட்சிபின் வாழ்க்கைக்குள் வராதவர்களால்**
**நியாயத்தீர்ப்பின் நாளில்**
**நித்திய நரகத்தை ஒத்திப்போட முடியாது.**

# நாங்கள் சிலுவையில் அறையப்பட்ட கிறிஸ்துவை பிரசங்கிக்கிறோம்

*Ron Bryant*




சுவிசேஷத்தில் கிறிஸ்துவின் சிலுவை மையமாக இருக்கிறது. மனிதனுடைய பாவங்களுக்காக கிறிஸ்துவின் மரணம் என்கிற உண்மையை ஒட்டு மொத்த மீட்பின் திட்டம் உறுதியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறது. ஆயினும், சிலுவையைப் பற்றிய பிரசங்கம் முதல் நூற்றாண்டில் அதைக் கேட்டவர்களுக்கு எரிச்சலை ஏற்படுத்தியது. அக்காலத்தில் யூதர்களுக்கும், புறஜாதிகளுக்கும் சிலுவையில் அறையப்பட்ட மேசியா ஒரு முரண்பாடாக அவர்களுக்குக் காணப்பட்டார்.

சிலுவையில் அறையப்பட்ட மேசியாவைப் பிரசங்கிப்பது என்பது யூதர்களின் பட்சபாதத்தைக் கிளறிவாக்குவாத அரங்கத்திற்குள் அதைக் கொண்டு போவது போன்றதாகும் (அப். 26:23). யூதர்கள், தாவீது மற்றும் சாலொமோனுடைய ராஜ்யங்களின் மகிமையை மீட்டமைத்து, அடையாளங்களால் அறிவிக்கப்பட்டு வெற்றியுள்ள மேசியாவாக இயேசு வருவார் என்று எதிர்பார்த்தார்கள். ஒரு யூதனுக்கு சிலுவையானது இயேசு மேசியாவல்ல என்பதை சுட்டிக் காட்டுவதற்கு போதுமான ஆதாரமாக இருந்தது. அந்த வேளையில் யூதர்கள் தாங்கள் கற்றுக் கொள்வதற்கு முன்பாக கற்றுக் கொண்ட சில காரியங்களை மறக்க வேண்டியதாயிருந்தது.

யூதர்கள் அடையாளத்தை விரும்பினார்கள். ஆனால், அடையாளத்தைக்காண தங்கள் கண்களை திறப்பது அவசியமாகக் காணப்பட்டது (ரோமர் 1:34).

புறஜாதிகளும் கற்றுக் கொள்ளும்படி தாங்கள் கற்றுக் கொண்டவைகளை மறக்க வேண்டியதாயிருந்தது. ஆனால், சற்று வித்தியாசமான முறையில் அவர்கள் எந்த ஒரு புதிய முறையின் நன்மையையும், தீமையையும் அளந்து பார்க்க ஆயத்தமாகாமல் இருந்தார்கள். ஆனால், கிறிஸ்துவுக்குள் எளிய விசுவாசத்திற்குள் அழைத்துச் செல்லக்கூடிய முன்கூட்டியே யூகித்தலில் குறைவுப்பட்டார்கள். யூதர்களும், புறஜாதியாரும் காரியங்களை முன் கூட்டியே யூகித்தபடியால் சிலுவையில் அறையப்பட்ட இரட்சகரை ஏற்றுக்கொள்வதற்கு அதுதடையாக இருந்தது.

ஆம், கிறிஸ்துவைப் பற்றிய பிரசங்கம் அவர்களுக்கு பொருந்துகிறதாகவே இருக்கவில்லை; ஏனென்றால், யூதர்களைப் பிரியப்படுத்துவதற்காக இயேசு ஜெயங்கொள்ளுகிறவராக பிரசங்கிக்கப்படவில்லை, அதேபோல் புறஜாதிகளைப் பிரியப்படுத்துவதற்காக அவர் ஒரு தத்துவ ஞானியாகவும் பிரசங்கிக்கப்படவில்லை. இயேசு சிலுவையில் அறையப்பட்ட நசரேயனாக பிரசங்கிக்கப்பட்டார்.

" சிலுவையில் அறையப்பட்ட" கிறிஸ்துவைப் பிரசங்கிப்பது என்பது மனிதனிடமிருந்து வந்ததல்ல! அது தேவனிடமிருந்து வந்தது! அந்தச் சிலுவையில் தான் மனித இனத்தை இரட்சிப்பதற்கான தேவனுடைய மாபெரும் தரிசனம் செயல்பட்டது. தேவனுடைய வல்லமையும், ஞானமும் எப்போதுமே முன் கூட்டியே உருவாக்கப்பட்ட அளவுகோலோடு ஒத்துப்போவதில்லை. ஒவ்வொரு காலத்திலும் தேவனுடைய வழி மனித அளவு கோல்களைத் தாண்டிச் செல்கிறது (1கொரி. 1:18-31; ரோமர் 1:16,17). இரட்சிக்கப்படுகிறவர்களுக்கு சிலுவை பற்றிய பிரசங்கம் தேவ ஞானமாகவும், தேவனுடைய வல்லமையாகவும் இருக்கிறது (1 கொரி. 1:18-31).

## புதிய ஏற்பாட்டில் கிறிஸ்து

மத்தேயுவில் அவர் யூதர்களின் ராஜாவாக இருக்கிறார். மாற்குவில் அவர் தேவனுடைய ஊழியக்காரராக இருக்கிறார். லூக்காவில் அவர் தேவனுடைய பூரண குமாரனாயிருக்கிறார். யோவானில் அவர் தேவனுடைய குமாரனாக இருக்கிறார்.

அப்போஸ்தலருடைய நடபடிகளில் அவர் பரமேறிய கர்த்தராக இருக்கிறார். ரோமரில் அவர் நம்முடைய நீதியாக இருக்கிறார். 1 கொரிந்தியரில் அவர் மரித்தோரிலிருந்தெழுந்த முதற்பலனானவராயிருக்கிறார். 2 கொரிந்தியரில் நமக்காக அவர் பாவமானவராகவும் காலத்தியரில் அவர் நியாயப்பிரமாணத்தின் முடிவாயுமிருக்கிறார். எபேசியரில் அவர் நம்முடைய ஆயுதமாயிருக்கிறார். பிலிப்பியரில் அவர் குறைவையெல்லாம் நிறைவாக்குகிறவராகயிருக்கிறார். கொலோசெயரில்

அவர் எல்லாவற்றிலும் முதல்வரா யிருக்கிறார். 1 தெசலோனிக்கேயரில் அவர் மறுபடியும் வருகிற கர்த்தரா யிருக்கிறார். 2 தெசலோனிக் கேயரில் அவர் இரக்கமுள்ள நியா யாதிபதியாக இருக்கிறார். 1 தீமோத் தேயுவில் அவர் நம்முடைய மத்தி யஸ்தராயிருக்கிறார். 2 தீமோத்தேயு வில் கிரீடத்தை நமக்குத் தருகிற வராக இருக்கிறார். தீத்துவில் அவர் மாதேவனும், இரட்சகருமாயிருக் கிறார். பிலேமோனில் அவர் தகப்ப னுடைய பங்காளியாயிருக்கிறார்.

எபிரெயர் புத்தகத்தில் அவர் விசுவாசத்தின் இளைப்பாறுதலும், நிழலை நிஜமாக்குகிறவராயுமிருக் கிறார். யாக்கோபில் அவர் ஞானத் தைத் தருகிறவராயிருக்கிறார். 1 பேதுருவில் அவர் பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசனத்தின் மையப் பொரு ளாக இருக்கிறார். 2 பேதுருவில் அவர் நீடிய பொறுமையுள்ள இரட்ச கராயிருக்கிறார். 1 யோவானில் ஜீவ வார்த்தையாக இருக்கிறார். 2 யோவானில் அவர் அந்திக் கிறிஸ்து வின் இலக்காக இருக்கிறார். 111 யோவானில் அவர் சத்தியத்தின் உருவமாக இருக்கிறார். யூதாவில் அவர் விசுவாசிகளின் நம்பிக்கை யாக இருக்கிறார்.

வெளிப்படுத்தின விசேஷத் தில் அவர் ஜெயங்கொள்ளுகிற ஆட்டுக்குட்டியாக இருக்கிறார்.

## தேவனை எடுத்துப் போடுதல்

1962 ஜூன் மாதத்தில் அமெரிக்க உச்சநீதிமன்றம் ஒரு விநோதமான வழக்கை விசாரித்தது. இந்த வழக்கு ஆரம்பத்தில் பலருக்குத் தெரியாவிட்டாலும் வழக்கின் தீர்ப்பு எல்லோரையும் சென்றடைந்தது. அவ்வழக்கின் தீர்ப்பென்னவென்றால், அமெரிக்கப் பள்ளிக் கூடங்களில் ஜெபம் தடை செய்யப்பட்டிருந்தது. 1962 லிருந்து அமெரிக்கப் பள்ளிகள் தேவனுடைய நாமத்தையும், அவருடைய வார்த்தையையும் பயன்படுத்துவதை தடை செய்து விட்டன. பள்ளி நூலகத்திலிருந்துகூட வேதாகமத்தை எடுத்து விட்டனர்.

ஆபிரகாம்லிங்கன் "ஒரு தலைமுறையில் வகுப்பறையின் தத்துவஞானம், அடுத்த தலைமுறையில் அரசாங்கத்தின் தத்துவ ஞானமாக இருக்கும்" என்று எழுதினார். ஒருவேளை, பள்ளிகளில் தேவன் என்கிற வார்த்தையே குறிப்பிடப்படக்கூடாது என்று தடை செய்திருந்தாலும், உங்கள் இருதயத்திலிருந்து நீங்கள் மட்டுமே தேவனை அகற்ற முடியும் (சங்கீதம் 40:8; ஏசாயா 40:8)

**- RICK EICHELBERGER.**

# பேதுருவின் விசுவாசம்

# Peter's Faith

*O.P. Baird*

## இயேசு யார்?

இயேசு தமது ஊழியத்தைத் தொடங்குவதற்கு முன்பு அவருக்காக வழியை ஆயத்தப்படுத்துவதற்காக தேவன் யோவான் ஸ்நானனை அனுப்பினார். யோவான் ஸ்நானன் இவ்விதமாகப் பிரசங்கித்தார். "மனந்திரும்புங்கள் பரலோக ராஜ்யம் சமீபித்திருக்கிறது". மேலும் அவர் அநேகருக்கு ஞானஸ்நானங் கொடுத்தார் (மத். 3:1-6). "ஜனங்களெல்லாரும் ஞானஸ்நானம் பெற்றபோது, இயேசுவும் ஞானஸ்நானம் பெற்று, ஜெபம் பண்ணுகையில், வானம் திறக்கப்பட்டது; பரிசுத்த ஆவியானவர் ரூபங்கொண்டு புறாவைப்போல அவர் மேல் இறங்கினார். வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி; நீர் என்னுடைய நேச குமாரன், உம்மில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது" (லூக்கா 3:21,22)

இயேசு ஞானஸ்நானம் பெறுவதற்கு முன்பு, யோவான் அவரை நீதிமானாக அறிந்திருக்கிறார், ஆனால், இயேசுவை அவர் கிறிஸ்து அல்லது மேசியாவாக அறியவில்லை. "பின்னும் யோவான் சாட்சியாகச் சொன்னது; ஆவியானவர் புறாவைப் போல வானத்திலிருந்திறங்கி, இவர் மேல் தங்கினதைக் கண்டேன். நானும் இவரை அறியாதிருந்தேன்; ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்: ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங் கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார். அந்தப்படியே நான் கண்டு, இவரே தேவனுடைய குமாரன் என்று சாட்சி கொடுத்து வருகிறேன் என்றான் (யோவான் 1:32-34).

## பேதுரு இரட்சகரை சந்திக்கிறார்

"மறுநாளிலே யோவானும் அவனுடைய சீஷரில் இரண்டு பேரும் நிற்கும் போது, இயேசு நடந்து போகிறதை அவன் கண்டு : இதோ உலகத்தின் பாவங்களைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி என்றான். அவன் அப்படிச் சொன்னதை அவ்விரண்டு சீஷருங்கேட்டு, இயேசுவுக்குப் பின் சென்றார்கள். யோவான் சொன்னதைக் கேட்டு, அவருக்குப் பின் சென்ற இரண்டு பேரில் ஒருவன் சீமோன் பேதுருவின் சகோதரனாகிய அந்திரேயா என்பவன். அவன் முதலாவது தன் சகோதரனாகிய சீமோனைக் கண்டு; மேசியாவைக் கண்டோம் என்று

சொன்னான்; மேசியா என்பதற்குக் கிறிஸ்து என்று அர்த்தமாம். பின்பு அவனை இயேசுவினிடத்தில் கூட்டிக் கொண்டு வந்தான். இயேசு அவனைப் பார்த்து; நீ யோனாவின் மகனாகிய சீமோன், நீ கேபா என்னப்படுவாய் என்றார் (யோவான் 35-37; 40-42) கேபா என்பதற்குப் பேதுரு என்று அர்த்தமாம். இந்த கேபா என்கிற வார்த்தை "கல்" என்று மொழியாக்கம் செய்யப் பட்டிருக்கிறது. "பேதுரு", "கேபா" ஆகிய இரண்டு வார்த்தைகளுமே "பாறை" அதாவது, பெரும் பாறையி லிருந்து பிரித்தெடுக்கப்பட்ட ஒரு கல்லைத்தான் குறிக்கிறது, இது பாறையின் விளிம்பைக் குறிக்காது.

## பேதுருவின் விசுவாச அறிக்கை

இயேசுவின் போதனையும், அவருடைய அற்புத அடையாளங் களும் அவர் தான் கிறிஸ்து என்று அவருடைய சீஷர்களை நம்பச் செய்தது. ஆனால், அவருடைய வார்த்தைகளைக் கேட்ட எல்லோரை யும் நம்பச் செய்யவில்லை.

பின்பு, இயேசு பிலிப்பு செசரியாவின் திசைகளில் வந்த போது, தம்முடைய சீஷரை நோக்கி; மனுஷ குமாரனாகிய என்னை ஜனங்கள் யார் என்று சொல்லு கிறார்கள் என்று கேட்டார். அதற்கு அவர்கள்; சிலர் உம்மை யோவான் ஸ்நானன் என்றும், சிலர் எலியா என்றும்; வேறு சிலர் எரேமியா அல்லது தீர்க்கதரிசிகளில் ஒருவர் என்றும் சொல்லுகிறார்கள் என்றார் கள். அப்பொழுது அவர் நீங்கள் என்னை யார் என்று சொல்லு கிறீர்கள் என்று கேட்டார். சீமோன் பேதுரு பிரதியுத்தரமாக; நீர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனா கிய கிறிஸ்து என்றான். இயேசு அவனை நோக்கி; யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கிய வான்; மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார் (மத். 16:13-17). அதே விசுவாசம் இன்றும் தேவனுடைய ஆசீர்வாதங் களைக் கொண்டு வருகிறது. ஆனால், பேதுருவின் நாட்களில் வாழ்ந்த மக்களைப் போல் இன்று வாழும் மக்களும் இயேசு யார் என்பதைப் பற்றி வித்தியாசமான அபிப்பிராயங்களைக் கொண்டிருக் கிறார்கள்.

பின்னர் இயேசு கப்பர்நகூமில் திரளான ஜனங்களுக்குப் போதித் தார். அந்த ஜனங்கள் இது கடினமான உபதேசம் என்று சொல்லி அவரை விட்டுப் போய்விட்டார்கள், அவரு டைய சீடரில் அநேகருக்கும் அது கடினமான உபதேசமாகத் தான் காணப்பட்டது. இயேசு அவர்களைப் பார்த்து நீங்களும் போய் விட மனதா யிருக்கிறீர்களோ என்று கேட்டபோது பேதுரு அதற்குப் பிரதியுத்திரமாக, "ஆண்டவரே, யாரிடத்தில் போவோம் நித்திய ஜீவ வசனங்கள் உம்மிடத் தில் உண்டே; நீர் ஜீவனுள்ள தேவ னுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நாங்கள் விசுவாசித்தும் அறிந்தும் இருக்கிறோம் என்றான் (மத். 6:67-69). சீடர்களுடைய புரிந்து கொள்ளுதலுக்கு ஓர் எல்லை இருந்தது. ஆனால், கிறிஸ்துவின் மீது அவர்களுக்கிருந்த விசுவாசம் அவரை நம்பவும் அவர்

போதித்திவைகளெல்லாம் உண்மையென்றும் ஏற்றுக்கொள்ள காரணமாயிருந்தது. கிறிஸ்துவின் மீது வைக்கும் விசுவாசத்திற்கு இன்றும் அதே தாக்கம் உண்டு.

இன்று நம்மிடம் நித்திய ஜீவ வசனங்கள் இருக்கின்றன. இயேசு தம்முடைய சீஷர்களை விட்டுப் போனபோது தம்முடைய வார்த்தையை அவர்களுக்குக்கொடுக்கும்படி பரிசுத்த ஆவியானவரை அனுப்பினார். அவர்கள் அவருடைய வார்த்தையை புதிய ஏற்பாட்டு வாக்கியங்களில் நமக்குத் தந்திருக்கிறார்கள். நம் விசுவாசம் அந்த வார்த்தையினாலே வருகிறது (ரோமர் 10:17). இயேசு சிலுவையில் அறையப்படுவதற்கு முந்தைய இரவில் தம்முடைய சீஷர்களைப் பார்த்து, இன்னும் அநேகங் காரியங்களை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதாயிருக்கிறது, அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள் என்றார். (யோவான் 16:12-15)

பேதுரு பிலிப்பு செசரியாவிலும், கப்பர்நகூமிலும் வெளிப்படுத்திய விசுவாசம் நம்மிடம் இருக்கிறதா? நாம் அப்படிச் செய்தால், நாம் கிறிஸ்துவை முழுமையாக நம்பி, அவர் ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்துவாக இருக்கிறபடியால் அவர் போதிக்கிற எல்லாவற்றிற்கும் நம் இருதயங்களை திறந்து வைத்திருப்போம். ※

**தேவன் நம் துணையாயிருப்பதால் நமக்குக் கிடைக்கும் பலன்**

1. தேவன் எப்போதும் நம்முடைய கால அட்டவணையின்படி காரியங்களைச் செய்யாமல் அவருடைய திட்டத்தின்படி செய்கிறாரென்பது.
2. தேவனுடைய நியாயத்தீர்ப்பு நீதியுள்ளது. தேவன் அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாய் அவனவனுக்குப் பலனளிப்பார் என்பது [ரோமர் 2:6]
3. அவரை நாம் தேடும் போது கண்டடைவோம் என்பது. [மத். 7:7]
4. ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேர முடியும். [எபி. 4:16]
5. நாம் முதலாவது அவருடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுகிறபடியால் தேவன் நம்முடைய தேவைகளை சந்திக்கிறார். [மத். 6:23]

# எருசலேமுக்கு வெகுதூரமா ?

# Is It Too Far To Jerusalem?

*W. Douglas Harris*

" *நீங்கள் எருசலேமுக்குப் போகிறது உங்களுக்கு வருத்தம்* " (1ராஜாக்கள் 12:28); பின்னணித் தகவலுக்காக முழு அதிகாரத்தையும் வாசியுங்கள்.)

இந்த அதிகாரம் ரெகொபெயாம் அரியணையில் ஏறின பிறகு இஸ்ரவேல் ராஜ்யம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட சம்பவங்களைப் பதிவு செய்திருக்கிறது. ரெகொபெயாம் தன்னுடைய ராஜ்யத்தில் ஜனங்களுடைய குறைகளைத் தீர்க்க முதியோர்களின் ஆலோசனையைக் கேளாமல் வாலிபர்களின் ஆலோசனையைப் பின்பற்றினான். அதன் விளைவாக பத்துக் கோத்திரத்தார் அவனுக்கு விரோதமாக கலகம் செய்து எகிப்துக்கு தப்பியோடிய யெரோபெயாமை தங்கள் ராஜாவாக இருக்கும்படி அழைப்பித்தார்கள். யெரோபெயாம் தன்னுடைய ராஜ்யத்தை விக்கிரக ஆராதனையை அடிப்படையாக வைத்து ஸ்தாபித்தான். இவன் ஜனங்கள் எருசலேமுக்கு போய் கர்த்தருக்கு பலிகளைச் செலுத்தினால் (எருசலேம் தான் தேவனால் அங்கீகரிக்கப்பட்ட இடமாக இருந்தது) அவர்கள் தன்னை கைவிட்டு விடுவார்கள் என்று பயந்தான், எனவே, அவன் பெத்தேலிலும், தாணிலும் இரண்டு பொன்கன்று குட்டிகளை ஸ்தாபித்தான். பின்பு அவன் ஜனங்கள் எருசலேமிலுள்ள தேவாலயத்திற்குப் போய் தேவனை ஆராதிப்பது அவர்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தும் என்று சொல்லி அவர்களுடைய மனசாட்சியை சாந்தமாக்கினான். இந்த மாம்சீகக் கவர்ச்சியும், சுகபோக சிநேகமும் அன்றும் இன்றும் ஆபத்தானவைகளாகவும், நம்மை உணர்வற்றவர்களாகவும் ஆக்குகின்றன.

## எருசலேமின் சிறப்பு

எருசலேம் எப்போதுமே யூதர்களுக்கு முக்கியமானதாக இருந்தது. அது அவர்களுக்கு விசேஷித்த கவர்ச்சியையும், வசீகரத்தையும் கொடுத்தது. அது அவர்களுடைய தலைநகரமாகவும், அரசாட்சி செய்கிற இடமாகவும், ஆராதனையின் மையமாகவும், அது மகாராஜாவின் நகரமாகவும் இருந்தது (மத். 5:35). சிறைவாசத்தின் போது தானியேல் எருசலேமை நோக்கி ஜெபித்திருக்கிறார். நெகேமியாவும் சிறைவாசத்தில் இருந்தபோது, எருசலேம் பட்டணம் பாழாய்க் கிடந்தபோது அதைக் கேள்விப்பட்டு அதற்காக அழுதார் (தானி. 6:10; நெகே. 2:3). யூதர்களுக்கு எருசலேம் மீதான பொதுவான அன்பும், மனநிலையும் சங். 137:5,6 வசனங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது (சங். 137:5,6).

உருவக நடையில், எருசலேம் பழங்கால இஸ்ரவேலர்களுக்கு எந்த அளவு முக்கியமானதாக இருந்ததோ, அந்த அளவு இன்றும் புதிய ஏற்பாட்டு சபையை மீட்டமைக்க வேண்டும் என்று நினைப்பவர்களுக்கும் முக்கியமாக இருக்கிறது. பேதுரு தேவ ஆவியினால் ஏவப்பட்டு எருசலேமை " ஆதியிலே " என்று குறிப்பிடுகிறார் (அப். 11:15). அப்போஸ்தலருடைய நடபடிகள் இரண்டாம் அதிகாரத்தில் இடம் பெற்றுள்ள சம்பவங்கள், அநேக காரியங்களின் தொடக்கத்தைக் குறிக்கின்றன. நற்செய்தியைப் பிரசங்கித்தல் மற்றும் அதன் உபதேசச் சட்டங்களுக்குக் கீழ்ப் படியும்படியான கட்டளை, கிறிஸ்துவின் இரத்தத்தால் உறுதி செய்யப்பட்டு புதிய உடன்படிக்கை, இரட்சிப்பு பற்றிய நற்செய்தியின் திட்டம், பாவ மன்னிப்புக்கென்று இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானம், பிரதான கட்டளை சம்பந்தமான கிறிஸ்துவின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல், கிறிஸ்துவின் சபையின் பிறப்பு, கிறிஸ்துவால் அங்கீகரிக்கப் பட்ட ஆராதனை, கிறிஸ்துவின் அப்போஸ்தலர்களுக்கான அதிகாரம், மற்றும் தாவீதின் சிங்காசனத்தில் கிறிஸ்துவின் ஆளுகை.

" எருசலேம் " என்கிற வார்த்தை இன்று தேவனுடைய உண்மையான சித்தத்தை சித்தரிக்க உருவக நடையில் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. சுவிசேஷம் முதன் முதலாக எருசலேமில் பிரசங்கிக்கப் பட்டபடியால் இன்றும் அதே சுவிசேஷம் மாற்றப்படாமல் பிரசங்கிக்கப்படும் போது பழைய எருசலேமின் சுவிசேஷம் என்று விவரிக்கப்படுகிறது.

### இன்றும் அநேகருக்கு வெகுதூரமாய் இருக்கிறது

இன்றும் கிறிஸ்தவத்தில் அநேகர் எருசலேமை வெகுதூரமாகக் காண்கிறார்கள். எருசலேமில் ஆரம்பிக்கப்பட்ட சபையை மீட்டமைக்கும்படியாக, மனிதர்களால் ஏற்படுத்தப்பட்ட கொள்கை கோட்பாடுகளைக் கை விட்டு, புதிய ஏற்பாட்டை மாத்திரம் தங்கள் ஒரே வழிகாட்டியாக எடுத்துக்கொண்டு, கத்தோலிக்கம் மற்றும் ப்ராட்டஸ்டண்ட் பிரிவுகள் தொடங்கப்படுவதற்கு முன்பு ஆதியில் அல்லது முதல் நூற்றாண்டில் என்ன நடந்தது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புவதில்லை. அநேகர் பக்தி ரீதியாக தங்கள் உறவினர்களை எதிர்த்து நிற்க விரும்புவதில்லை, அதே போல பல தலைமுறைகளாக அவர்கள் பின்பற்றி வந்த பழக்க வழக்கங்களை விட்டு எருசலேமுக்குத் திரும்பி, சபைக்கான தேவ ஆவியினால் ஏவப்பட்ட மாதிரியைப் பின்பற்றவும் அவர்கள் விரும்புவதில்லை.

எபேசியர் 4:4-6ல் இடம் பெற்றுள்ள ஒரே சரீரம், ஒரே ஆவி; ஒரே கர்த்தர், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும் என்கிறபடி திட்டத்தில் உள்ள பக்தி ரீதியான ஒற்றுமையை அடைய எருசலேமுக்குப்போக அநேகர் வெகு தூரமாக எண்ணுகிறார்கள். இது தான் எருசலேமின் சுவிசேஷம் இந்த சுவிசேஷத்தினால் அல்லாமல் வேறு எந்த ஆதாரத்தினாலும் அல்லது திட்டத்தினாலும் ஒற்றுமையை

ஏற்படுத்த முடியாது. பிரிவினைகளி னாலே ஒரு போதும் ஒற்றுமையை அடைய முடியாது. ஞானஸ்நானத்தில் ஏற்படுகின்ற ஆவிக்குரிய செயல் பாட்டை மீட்டமைக்க எருசலேமுக்குப் போவதை சிலர் தூரமாக நினைக் கிறார்கள். வெளிப்படையான செயல் - தெளித்தல் அல்லது ஊற்றுதல் போன்றவைகள் எளிதானதாக, வசதியானதாக இருந்தாலும் அது அங்கீகரிக்கப்படாத செயலாக இருக்கிறது. எருசலேம் சுவிசேஷம், ஞானஸ்நானம் என்பது தண்ணீரில் அடக்கம் பண்ணப்படுதல் என்று போதிக்கிறது (கொலோ. 2:12; ரோமர் 6:34).

பலர் கிறிஸ்துவாலும், அவரு டைய அப்போஸ்தலர்களாலும் அங்கீகரித்த குரல் இசையை நடை முறைப்படுத்த எருசலேமுக்குப் போகச் சிரமப்படுகிறார்கள் (எபே. 5:9; கொலோ. 3:16).

மத உலகைச் சார்ந்த பெரும் பாலானோர் ஞானஸ்நானத்தைப் பற்றிய வேதாகம மாதிரிக்காகவும், சபைக்கு வேத அடிப்படையிலான பெயருக்காகவும், சபையைப் பற்றிய வேத உபதேசத்திற்காகவும் வாரந் தோறும் அனுசரிக்க வேண்டிய கர்த்தருடைய பந்தி உட்பட வேத அடிப்படையிலான ஆராதனைக் காகவும் எருசலேமுக்குப் போவதை தூரமாகக் காண்கிறார்கள்.

முடிவுரை :

எருசலேம் சுவிசேஷத்திற்கு நீங்கள் கீழ்ப்படிந்திருக்கிறீர்களா? (அப். 2:22-47 வசனங்களிலிருந்து எருசலேமில் தேவ ஆவியினால் ஏவப்பட்ட கிறிஸ்துவின் அப்போஸ்த லர்களால் என்ன எதிர்பார்க்கப்பட்ட தென்று நாம் கற்றுக்கொள்கிறோம். அங்கே கூடியிருந்தவர்கள் அறிவிக் கப்பட்ட அல்லது பிரசங்கிக்கப்பட்ட கிறிஸ்துவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதலைக் கேட்டார்கள். அவர்கள் கிறிஸ்து வைக் கொலை செய்ததற்காக குற்றஞ் சாட்டப்பட்டார்கள். அவர்கள் இருதயத்தில் குத்தப்பட்டு கதறி னார்கள், இரட்சிக்கப்பட தாங்கள் என்ன செய்ய வேண்டுமென்று கேட்டார்கள். மேலும், கிறிஸ்து வுக்குள் விசுவாசிகளாக பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளும் படியாக மனந்திரும்பி ஞானஸ் நானம் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார்கள். இதுதான் "ஆரம்பமாக" இருந்தது.

*நீங்கள் எருசலேம் போவதற்கு அது வெகுதூரத்தில் இருக்கிறதா?*

**நீங்கள் எப்படி?**

**வெறுமனே கிறிஸ்துவை அறிந்தவனாக வாழ்வதில் எவ்வித பயனும் இல்லை. மாறாக, மெய்க்கிறிஸ்தவனாக வாழ்வதில் தான் எல்லா ஆசீர்வாதங்களும் உண்டு. (எபே. 1:3)**

# முழுமையான சத்தியம்
## *Absolute Truth*
### *Ancil Jenkins*

சத்தியமாவது என்ன? இது பிலாத்து இயேசுவிடம் கேட்ட கேள்வி (யோவான் 18:38) ஜனங்கள் பல நூற்றாண்டுகளாக கேட்ட கேள்வியை பிலாத்து திரும்பவும் கேட்டான். தத்துவ ஞானத்தைப் படிப்பதன் ஒரு நிலை, சத்தியம், என்னவென்று புரிந்து கொள்வதற்கும், மனிதன் அதை எப்படி புரிந்து கொள்கிறான் என்பதைப் புரிந்து கொள்வதற்கும் அவசியமாயிருக்கிறது. ஆனால், ஒரு கிறிஸ்துவனுக்கு இந்த கேள்வி ஒரு பிரச்சனையாக இருக்கக் கூடாது. வேதாகமம் இவ்விதமாக சொல்லுகிறது. தேவனிடத்தில் கேட்டிருக்கிற சத்தியத்தை உங்களுக்குச் சொனன மனுஷனாகிய என்னைக் கொல்லத் தேடுகிறீர்கள் (யோவான் 8:40). இயேசு நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் என்று பதிலளித்தார் (யோவான் 14:16). உம்முடைய சத்தியத்தினாலே அவர்களைப் பரிசுத்தமாக்கும்; உம்முடைய வசனமே சத்தியம் (யோவான் 17:17)

தேவனுக்குள்ளும், அவருடைய குமாரனுக்குள்ளும், அவருடைய வார்த்தைக்குள்ளும் இருக்கிற முழுமையான உண்மையை ஏற்றுக் கொள்வது கிறிஸ்தவத்திற்கு எப்படி அடிப்படையாயிருக்கிறது என்பதை கவனியுங்கள்! கிறிஸ்துவின் விரோதிகளான மனிதக் கொள்கை, தாராளக் கொள்கை போன்றவைகளை எதிர்த்துப் போராடுவதற்கு இவை யுத்த களமாக உள்ளது. சத்தியம் அறிந்து கொள்ளக் கூடியது மற்றும் மாற்ற முடியாதது என்னும் உண்மையை இந்தக் கருத்துக்கள் மாற்றுவதில்லை, மாற்றவும் முடியாது.

சமீபத்தில் வெளியான ஒரு ஆய்வைக் கண்டு நான் பெரிய அளவில் ஆச்சர்யப்படவில்லை. அது என்னவென்றால், முழுமையான முழுமையான சத்தியத்தை ஏற்றுக் கொண்ட சில மக்களின் புள்ளி விபரம் தான் அது. அதாவது, அமெரிக்கர்களில் வெறும் 19 சதவீதத்தினர் தான் முழுமையான சத்தியத்தை உறுதியாக நம்புகிறார்கள். இவர்களில் மறுபடியும் பிறந்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களில் இந்த எண்ணிக்கை வெறும் 25 சதவீதம் தான்.

இந்தப் புள்ளி விபரங்கள் சுவிசேஷத்தை இவ்வுலகிற்கு எடுத்துச் செல்வது எவ்வளவு கடின மானது என்பதை நமக்குக் காட்டு கிறது. பத்தில் எட்டு பேர் சத்தியத் தை முழுமையாக அறிந்து கொள்வது சாத்தியமல்ல என்று உறுதியாக நம்புவதால், வேதாகமம் தன்னை சத்தியமாக சொல்லிக் கொள்வதால் அநேகமாக அவர்கள் வேதாக மத்தை நிராகரிப்பார்கள். வேதாகமம் சத்தியமாக ஏற்றுக் கொள்ளப்படா விட்டால் ஒருவர் தன்னை தேவனு டைய அறிவின் ஒரே வல்லமையுள்ள ஆதாரத்திலிருந்தும் இயேசு கிறிஸ்து வினிடமிருந்தும் அவருடைய சுவிசேஷத்திலிருந்தும் துண்டித்துக் கொள்கிறார். இது நம்முடைய தனிப் பட்ட போதனையை ஒரு புதிய கண்ணோட்டத்தில் வைக்க வேண்டும். நாம் போதிப்பதற்கு முன்பாக பொதுவாக சத்தியத்தை மக்கள் ஏற்றுக்கொள்ளும்படி செய்ய வேண்டும்.

இருந்தபோதிலும், முழுமை யான சத்தியத்தை போதிக்கும் உரிமையை நாம் சம்பாதித்துக் கொள்ள வேண்டும். நாம் முழுமை யான சத்தியத்தை விசுவாசிக்க வில்லையென்றால் அதைப் பிரசங் கிப்பது பொருத்தமற்ற ஒன்றாகி விடும். ஒரு சராசரி நபரை விட தங்களை கிறிஸ்தவர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களில் எத்தனை பேர் முழுமையான சத்தியத்தை நம்புகிறார்கள்? ஆய்வின்படி வெறும் 6 சதவீதத்தினர் தான்! இந்த புள்ளி விவரங்கள் சரியாக இருந்தால், தங்களை கிறிஸ்தவர்களென்று சொல்லிக் கொள்பவர்களில் நான்கில் மூன்று பேர் முழுமையான சத்தியத்தை உறுதியாக நம்பு வதில்லை என்று தான் பொருள்படு கிறது. இவ்விதமாக பக்தியுள்ள அநேக ஜனங்கள் ஒருவர் எதை நம்புகிறார் என்பது உண்மை யாகவே ஒரு பொருட்டல்ல என்று உறுதியாக நினைக்கிறார்கள். தேவனை ஆராதிப்பதென்பது ஒரு தனிநபர் விருப்பத்திற்கும், விளக்கத் திற்கும் உரிய ஒரு விஷயமாகி விட்டது. இத்தகைய தனிப்பட்ட விசுவாசம் சபைக்கு ஒருவர் உண்மையாயிருப்பதை எவ்விதத் திலும் வளர்க்காது.

இதில் பரிதாபகரமான நிலை என்னவென்றால், நிச்சயமின்மை தான். ஒன்றுமே முழுமையான உண்மையாக இல்லையென்றால், மன்னிப்பு உண்மையா? ஜெபம் ஏதாவது தாக்கத்தை ஏற்படுத்து கிறதா? பரலோகம் இருக்கிறதா? ஒருவர் இந்த முழுமையான சத்தியத்தை விசுவாசித்து அதற்கு தன்னை அர்ப்பணிக்காவிட்டால், வாழ்க்கைக்கு கொஞ்சம் ஆறுதலும், கொஞ்சம் அர்த்தமும் தான் இருக்கும்.

நாம் பூரணமான தேவனை, கிறிஸ்துவை, பரிசுத்த ஆவியான வரை, வேதாகமத்தை விசுவாசிக்கிற வர்களாக இருக்க வேண்டும். இந்த விசுவாசத்தின் அடிப்படையில் அவர் களிடத்தில் நம் வாழ்க்கையை நாம் அர்ப்பணிக்க வேண்டும். இத்தகைய அர்ப்பணிப்பு நாம் வாழ்க்கையை மாற்றும் வழிகளில் வாழவும், செயல் படவும் நம்மை வழிநடத்தும்.



# பரிசேயர்களிடமிருந்து நாம் எதை கற்றுக்கொள்ள முடியும்?

## What Can We Learn From the Pharisees?

*Cecil May, Jr.*

**ப**ரிசேயர்கள் தாங்கள் வாழ்ந்த நாட்களில் புதுமையையோ, மாற்றத்தையோ விரும்பாத பழமை வாதிகளாக இருந்தார்கள். அவர்களுடைய பெயரே பாவத்திலிருந்தும், அசுத்ததத்திலிரும் பிரித்தெடுக்கப் பட்டவர்கள் என்கிற உட்பொருளைக் கொண்டதாக இருந்தது. அவர்கள் பிரமாணங்களைக் கைக்கொள் வதில் மிகுந்த கவனமாகவும், மத சம்மந்தமான பாரம்பரியங்களை கனப்படுத்துவதில் மிகுந்த ஜாக்கிரதை உடையவர்களாகவும் இருந்தார்கள்.

இருந்தபோதிலும் இயேசு அநேகக்காரியங்களுக்காக அவர்களை கடிந்து கொண்டிருக்கிறார். அவர்கள் தங்கள் மதத்தைப் பற்றி அதிகமாகப் பேசினார்கள் (மத். 23:2,3) மற்றவர்களைக் கடுமையாக குற்றம் தீர்த்துவிட்டு அவர்கள் சாக்கு போக்குகளைச் சொன்னார்கள்

(மத். 23:4), அவர்கள் தங்கள் பாரம்பரியத்திற்கு தங்களை அதிகமாக அர்ப்பணித் துக் கொண்டார்கள், அவர்கள் தங்கள் பாரம்பரியங்களை தேவனு டைய பிரமாணங்கள் போல் மற்றவர் கள் மீது சுமத்தி, அவைகள் தேவனு டைய பிரமாணங்களோடு முரண் பட்டபோது கூட அவைகளை கனப் படுத்தினார்கள்.

இயேசு அவர்களில் சிலரைக் கடுமையாக குற்றம் சாட்டினார் அதற்கான காரணங் களைப் பாருங்கள்.

அவர்கள் தாங்கள் யாருக்குக் கீழ்ப்படிகிறோம் என்பதற்குப் பதிலாக தங்கள் கீழ்ப்படிதலில் நம்பிக்கை வைத்தார்கள். இயேசு தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலரைக் குறித்து, அவர் ஒரு உவமை யைச் சொன்னார் (லூக். 18:9). பரிசேயன் தனக்குள்ளே ஜெபம் பண்ணினான் (லூக்கா 18:11). அவன் தான் செய்தவைகளைக் குறித்து தேவனிடம் பெருமை பாராட்டினான். " நான் உபவாசித்தேன், ஜெபித் தேன், தானதர்மங்களைச் செய் தேன் " என்று. அவனுடைய ஜெபத்தி னால் அவன் எதையும் பெற்றுக் கொள்ளவில்லை, ஏனென்றால், அவன் எதையும் கேட்கவில்லை. தனக்கு எதுவுமே தேவையில்லை என்று உணர்ந்தான்.

அவர்கள் தங்களால் எவைகளைக் கைக் கொள்ளமுடியுமோ அதற்குத் தகுந்தவாறு பிரமாணங்களை சரிப்படுத்திக் கொண் டார்கள்.

உபவாசம், ஜெபம், கொடுத்தல் போன்றவைகள் குறிப் பிட்டவைகளாகவும், அளவிடக் கூடியவைகளாகவும் இருந்தன. அளவிடக்கூடிய காரியங்களை அவர்கள் நன்றாகக் கை கொண்டார் கள். அவர்கள் ஒற்தலாமிலும், வெந்தையத்திலும், சீரகத்திலும் தசமபாகம் செலுத்தினார்கள். அவர்கள் அப்படிச் செய்தபடியால் எந்தத் தவறும் செய்யவில்லை. இயேசு அவர்களைப் பார்த்து "இவை களையும் செய்ய வேண்டும், அவை களையும் விடாதிருக்க வேண்டும் " என்று சொன்னார் (மத். 23:23).

அவர்கள் பிரமாணத்தின் கடினமான பகுதிகளை விட்டுவிட்டார்கள்.

அவர்கள் நீதியையும், இரக்கத்தையும், விசுவாசத்தையும் விட்டு விட்டார்கள். (மத். 23:23) அவர்கள் சடங்காச்சாரங்களில் ஊறிப்போய் ஜனங்களை மறந்து விட்டார்கள்.

மேற்சொல்லப்பட்ட காரியங் களைக் குறித்து நாம் ஜாக்கிரதை யுள்ளவர்களாக இருக்க வேண்டும். நாமும் அதேவிதமாக செய்யக் கூடும். தேவன் கிருபையை அளிக்க முன்வரும் போது நம் பதிலின் அவசியமான பகுதியாக ஞானஸ் நானம் இருக்கிறது. வாரந்தோறும் கர்த்தருடைய பந்தி, இசைக் கருவிகள் இல்லாமல் பாடல், சபை ஆளுகை போன்றவைகள் நாம் தேவனுக்கு கீழ்ப்படிந்திருப்பதற்கு மிக முக்கியமானது. இயேசு அப்போதும் " *இவைகளையும் செய்ய வேண்டும், அவைகளையும் விடாதிருக்க வேண்டும்* " என்று சொல்வார்.

ஆயினும், இவைகளையெல்லாம் செய்தும், நமக்கு கிருபை அவசியம் இல்லை என்று நினைத்தால், இந்தக் காரியங்கள் மட்டும் நம்மை பாவிகளிடமிருந்து பிரித்துவிடும் என்கிற நம்பிக்கை உடையவர்களாக இருந்தால், நியாயப்பிரமாணத்தின் " விசேஷித்தவைகளை நினைத்துப் பாருங்கள். நாம் உண்மையாக இரக்கத்தைக் காட்டுகிறோமா? தகப்பனற்றவர்களை, விதவைகளை சந்திக்கிறோமா, உணவு இல்லாதவர்களுக்கு உணவு கொடுக்கிறோமா, ஏழைகளுக்கு வஸ்திரங்கள் கொடுக்கிறோமா? நமக்குத் தெரிந்த எல்லா நன்மைகளையும் செய்கிறோமா? தோலின் நிறப்பாகுபாடின்றி ஒவ்வொரு சகோதரனையும் சகோதரனாக நடத்துகிறோமா? நம்மை நேசிக்காதவர்களை நேசிக்கிறோமா? வித்தியாசமான இனத்தை அல்லது மதத்தைச் சார்ந்தவர்களிடம் அன்பான அயலகத்தாராக நம்மால் நடந்து கொள்ள முடியுமா?

அந்தக் காரியங்களையும் சிந்தித்துப் பார்த்தால், ஒருவேளை நாம் இன்னும் அதிகமாக இரக்கமுள்ளவர்களாக உண்மையுள்ளவர்களாக இருப்போம். குறைந்தபட்சம் நாம் " தேவனே! பாவியாகிய என் மேல் கிருபையாயிரும் " என்று ஜெபிப்பதற்கு நாம் தூண்டப்பட வேண்டும்.

## இளைஞர்களுக்கு ஞானியின் பத்து ஆலோசனைகள்
### (நீதி. 1-10 அதிகாரங்கள்)

1. ஞானத்திற்கான முதல்படி தேவன் என்பதை ஏற்றுக்கொள் (நீதி. 1:7)
2. நீதியின் வழிகளில் நட (நீதி. 2:20)
3. தேவனிடத்தில் ஞானத்தையும், உதவியையும் கேள் (நீதி. 3:6)
4. பெற்றோருக்குக் கீழ்ப்படி (நீதி. 3:11,12; 2 தீமோ. 3:2)
5. கூடா நட்புகளை விலக்கு (நீதி. 1:10–19; 4:14–19)
6. இச்சக வார்த்தைகளுக்கு மயங்காதே (நீதி. 5:23)
7. கர்த்தர் வெறுக்கும் ஏழு காரியங்களுக்கு விலகியிரு (நீதி. 6:17,18,19)
8. மோசமான பெண்களைத் தவிர் (நீதி. 7:15–27)
9. குணாதிசயமே உண்மையான ஐசுவரியம் (நீதி. 11)
10. உன் முழு சரீரத்தையும் தேவனுக்குக் கொடு (நீதி. 4:33–26)

# கடிந்து கொள்ளுதல்

# REPROVING

***Tom Kelton***

வேத வாக்கியங்கள் கடிந்து கொள்ளுதலுக்கு பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது (2 தீமோ. 3:16). அவைகள் தவறான நடக்கையையும், கள்ளப் போதகத்தையும் எதிர்கொண்டு கடிந்து கொள்ளுகிறது. கடிந்து கொள்ளுதல் என்பது "சத்தியத்தின் வெற்றிகரமான கரத்தை வல்லமையாக எடுத்துப் பயன்படுத்துவதனால் ஒருவரை அதட்டுவதாகும் ". கடிந்து கொள்வதின் நோக்கம், ஒருவரை பாவத்தை அறிக்கை செய்யும் அளவுக்குக் கொண்டு செல்லாவிட்டாலும், குறைந்தபட்சம் அந்த நபருடைய பாவத்தை கண்டித்து உணர்த்தும் அளவுக்காவது இருக்க வேண்டும்".

கடிந்து கொள்ளுதலின் இரு நிலைகள் வேத வாக்கியங்களில் வெளிப்படையாக இருக்கிறது. பாவ நடக்கையைக் கடிந்து கொள்ளுதலும், தவறான போதகத்தைக் கடிந்து கொள்ளுதலுமாகும். எபேசு பட்டணத்திலிருந்த சபையை தூய்மையாக்க முயற்சி செய்து கொண்டிருந்த தீமோத்தேயுவிற்கு பவுல் இவ்விதமாக அறிவுறுத்தினார், " *சமயம் வாய்த்தாலும், வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம் பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும், கண்டனம் பண்ணி, கடிந்து கொண்டு, புத்தி சொல்லு* " (2 தீமோ. 4:2). அநேகர் பிரசங்கத்தை சகித்துக் கொள்ள முடியாத காலம் வருவதாக இருந்தாலும் கூட ஜனங்கள் பாவத்திலிருந்து திரும்பத்தக்கதாக தீமோத்தேயு பிரசங்கிக்கவும், பயன்படுத்தவும் வேண்டியதாயிருந்தது (வசனம் 3).

(எபி. 4:12,13) வசனங்களும் பாவத்தைக் கடிந்து கொள்வது பற்றி பேசுகிறது. வசனம் 12 தேவனுடைய வார்த்தை இருபுறமும் கருக்குள்ள எந்தப் பட்டயத்திலும் கருக்கானதாயும், ஆத்துமாவையும், ஆவியையும், கணுக்களையும் ஊனையும் பிரிக்கத்தக்கதாக உருவக்குத்துகிறதாயும், இருதயத்தின் நினைவுகளையும், யோசனைகளையும் வகையறுக்கிறதாயும் இருக்கிறது. வசனம் 13, " *அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்கு முன்பாக நிர்வாணமாயும், வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்க வேண்டும்*" என்று சொல்கிறது. தேவன் தம்முடைய வார்த்தைகளால் நம் இருதயங்களில் ஊடுருவுகிறார், அவருடைய கண்களுக்கு முன்பாக நம்மை திறந்த நிலையில் வைக்கிறார்.

வார்த்தை உண்மையாக, சரியாக பிரசங்கிக்கப்படும்போது, கிறிஸ்தவர்கள் தங்கள் பாவங்களில் கண்டித்து உணர்த்தப்படுவார்கள். எனவே, அவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து மனந்திரும்புவார்கள் அல்லது அதை விட்டுவிடுவார்கள். சிலருக்கு கர்த்தருக்கு கீழ்ப்படிய விருப்பம் இல்லையென்றால் தேவனுடைய வார்த்தையால் கடிந்து கொள்ளப்படுவதற்கு தங்களை அனுமதிக்கமாட்டார்கள். பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் *பகைக்கிறான்.* தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு ஒளியினிடத்தில் வராதிருக்கிறான் (யோவான் 3:20).

பிரசங்கியார்களால் கடிந்து கொள்ளுதலைப் பற்றியும், புத்தி சொல்லுதலைப் பற்றியும் போதிக்கப்பட்ட கிறிஸ்தவர்கள் வேதாகம உண்மை பற்றிய முழுமையான பிடிப்புடன் இருப்பார்கள், அவர்கள் காரியங்களை பகுத்துணராத குழந்தைகளைப் போல் இராமல் கள்ளப் போதனைகளை எளிதாக அடையாளங்காண்கிற பலமான வாலிபர்களைப் போல் இருப்பார்கள். " *நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப் போல அடிபட்டு அலைகிறவர்களாயிருக்கக்கூடாது* " (எபே. 4:14).

## ஒருவர் நித்தியத்தை இழந்து போவதற்கான காரணங்கள்

1. சபை கூடி வருவதை விட்டுவிடுவதினால் (எபி. 10:25)
2. வேதாகமத்தை ஆராய்ந்து பார்க்காததினால் (அப். 17:11)
3. அவரவர் வரவுக்குத்தக்கதாக கொடுக்காமல் இருப்பதினால் (1 கொரி. 10:2)
4. இடைவிடாமல் ஜெபிப்பதைத் தவிர்ப்பதினால் (1 தெச. 5:17)
5. தேவனுடைய ஆலோசனைகள் எல்லாவற்றையும் அறிவிக்காமல் இருப்பதினால் (அப். 20:26)
6. ஒப்புக்கொடுக்கப்பட்டிருக்கிற விசுவாசத்திற்காக தைரியமாகப் போராடாமல் இருப்பதினால் (யூதா 3)
7. சகோதர, சகோதரிகளிடத்தில் அன்பு கூர்ந்து அதில் உள்ளடங்கியிருக்கிற காரியங்களைச் செய்யாமல் இருப்பதினால்



# தேவனுடைய குடும்பம்
## (அங்கே ஒவ்வொருவரும் முக்கியமானவர்)

## *GOD'S FAMILY*
### *(WHERE EVERYONE IS IMPORTANT*

***Roy D. Bakel***

"இப்படி அவர் ஜனங்களோடே பேசுகையில், அவருடைய தாயாரும், சகோதரரும் அவரிடத்தில் பேச வேண்டுமென்று வெளியே நின்றார்கள். அப்பொழுது, ஒருவன் அவரை நோக்கி; உம்முடைய தாயாரும், உம்முடைய சகோதரரும் உம்மோடே பேச வேண்டுமென்று வெளியே நிற்கிறார்கள் என்றான்.

தம்மிடத்தில் இப்படிச் சொன்னவனுக்கு அவர் பிரதியுத்தரமாக; என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி, தம்முடைய கையைத் தமது சீஷர்களுக்கு நேரே நீட்டி; இதோ, என் தாயும் என் சகோதரரும் இவர்களே! பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச்

சகோதரனும், சகோதரியும், தாயுமாய் இருக்கிறான் என்றார் (மத். 12:46-50).

மேற்சொல்லப்பட்ட வசனப் பகுதி ஆவிக்குரிய உறவு பற்றி அற்புதமான பாடத்தை நமக்குக் கற்றுத் தருகிறது. இயேசு சமீபத்தில் தான் தன்னுடைய போதகத்தினாலும், வல்லமையான அற்புதங்களினாலும் கலிலேயாவைச் சுற்றியுள்ள தேசம் முழுவதையும் ஆச்சரியத்தினாலும், பரவசத்தினாலும் நிரப்பியிருந்தார். அவருடைய கீர்த்தி தேசமெங்கும் பரவியது. அவர் எங்கெல்லாம் சென்றாரோ அங்கெல்லாம் திரளான கூட்டம் அவருக்குப் பின் சென்றது.

இயேசு தம்முடைய ஊழியத்தைத் தொடங்கின போது கிட்டத்தட்ட யாருமே இயேசுவைப் புரிந்து கொள்ளவில்லை. அவருடைய சொந்த சகோதரர்கள் கூட அவரை விசுவாசிக்கவில்லை (யோவான் 7:5). அவர் நாசரேத்துக்குத் திரும்பி வந்த போது, அவரு டைய இனத்தார் அவர் மதி மயங்கி இருக்கிறார் என்று சொல்லி அவரைப் பிடித்துக் கொள்ளும்படி வந்தார்கள். வேறுவிதமாகச் சொன்னால் அவருக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது என்று சொன்னார்கள் (மாற்கு 3:21). அவருடைய தாயாரும் சகோதரரும் அவரிடத்தில் பேச வேண்டுமென்று வெளியே நின்று கொண்டிருந்தார்கள். ஏனென்றால், திரளான கூட்டம் அவரைச் சூழ்ந்து கொண்டி ருந்தது. அவர்கள் எதற்காக அவரிடம் பேச விரும்பினார்கள் என்று வேதாகமம் சொல்லவில்லை. அவர்கள் இயேசுவை நெருங்க முடியாத ஒரு நிலை இருந்தபடியால், "உம்முடைய தாயாரும், உம்முடைய சகோதரரும் உம்மோடே பேச வேண்டுமென்று வெளியே நிற்கிறார்கள்" என்று ஒருவன் இயேசுவின் காதில் மெதுவாகச் சொல்லும்படி செய்தார்கள்.

அவரிடம் வந்த தகவலுக்கான அவருடைய பதில் ஆழமான அர்த்தத்தில் அவர் தம்முடைய நெருக்கமான உறவுகளுக்கு மட்டும் சொந்தக்காரர் அல்ல, அவர்களுடையவர் மட்டுமல்ல இயேசுவால் கொண்டு வரப்பட்ட தேவனுடைய வார்த்தையை விசுவாசித்து அதற்கு கீழ்ப்படிகிற யாவருக்கும் அவர் நெருங்கிய உறவினர் என்பதை அறிவிக்கும்படியாக இருந்தது. இயேசு தம்முடைய ஒரு கேள்வியினால் அவர்களை அதிர்ச்சியடையச் செய்தார்; " என் தாயார் யார்? என் சகோதரர் யார்? என்று சொல்லி தமது சீஷர்களுக்கு நேரே நீட்டி; இதோ என் தாயும், என் சகோதரரும் இவர்களே! பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும், சகோதரியும் தாயுமாய் இருக்கி றான் என்றார். வேறுவிதமாகச் சொன்னால், " தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவர்களே தம்முடைய குடும்பம் " என்று சொல்கிறார்.

இயேசு எவ்விதத்திலும் தம்முடைய பூமிக்குரிய குடும்பத்தின் மீது நன்றியில்லாதவர் போன்று பொருள்படும்படியாகப் பேசவில்லை. மாறாக, அவர் தம்முடைய நன்றியை அவர்களுக்கு வெளிப்படுத்தினார், இருந்தபோதிலும் அவருக்கு

தாயார் மீது தான் அதிகப் பிரியம், அந்த அளவுக்குப் பிரியமும், உறுதியுமான ஆவிக்குரிய உறவு இருப்பதாக அவர் சொன்னார். இயேசுவைப் பெற்று, பாலூட்டி வளர்த்து, ஆவலுள்ள இருதயத்துடன் அவரைப் பின்பற்றின தாயை அவர் குறைவாக மதித்தார் என்று ஒருவரும் ஒருபோதும் சொல்ல முடியாது. யாராவது அப்படி நினைத்தால், இயேசுவுடன் அவருடைய சிலுவைக்குச் செல்ல வேண்டும். அங்கே சிலுவையில் அவர் அனுபவித்த பாடுகளுக்கும், மிகுந்த வேதனைகளுக்கும் மத்தியில் தம்முடைய தாய் இப்பூமியில் வாழும் மீதமுள்ள நாட்களில் வாழத் தேவையான ஆறுதலைக் கொடுத்தார் (யோவான் 19:26,27).

இயேசு தம்முடைய தாயினிடத்திலும், உறவினர்களிடத்திலும் உண்மையாகவும், அன்பாகவும் அத்தனை வருடங்கள் இருந்திருந்தாலும், பரலோகத்திலிருக்கிற பிதாவை நோக்கிய தம் மனநிலையும், மேசியாவுக்கான அழைப்பும் மாம்சீக பந்தத்தை அவர் கீழாக வைக்க காரணமாயிற்று. அது இயேசுவுக்கு ஆவிக்குரிய உறவுகளில் பாடத்தைக் கற்றுக்கொடுக்க வாய்ப்பைக் கொடுத்தது. தேவனுடைய விருப்பப்படி அவர் நம்மைப் பயன்படுத்த நாம் விட்டுவிட்டால், நாம் அவருடைய குடும்பத்தின் அங்கமாயிருக்கிறோம் என்கிற கருத்தை வலியுறுத்த இயேசு இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தினார்.

தேவனுடைய வார்த்தையைக் கேட்டு அதற்கு கீழ்ப்படிகிறவர்கள் இயேசுவுக்கு நெருக்கமான உறவுகள் என்பதை அறிந்து கொள்வது எவ்வளவு கனமானது, சிலாக்கியமானது என்பதை எண்ணிப் பாருங்கள்! இந்த ஆவிக்குரிய உறவானது இயற்கையான மாம்சீக உறவைக் காட்டிலும் அதன் தன்மையில் ஓங்கி நிற்கிறது. மேலும், இது எந்த ஒரு இரத்த சம்மந்தமான உறவைக் காட்டிலும் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது. மனித பந்தங்கள் மாம்சீகப் பிரகாரமானது, மற்றும் தற்காலிகமானது. கிறிஸ்துவின் பந்தமானது ஆவிக்குரியது மற்றும் நித்தியமானது. இயேசு தம்மில் விசுவாசம் கொள்ளும் தம்முடைய தேவனுடைய குடும்பத்தில் சேர்த்துக் கொள்கிறார்; அவர் அவர்களை அன்பு மற்றும் இரக்கம் என்னும் கயிறுகளால் சேர்த்துக் கட்டுகிறார். " பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும், சகோதரியும், தாயுமாய் இருக்கிறான்" என்றார்.

தேவனுடைய சித்தத்திற்கு கீழ்ப்படிவது நம் சீஷத்துவத்தின் ஆவிக்குரிய பரீட்சையாயிருக்கிறது. இயேசு, பிதாவின் சித்தத்திற்குக் கீழ்ப்படிகிறவர்களைப் பார்த்து பிரியமான சகோதரனே, சகோதரியே, தாயே என்று பிரியமாக அழைக்கிறார். ஏன் அப்படி அழைக்கிறார்? ஏனென்றால், பிதாவுக்கு கீழ்ப்படிகிறவர்கள் அவர் எதிர்பார்க்கிறதைச் செய்கிறார்கள். ஒருவர் விசுவாசிக்கிறார், அதுதான் கீழ்ப்படிதலின் முதல்படியும், ஆரம்பமாயுமிருக்கிறது; அவர் தன்னுடைய கடந்த கால பாவங்களிலிருந்து மனந்திரும்புகிறார், இயேசுவைக் கிறிஸ்து என்று அறிக்கை செய்கிறார், பாவமன்னிப்புக்கென்று

ஞானஸ்நானம் பெறுகிறார். இந்தக் கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிறவர்கள் தேவனுடைய குடும்பமாகிய சபையில் சேர்க்கப்படுகிறார்கள். அவர்கள் அவருடைய சரீரத்தின் அங்கத்தினராயும், ஒருவருக் கொருவர் அவயவங்களாயும் இருக் கிறார்கள்.

நாம் தேவனுடைய மாபெரும் குடும்பத்தில் அங்கம் வகிக்கிறோம், தேவனைப் பொறுத்தவரை எவ்விதத்திலும் ஓர் அங்கத்தினர் மற்ற அங்கத்தினரை விட முக்கியமானவர் அல்ல. " நீங்கள் தேவனுடைய சித்தத்தை கவனித்து அதன்படி செய்தால், என் குடும்பத்தின் அங்கத்தினராயிருக்கிறீர்கள்" என்று இயேசு சொன்னார். நாம் பரிசுத்தவான்களின் கூட்டம், விசுவாசிகளின் கூட்டம், தேவனுடைய குடும்பம் என்றழைக்கப்படுகிற ஆவிக்குரிய ஐக்கியத்தின் அங்கமாயிருக்கிறோம்.


## ஆவிக்குரிய ஆராய்ச்சிப் பட்டியல்

1. மதசம்மந்தமாக நான் எதைப் போதிக்கிறேனோ, எதைச் செய்கிறேனோ அதற்கு வசன அடிப்படையில் காரணத்தைக் கொடுக்க முடியுமா? (1 பேதுரு 3:15; 1 பேதுரு 4:11).
2. நான் ஆவியோடும், உண்மையோடும் தொழுது கொள்ளுகிறேனா? (யோவான் 4:24).
3. வேதத்தில் இடம் பெறாத மதப் பெயரை நான் தரித்திருக்கிறேனா? (அப். 11:26; மத். 16:18).
4. நான் எந்த சபையில் அங்கம் வகிக்கிறேனோ அந்த சபை தேவனுடைய வார்த்தையில் குறிப்பிடப்பட்டிருக்கிறதா? (ரோமர் 16:16; மத். 16:18).
5. கிறிஸ்துவின் எளிய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய நான் மறுத்து விட்டேனா? (லூக். 6:46; அப். 2:38).
6. நான் என்னைக் கிறிஸ்தவனாகச் சொல்லிக் கொண்டு உலகப் பிரகாரமான காரியங்களில் என்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கிறேனா? (1 கொரி. 6:17).
7. சபையின் ஆராதனையிலிருந்து என்னை நான் விலக்கிக் கொள்கிறேனா? (அப். 20:7; எபி. 10:25)

**- Johnny Ramsey**

சபை

# நான் சுதந்திரமாயிருக்கிறேன்




*Jimmy Jividen*

உலகில் காணப்படும் ஏராளமான மதங்களின் குழப்பமான கோட்பாடுகளுக்கு மத்தியில், கிறிஸ்துவில் இருக்கும் உண்மையான சுதந்திரத்தை அறியும் ஒரு கூட்டத்தில் அங்கமாயிருப்பதற்காக நான் நன்றியுள்ளவனாயிருக்கிறேன்.

இந்தக் குழுவில் நான் எந்த மனிதக் கொள்கையையும் நம்ப வேண்டிய அவசியமில்லை, எந்த ஒரு மனித பாரம்பரியத்தையும் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை, எந்த ஒரு மத குருவையும் ஆதரிக்க வேண்டிய அவசியமில்லை. நான் வேதாகமத்தை மட்டும் பின்பற்ற சுதந்திரமாயிருக்கிறேன்.

இந்தக் குழுவில் நான் எந்த ஒரு வீணான ஆராதனை முறைமையிலோ, சபை ஆளுகை அமைப்பிலோ பங்கு பெற வேண்டிய அவசியமில்லை அல்லது இயேசு கிறிஸ்துவால் அங்கீகரிக்கப்படாத மதச் சடங்காச்சாரத்தில் கலந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. நான் இயேசுவை மட்டும் பின்பற்ற சுதந்திரம் பெற்றிருக்கிறேன்.

இந்தக் குழுவில் தேவனுடைய சித்தத்திற்கு எதிராக உள்ள எந்த ஒரு ஒழுக்கக்கேடான நடத்தைக்கோ, தேவ சித்தத்திற்கு எதிரான போதனைகளை

நான் அங்கீகரிக்கவோ, அவைகளோடு ஐக்கியம் கொள்ள வேண்டிய அவசியமோ இல்லை. இங்கே வேத வாக்கியங்களின் போதனைகளால் உணர்வடைந்திருக்கிற என் மனச்சாட்சியை நான் சுதந்திரமாகப் பின்பற்ற முடியும், இதை என் விசுவாச உறுதிப்பாட்டை சமரசம் செய்து கொள்ளாமலேயே செய்ய முடியும்.

இந்தக் குழுவில் நான் எந்த ஒரு மனித அமைப்போடும் இணையவோ அதற்கு ஆதரவு கொடுக்க வேண்டுமென்றோ எதிர்பார்க்கப்படுவதில்லை. தேவனால் திட்டமிடப்பட்டு, இயேசு கிறிஸ்துவால் ஸ்தாபிக்கப்பட்டு, பரிசுத்த ஆவியால் நிரப்பப்பட்டிருக்கிற கிறிஸ்துவின் சபையாக இருக்க நான் சுதந்திரமாயிருக்கிறேன்.

இந்தக் குழுவில் கடந்த கால விவகாரத்தையோ அல்லது வருங்கால புதுமையான தரிசனத்தையோ எவ்வித கேள்வியுமின்றி ஏற்றுக் கொள்ளும் அவசியம் எனக்கில்லை. நான் சுதந்திரமாக வேதாகமத்தைத் திறந்து, " வேத வசனங்கள் என்ன சொல்கிறது " என்று கேட்க முடியும்.

நான் மனித சபை பாரம்பரியங்களை உடைத்தெறிந்து விட்டேன். நான் மதகுருக்களின் எதிர்ப்பை தகர்த்தெறிந்து விட்டேன். தன்னைப் பற்றியோ அல்லது மற்றவர்களைப் பற்றியோ பட்சபாதமுள்ள கருத்துக்களை வெளிப்படுத்தும் மனித அனுபவங்களுக்கு அடிமைப்பட நான் மறுத்து விட்டேன்.

நான் மனித மதங்களிலிருந்து விடுபடும் அறிவிப்பை வெளியிட்டு இயேசு கிறிஸ்துவை மாத்திரம் பின்பற்ற அர்ப்பணித்திருக்கிறேன். கிறிஸ்துவின் சபையில் என்னைப் போல் உள்ள தேவனுடைய பிள்ளைகளின் ஐக்கியத்தில் மகிழ்ச்சி காண்கிறேன்.

### கர்த்தருக்குப் பயப்படுதல்

1. கர்த்தருக்குப் பயப்படுதல் ஞானத்தின் ஆரம்பம் (நீதி. 1:7)
2. கர்த்தருக்குப் பயப்படுகிற பயம் சுத்தமும் என்றைக்கும் நிலைக்கிறதுமாயிருக்கிறது (சங். 19:9)
3. கர்த்தருக்குப் பயப்படுகிறவனுக்குத் திட நம்பிக்கை உண்டு (நீதி. 14:26)
4. தீமையை வெறுப்பதே கர்த்தருக்குப் பயப்படும் பயம் (நீதி. 8:13)
5. சஞ்சலத்தோடு கூடிய அதிகப் பொருளிலும், கர்த்தரைப் பற்றும் பயத்தோடு கூடிய கொஞ்ச பொருளே உத்தமம் (நீதி. 15:16)

# இயேசுவின் இரத்தம்

## Blood of Jesus

*P.C. Philemon Rajah*

பிரியமானவர்களே !

உங்கள் யாவரையும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே வாழ்த்தி, " சத்தியத்தின் குரல் " மூலமாக சந்திப்பதிலே ஆண்டவருக்குள் அகமகிழ்கிறேன். இந்த மாதம் நாம் இயேசுவின் விலையேறப்பெற்ற இரத்தத்தைக் (1பேதுரு 1:18,19) குறித்து தியானிப்பதற்கு நமது கவனத்தை செலுத்துவோம்.

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மாத்திரமே நமக்கு பாவ மன்னிப்பாகிய மீட்பை கொடுக்க கூடியது (எபே. 1:7). நீதியுள்ள தேவன், மனிதனின் பாவ விடுதலைக்காக தனது குமாரனின் இரத்தத்தை வழிமுறையாக நேர்ந்து கொண்டார். இயேசு கிறிஸ்துவே நமக்காக அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி (வெளி. 13:8). சிலுவை, நமது பாவங்கள் தேவ குமாரனை எவ்வளவு வேதனைப்படுத்தியது என காணும் இடமாக உள்ளது.

### 1. பாவத்தின் பெருங்கொடுமை

தேவன் மோசேயின் மூலம் கொடுத்த பிரமாணத்தில் உள்ள பலி முறைமை பற்றி லேவியராகமத்தில் கூறியுள்ளார். இந்த புத்தகத்தில் ஆசாரியர்கள், செய்ய வேண்டிய பலிகள் மற்றும் இரத்தம் பற்றி கூறுகிறார்.

தேவன் பாவத்தின் மிகக் கொடுமையான தன்மை பற்றி பேசுகிறார் (ரோமர் 7:13). பாவம் என்பது தேவனுக்கு முரண்படுகிறது; தேவனை எதிர்த்து நிற்கிறது; அது கண்டு கொள்ளாமல் விடப்படக் கூடாததாயிருக்கிறது; மனம் வருந்தாத ஒவ்வொரு பாவியும் தண்டிக்கப்படுவர்; தேவனுடைய நீதி பாவத்தை தடைசெய்கிறது; மேலும் பாவம் மரணத்தை கொடுக்கிறது (1 கொரி. 15:56).

எபி. 9:22ன் படி பழைய ஏற்பாட்டின் பாவ மன்னிப்பிற்கு மிருக இரத்தம் கொடுக்கப்பட்டது. ஆனால், பழைய ஏற்பாடு இயேசுவிடம் வழிநடத்தி வந்த வழித்துணையாளரே (கலா. 3:24,25); மேலும், நமது பாவத்திற்கான முழுமையான பலியாக இயேசுவே இருக்கிறார் (கலா. 3:22-29; ரோமர் 15:4; 1 கொரி. 10:11).

எபி. 10:4 ன் படி, பழைய ஏற்பாடு பலிமுறையின்படி மிருக இரத்தம் பாவத்தை எடுத்துப்போட இயலாததாக இருந்தது. மேலும், பத்து கட்டளைகளையும் முழுமையாக மனிதன் கடைபிடிக்க முடியாதவனாக இருந்தான் (அப். 15:8-11). மனிதன் தனக்காக செய்து கொள்ள இயலாததை தேவனே மனிதனுக்காக செய்தார். வேதாகமத்தில் 460 முறை இரத்தம் பற்றி கூறப்பட்டு

உள்ளது. பைபிளை மிக கவனமாக படிக்கின்ற யாருமே, இயேசு என்னுடைய பாவ விடுதலைக்காக மீட்புக்காக தன்னுடைய இரத்தத்தை சிந்தினார் என்பதை மறுக்கவோ, மறக்கவோ முடியாது. கடவுளையே காவு கொண்ட பெருங்கொடுமை யானது 'பாவம்' என்பதை நாம் யாவரும் உணர வேண்டியது அவசியம்.

**II குற்றமற்ற இயேசுவின் இரத்தம் :**

1. நம்மை தேவனுடன் ஒப்புரவாக்கு கிறது (2 கொரி 5:14-21)
2. நம்மை பாவங்களற கழுவுகிறது (வெளி 1:5; 7-14)
3. நம்மை மீட்கிறது (எபே 1:7,1 பேதுரு 1:18,19)
4. நம்மை சுத்திகரிக்கிறது (1யோவா 1:7)
5. நம்மை நீதிமான்களாக்குகிறது (ரோ 5:8,19)
6. நம்மை பரிசுத்தப்படுத்துகிறது (எபி 10:10; 13:12)
7. நமது பாவங்களை நிவர்த்தி செய்கிறது (1யோ 2:2)
8. நமக்கு சமாதானம் தருகிறது. (எபே 2:13-16, கொலே 1:20)
9. நம்மை சாத்தானை வெற்றி கொள்ள கூடியவர்களாக்குகிறது (வெளி 12:11)

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மாத்திரமே நமது பாவங்களுக்கான உண்மையான, வரலாற்றுப் பூர்வமான, முழுமையான மற்றும் கடைசியான விலை செலுத்துதலாக உள்ளது. யோவா 1:29,36 " இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி ".

**III அவருடைய இரத்தத்தின் வல்லமை**

1. கிறிஸ்துவினுடைய இரத்தத்திற்கு புதிய உடன்படிக்கையில் அதன் வல்லமையை காண்கிறோம்.(மத் 26:26-28;1 கொரி 11:25,26; எபி 13:20) பைபிளை படிக்கையில் இயேசுவின் இரத்தத்தையும், அவரையும் காணத்தவறும்போது நீங்கள் பைபிளை தவறாக வாசிக் கிறீர்கள் என்று அர்த்தம் (ஆதி 4:2-12; மத் 23:35, லூக்கா 11:50,51) ஆபேலின் இரத்தம் பேசியதைக் காட்டிலும் மேன்மையானதை இயேசுவின் இரத்தம் பேசுகிறது (எபி 12:24; 9:11-22)
2. புதிய ஏற்பாட்டு சபையை உருவாக்குவதில் அவரது இரத்தத்தின் வல்லமையை காண் கிறோம். (அப் 20:28; எபே5:25-28) மோசேயின் பிரமாணத்தின்படி பல இலட்சம் மிருகங்கள், பறவைகள் பலி செலுத்தப்பட்டன. மிருக இரத்தம் மனித பாவத்தை ஒரு ஆண்டுக்கு முந்திய நிலையில் உருட்டி விடத்தான் முடிந்தது. ஆனால், இயேசுவின் இரத்தம், "சபை" என்ற மகிமை யுள்ள ஒரு காரியத்தை வாங்கி உள்ளது.

இரத்தத்தில் உயிர் இருப்பதாக வேதாகமம் (லேவி 17:11,14) கூறு கிறது. நமது பாவங்களிலிருந்து நம்மை விடுவிக்க இயேசு தமது இரத்தத்தைக் கொடுத்தார் (வெளி. 1:5) நாம் நித்தியமாக வாழ்வதற்கு அவர் பூமியின் மீது நமக்காக மரித்தார் (1 தெச 5:10). சில பொருட்களின் விலையானது அதன் மதிப்பில் வளர்கிறது.

அப் 20:28ன்படி கிறிஸ்து அவருடைய இரத்தத்தினாலே தனது ஒரே சபையை வாங்கினார் என்பது "சபை" எவ்வளவு மதிப்புள்ளது என்பதை நாம் அறிய முடிகிறது. சபையை குறைத்து மதிப்பிடுவது, இயேசுவின் இரத்தத்தின் மகிமையை குலைப்பதாக உள்ளது.

3. புதிய ஏற்பாட்டில் இராபோஜனத்தில், நாம் அவருடைய இரத்தத்தின் வல்லமையை காண்கிறோம். (அப் 2:42,1 கொரி 10:16-21; 11:24-30) ஒரே வழி; ஒரே சரீரம் (சபை), ஒரே அப்பம், ஒரே இரத்தம், ஒரே இராபோஜனம், ஒரே ஜீவன்.

   இயேசுவின் இரத்தம், சிலுவை தந்த கனி; இதற்கு எல்லையற்ற வல்லமை உண்டு. இயேசுவின் திருவிருந்து (கர்த்தரின் பந்தி) அவர் மீண்டும் வரும் வரை, அவருடைய மரணத்தைச் சொல்லி கொண்டே இருக்கிறது. (1 கொரி 11:26)

4. பிரதான கட்டளைபடி திருமுழுக்கிலே கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையை காண்கிறோம். (மத் 28:18-20; ரோ 6:1-5; கலா 3:26,27; கொலே 2:12); இரத்தமின்றி, வேதம் இன்றி, சபை இல்லாமல், திருவிருந்து இல்லாமல் திருமுழுக்கு இல்லாமல் உலகம் இரட்சிப்பை விரும்புகிறது. ஆனால், சிலுவையின் வழியில்லாமல் வேறு கதியே இல்லை.

   இந்த மேன்மையான, வல்லமையான விலையேறப் பெற்ற இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் நீங்கள் உங்கள் பாவங்கள் போக கழுவப்படாமல் இருப்பது எவ்வளவு பரிதாபத்திற்குரியது (1 தெச 5:19; 1 கொரி 15:19). இன்றே இரட்சணிய நாள் உடனே கீழ்ப்படிவோம், (அப் 22:16). இந்த மேன்மையான காரியத்தில் உங்களுக்கு உதவ நாங்கள் எப்பொழுதும் ஆயத்தமாயிருக்கிறோம்.

## மனச்சாட்சியைப் பற்றி வேதாகமம்

1. தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஓர் அருமையான ஈவு
2. தேவனுடைய வார்த்தைகளால் படிப்பிக்கப்பட வேண்டும்
3. உள்ளார்ந்த மனிதனின் ஒரு பகுதியாயிருக்கிறது
4. சில வேளைகளில் நாம் குற்றம் செய்யும் போது அது நம்மை குற்றஞ்சாட்டும்
5. சில வேளைகளில் நாம் செய்வது சரிதான் என்று ஏற்றுக்கொள்ளும்
6. மனச்சாட்சி தீர்மானம் எடுக்க பிழையற்ற ஒரு வழிகாட்டி அல்ல.

# மேல்நோக்கியா அல்லது கீழ்நோக்கியா?

## UP OR DOWN?

***John Reese***



இவ்வுலகத்தின் மதங்கள் முழுமையான அளவில் ஒரு கொள்கையினிடத்திற்கோ அல்லது சரியான தேவனிடத்திற்கோ ஏற முயற்சி செய்து கொண்டிருக்கிறன. அவைகள் தேவன் மகாபெரியவர் என்றும், அவர் உயர்த்தப்பட்டிருக்கிறார் என்றும் அடையாளங் கண்டுகொள்கின்றன. ஆகவே, மனிதன் தேவனை அடைய வேண்டுமென்றால் ஏதோ ஒரு வழியில் ஏற வேண்டும், மேல் நோக்கிய " ஏணியில் " பல படிகள் உண்டு. அதாவது, அநேக நற்கிரியைகளை செய்ய வேண்டியதாயிருக்கிறது. பல விதிகளைக் கடைபிடிக்க வேண்டியதாயிருக்கிறது. இவ்விதமாக மக்கள் தேவனுடைய சந்நிதிக்குள் வருவதற்கு தங்களைப் போதுமானவர்களாக ஆக்கிக் கொள்ள முயற்சித்துக் கொண்டு இருக்கிறார்கள்.

அதில் குறைந்த பட்சம் இரண்டு பெரும் பிரச்சனைகள் உள்ளன. முதலாவது, தங்கள் விதிகள் சரியான விதிகளா என்பதை நிச்சயித்துக் கொள்வதற்கே வாய்ப்பு குறைவாக இருக்கிறது. அப்படி இருக்கும் போது அவர்களுடைய ஏணி மேலே போகிறதா அல்லது கீழே போகிறதா என்பதை அவர்கள் எப்படி நிச்சயித்துக் கொள்ள முடியும்? இரண்டாவது, மக்கள் தொடர்ந்து கீழே விழுகிறார்கள். அந்த ஏணி மிக உயரமானது. அதன் காரணமாக உடனடியாகவோ அல்லது பின்போ ஏறுவதில் திறமைமிக்கவர் கூட தவறி விழுந்து விடுகிறார்கள். அவ்விதமாக படிகளை அதாவது, விதிகளை மீறி விடுகிறார்கள். தேவனை அடைவதற்கு இந்த கற்பனை ஏணி தான் ஒரே வழியாக

இருக்கிறபடியால் இவ்வகையான மதம் ஜனங்களை சோகமாகவும், குற்ற உணர்வுடனும் இருக்கும்படி செய்கிறது. அது மட்டுமல்ல அவர்களை தேவனிடத்திலிருந்து வெகுதூரத்திற்கு அழைத்துச் சென்று விடுகிறது.

உண்மை என்னவென்றால், அவர்களுடைய வழி ஒருபோதும் வெற்றி பெறுவதில்லை. ஒரு சிறிய செய்முறையில் உங்களை ஈடுபடுத்திப் பாருங்கள். உங்கள் கால் விரல்களை பிடித்துக் கொண்டு தரையிலிருந்து ஓர் அங்குலம் உங்களை நீங்களே தூக்க முயற்சித்துப் பாருங்கள். உங்களால் அதைச் செய்ய முடியாது. உங்களால் உங்களை ஓர் அங்குலம் கூட தூக்க முடியாதென்றால், பரலோகம் வரை உங்களை எப்படி தூக்கிச் செல்லப் போகிறீர்கள்?

வேதாகமத்தின் கிறிஸ்தவம் மற்ற மனித மதங்களிலிருந்து வேறு படுகிறது. அது நம்முடைய பாவத்தையும், பலவீனத்தையும் எதிர்கொள்கிறது. அது நம்மாலே நாம் பரலோகத்திற்குப் போக முடியாது என்பதைக் காட்டு கிறது. அது பரிசுத்தமான, கெம்பீரமான தேவனிடத்தில் வருவதற்கு நாம் ஒருவரும் தகுதியானவர்கள் அல்லது போதுமானவர்கள் அல்ல என்று சொல்கிறது. " நீதிமான் ஒருவனாகிலும் இல்லை... எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி " (ரோமர் 3:10,23). ஆகையால், மனித இனத்துக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை தேவன் கீழே இறங்கி வந்து நம்மை இரட்சிப்பது தான்.

தேவன் தமது மிகுந்த இரக்கத்தினாலே இந்தக் காரியத்தைச் செய்தார். அவர் பரலோகத்திலிருந்து இப்பூமிக்கு தம்முடைய சொந்தக் குமாரனை அனுப்பினார்.

" ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந் தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது; அந்த வார்த்தை மாம்சமாகி கிருபை யினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம் " (யோவான் 1:1,14)


## செய்யும் வேலை

ஒரு வேலையை ஆரம்பிக்கும் போதே, அதை எப்பொழுது முடிக்க வேண்டுமென்பதையும் தீர்மானி.

ஏனெனில், " *தன் வேலையில் அசதியாயிருப்பவன் அழிம்பனுக்குச் சகோதரன்* " [நீதி. 18:9] என்று தேவன் கூறுகிறார்.

# நரகம் போக உங்களுக்கு விருப்பமா? படியுங்கள் பத்துக் காரணங்கள்!!

1. அங்கே போய்ச் சேர்வதற்கு எந்த முயற்சியையும் நீங்கள் எடுக்க வேண்டியதில்லை.
2. அங்கே மோசமானவர்களுடன் சுதந்திரமாக நீங்கள் சகவாசம் வைத்துக் கொள்ளலாம்.
3. அங்கே உங்கள் மீது தேவனுடைய கண்கள் நோக்கமாயிருப்பது இல்லை.
4. அங்கே போவதற்கு வேதபாட வகுப்பிலோ அல்லது ஆராதனையிலோ பங்கு பெறும்படி நீங்கள் எதிர்பார்க்கப்படுவதில்லை.
5. அங்கே உங்களுடைய ஏதோ ஒன்றையோ அல்லது உங்கள் பணத்தையோ தேவனுக்கு கொடுக்க வேண்டியதில்லை.
6. அங்கே பரிசுத்தமும், நன்மையும் உங்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட மாட்டாது.
7. அங்கே தேவனுடைய வழியில் நடக்கும்படி உங்களை வலியுறுத்த உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் யாரும் இருக்க மாட்டார்கள்.
8. அங்கே நீங்கள் தனியாக இருக்க மாட்டீர்கள். உங்கள் மாதிரியைப் பின்பற்றின உங்கள் நண்பர்களும், பிரியமானவர்களும் அங்கே இருப்பார்கள்.
9. அங்கே எல்லாம் முடிந்திருக்கும். நீங்கள் உங்கள் தண்டனையை நித்தியத்திற்கு பெற்றுக்கொள்ள வேண்டியதாயிருக்கும்.
10. அங்கே கிறிஸ்து மீண்டும் வருவார் என்கிற கவலை இருக்காது. அவர் மீண்டும் எப்போதும் வருவதில்லை!



# தர்சு பட்டணத்து சவுல், தமஸ்குவுக்குப் போகும் வழியில் இரட்சிக்கப்பட்டாரா?

## Was Saul of Tarsus Saved on the Damascus Road?

***Ken Tyler***

தர்சு பட்டணத்தானாகிய சவுல் தமஸ்குவுக்குப் போகும் பாதையிலேயே பட்டணத்திற்குள் பிரவேசிப்பதற்கு முன்பாகவே ஒளியின் மத்தியில் இரட்சிக்கப் பட்டார் என்று அநேகப் பிரசங்கியார்களால் போதிக்கப்படுகிறது. ஆனால், நண்பர்களே சவுலின் மனமாற்ற சம்பவத்தை ஜாக்கிரதையாகப் படித்தால் மட்டுமே இது சரியல்ல என்பதை நீங்கள் காண்பீர்கள்.

சவுலின் மனமாற்ற சம்பவம் அப்போஸ்தலர் 9 ஆம் அதிகாரத்தில் இடம் பெற்றிருக்கிறது. சவுல் தன்னுடைய மனமாற்றத்தின் போது நடந்த சம்பவங்களை அப் 22 மற்றும் 26 அதிகாரங்களில் திரும்பிப் பார்க்கிறார். சவுல் கிறிஸ்தவர்களைக் கட்டி எருசலேமுக்குக் கொண்டு போகும் நோக்கத்தில் சென்று கொண்டிருந்தார் (அப். 9:2). சவுல் தமஸ்குவுக்குச் சமீத்த போது வானத்திலிருந்து ஒரு ஒளி அவனைச் சுற்றிப் பிரகாசித்தது

(அப் 9:3). அவன் தரையில் விழுந்து சவுலே, சவுலே நீ என்னை ஏன் துன்பப்படுத்துகிறாய் என்று சொல்லுகிற சத்தத்தைக் கேட்டான் (அப். 9:4). அதன் பிறகு சவுல் "*ஆண்டவரே நீர் யார்? என்று கேட்டான். அதற்குக் கர்த்தர் நீ துன்பப்படுத்துகிற இயேசு நானே* " என்று பதிலளித்தார் (அப். 9:5). அங்கே, நடுக்கத்திலும் ஆச்சர்யத்திலும் இருந்த சவுல் இவ்வுலகத்திலேயே மிக முக்கியமான கேள்வியைக் கேட்டார்; " *நான் என்ன செய்யச் சித்தமாயிருக்கிறீர்? என்று. அதற்கு கர்த்தர்; நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும்" என்றார்* (அப். 9:6).

அப் 9:8 சவுல் பார்வை இழந்து போன நிலையில் இருந்தபடியால் கைலாகுகொடுத்து அவனை தமஸ்குவுக்கு அழைத்துக் கொண்டு போனதைச் சுட்டிக் காட்டுகிறது. (அப். 9:9) சவுல் மூன்று நாள் பார்வையில்லாதவனாய் புசியாமலும், குடியாமலும் இருந்ததாகச் சொல்கிறது. (அப். 9:11) சவுல் ஜெபித்துக் கொண்டிருந்ததாகவும் சொல்கிறது. (இது சவுலின் மனந்திரும்புதலுள்ள ஆவியைக் காட்டுகிறது என்று குறிப்பிடலாம்)

தமஸ்குவில் அனனியா என்னும் பேருள்ள சீடன் ஒருவன் இருந்தான். சவுல் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிவிப்பதற்காக கர்த்தர் அனனியாவை அனுப்பினார் (அப். 9:6,11). அனனியா சவுல் கிறிஸ்தவர்களை துன்பப்படுத்தினதை அறிந்திருந்தபடியால் அவனைக் குறித்து ஜாக்கிரதையாகவே இருந்தான். ஆயினும் கர்த்தர் அனனியாவிடம் சவுல் தாம் தெரிந்து கொண்ட பாத்திரம் என்று சொன்னார். (அப். 9:13-15). பின்பு அனனியா சவுலிடம் சென்று பார்வையடையும்படி செய்து, சவுல் என்ன செய்ய வேண்டும் என்பதை அறிவித்தார் (அப். 9:17,18). அப் 22:16ன் படி அனனியா தன்னைப் பார்த்து " இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு " என்று சொன்னதாக சவுல் (பவுல்) கூறுகிறார்.

இந்தச் சம்பவம் வெளிப்படையாக இருக்கிறது. சவுல் தமஸ்குவுக்குப் போகும் பாதையில் இரட்சிக்கப்படவில்லை, ஆனால் தமஸ்குவில், அனனியா என்ன செய்யும்படியாகச் சொன்னாரோ அதற்குக் கீழ்ப்படிந்தபோது தான் இரட்சிக்கப்பட்டார். அதாவது, சவுல் எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு பாவங்கள் போகக் கழுவப்படும்படி ஞானஸ்நானம் பெற்ற போது தான் இரட்சிக்கப்பட்டார்.

கர்த்தர் தாமே, சவுலிடம் " *நீ எழுந்து பட்டணத்துக்குள்ளே போ, நீ செய்ய வேண்டியது அங்கே உனக்குச் சொல்லப்படும்* " என்று சொல்லியிருந்ததை நினைத்துப் பாருங்கள் (அப். 9:6). அந்தப் பட்டணத்தில் தான் சவுல் என்ன செய்ய வேண்டும் என்பது அவருக்கு சொல்லப்படும். அனனியா அதை சவுலுக்குச்

சொன்னார், சவுல் கீழ்ப்படிந்தார். அதன்பிறகு அவர் இரட்சிக்கப் பட்டார்.

சவுல் தமஸ்குவுக்குச் செல்லும் பாதையில் ஒளியின் மத்தியில் இரட்சிக்கப்பட்டிருந்தால் உண்மையாகவே அது புதுமையான மனமாற்ற சம்பவமாயிருந்திருக் கும். அவ்விதமாக நடந்ததாக சவுலுக்கே அது தெரியவில்லை. ஏனென்றால், தான் " என்ன செய்ய வேண்டு மென்று " கர்த்தரிடம் கேட்டார்; அங்கே இரட்சிப்பு நடந்தி ருந்தால் அதை இயேசு கிறிஸ்துவே அறியாதிருந்தார். ஏனென்றால், அவர் சவுலிடம் " நீ பட்டணத்துக்குப் போ அங்கே நீ செய்ய வேண்டியது உனக்குச் சொல்லப்படும் " என்று சொல்லியிருந்தார்; சவுல் தமஸ்கு வுக்குப் போகும் வழியில் இரட்சிக் கப்பட்டிருந்தால் இரட்சிக்கப்பட்ட மனிதரிலேயே மிக பரிதாபகரமான மனிதராக இருந்திருப்பார். ஏனென்றால், சவுல் பார்வை இழந்த வராக, புசியாமலும், குடியாமலும் மூன்று நாட்கள் ஜெபம் பண்ணி கொண்டிருந்தார். இது இரட்சிக் கப்பட்ட மனிதன் போல் தெரிகிறதா? இல்லை! மனந்திரும்பிய சவுல் எழுந்து பாவங்கள் கழுவப்படும்படி ஞானஸ்நானம் பெற்ற போது தான் இரட்சிக்கப்பட்டார். நானும் அவ்விதமாகச் செய்ய வேண்டு மென்று ஜெபிக்கிறேன்.

* மனிதர்கள் உங்களைப் பற்றி தவறாகப் பேசினால், அவர்களை யாரும் நம்பாத அளவுக்கு நீங்கள் வாழ்ந்து விடுங்கள்.

* சில வேளைகளில் கர்த்தர் புயலை அமைதிப் படுத்துகிறார்; சில வேளைகளில் அவர் புயலால் அலக்கழிக்கச் செய்து, தம்முடைய பிள்ளையை அமைதிப்படுத்துகிறார்.

* கர்த்தர் வெளியே வைக்கப்பட்டால், உள்ளே ஏதோ தவறு இருக்க வேண்டும். நாம் தேவனுடைய கரங்களில் நம் கவலைகளை வைக்கும் போது, அவர் நம்முடைய இருதயங்களில் சமாதானத்தை வைக்கிறார்.

இரட்சிப்பு

# மன மாற்றம்

## Conversion

### *Bill Dillon*

மனமாற்றம் என்றால் அதன் உண்மையான பொருள் என்ன? அது ஏன் அவசியமானது? ஒருவர் மனமாற்றம் அடையும்போது உண்மையாக என்ன நடக்கிறது? இந்த கேள்விகளுக்கான சரியான பதில்கள் வேதாகமத்தில் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மனமாற்றம் என்பதன் மையப்பொருள் மாற்றம் தான். இயற்கையில் பல மாற்றங்கள் காணப்படுகின்றன. மரம் காகிதமாகிறது; நிலக்கரித்துண்டு மாறுதல் என்கிற செயல்முறையின் மூலமாக வைரமாகிறது.

கிறிஸ்தவத்தைப் பொறுத்தவரை பாவ வாழ்க்கையிலிருந்து நீதியுள்ள வாழ்க்கைக்கு மாறுவதுதான் மனமாற்றம் என குறிக்கிறது. மத். 18:3ல் இயேசு இவ்விதமாகச் சொன்னார். நீங்கள் மனந்திரும்பிப் பிள்ளைகளைப் போல் ஆகாவிட்டால், பரலோக ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டீர்கள் என்று மெய் யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்.

ஒரு மனிதனோ அல்லது மனுஷியோ மனமாற்றமடைவதற்கு முன்பாக, ஒருவிதமான பஞ்சம் வாழ்க்கையில் ஏற்படுகிறது. இது ஆகாரப் பஞ்சம் அல்ல, ஆனால் பொருள் மற்றும் நோக்கத்திற்கான பஞ்சம் தான் அது. சர்வவல்ல தேவன் தம்முடைய வார்த்தையின் மூலமாக ஆத்துமாவைத் தட்டி எழுப்பி என் பயத்தைக் குறித்து நான் என்ன செய்ய வேண்டும் என்கிற கேள்வியைக் கேட்க வைக்கிறார்.

ஆத்துமா சோர்ந்து போய்விட்டது. நாம் முடிந்து போய் விட்டோம் என்கிற நிலைக்கு வந்து விட்டோம். உலக சிற்றின்பங்களும், செயல்பாடு களும் பொருளை ஒன்றாக மாற்றி விடுகிறது. கடைசியாக, நாம் தேவனுடைய சித்தத்திற்கு இணங்கும் வரை நமக்கு இளைப்பாறுதலோ சமாதானமோ கிடைப்பதில்லை.

இவ்வுலகத்தில் ஏற்படுகின்ற எண்ணற்ற ஆபத்துகளும், வாழ்க்கையில் வைக்கப்படுகின்ற கண்ணிகளும் நாம் அறிந்தவைகளாக இருக்கின்றன. நம் பலவீனங்களும், மரணத்தைத் தடுக்க முடியாத நிலையும் இருப்பதால், ஆவிக்குரிய உண்மைகளுக்கு நாம் விழித்துக் கொள்கிறோம். தேவனும், கிறிஸ்துவும் அல்லாத நிர்பந்தமான நிலையை நாம் உணர்ந்து பார்க்கிறோம். நாம் கண்டிக்கப்படுகிறோம். நாம் மாற வேண்டும்.

**மாற்றம் கீழ்க்காணும் காரியங்களை உள்ளடக்கியது.**

மனமாற்றம் : இது விசுவாசத்தினால் உண்டாகிறது (அப் 15:9)

விசுவாசத்தில் மாற்றம் : இது கிறிஸ்துவை மற்றவர்களிடத்தில் அறிக்கை செய்வதில் வெளிப்படுகிறது. (ரோ 10:10 ; அப் 8:37)

நிலையில் மாற்றம் : உறவில் ஏற்படுகின்ற இந்த மாற்றம் ஞானஸ்நானத்தில் நடக்கிறது (கலா 3:26,27)

மனமாற்றம் என்பது அவசியம். ஏனென்றால் மனம் மாறாத பாவிகள் தேவனுக்குத் தகாதவர்களாகவும், தேவனால் ஏற்றுக்கொள்ளப்படாதவர்களாகவும் இருக்கிறார்கள். பாவிகள் பரிசுத்தவான்களாக மாற்றப்பட வேண்டும். இது ஒரு மிகப்பெரிய வேலை இதைத் தேவன் மாத்திரமே செய்ய முடியும் !

நாம் மனமாற்றப்பட்டு, கர்த்தரை அறிந்து கொள்ள வேண்டுமென்றால், நான் மாற்றப்பட வேண்டுமானால், நான் தாழ்மையோடு கர்த்தரைத் தேடி அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ள வேண்டும். தேவனுடைய ஒரே பேறான குமாரனாகிய இயேசு கிறிஸ்து நம்மை இரட்சிக்கும்படியாக இவ்வுலகத்திற்கு பரலோகத்திலிருந்து வந்தார் (ரோமர் 5:8). மனந்திரும்பி அவருடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிற எல்லோரையும் மன்னிக்கும்படி அவர் சிலுவையில் பாடுகளை அனுபவித்தார்.

நீங்கள் மனம் மாறி விட்டீர்களா?

## தேவை

- இக்காலத்தின் மிகப் பெரிய தேவை மனிதர்கள் தான் ; விலைபோகும் மனிதர்கள் அல்ல ; நண்பர்களாக இருந்தாலும், எதிரிகளாக இருந்தாலும், தங்களையும், மற்றவர்களையும் கண்டிக்கிறவர்கள் தேவை ;
- ஒரு கம்பத்திற்கு எப்படி அதன் துவாரம் சரியாக இருக்கிறதோ அதைப் போல சரியான மனச்சாட்சியுடன் இருப்பவர்கள் தேவை ;
- வானங்கள் அசைக்கப்பட்டாலும், பூமி உருகிப் போனாலும் சத்தியத்திற்காக நிற்கிற மனிதர்கள் தேவை ;
- சத்தியத்தைச் சொல்லி உலகத்தை தங்கள் கண்களில் சரியாகப் பார்க்கிற மனிதர்கள் தேவை. பெருமை பிடித்தவர்களோ அல்லது ஓடுகிறவர்களோ அல்ல ;
- சத்தமில்லாமல் தைரியமாக காரியங்களைச் செய்கிறவர்கள் தேவை ;
- நித்திய ஜீவனைப் பற்றிய நம்பிக்கையில் ஆழமான, உறுதியான பிடிப்புக் கொண்ட மனிதர்கள் தேவை; தெரிந்த செய்தியை சொல்கிறவர்கள் தேவை.
- தங்கள் வேலையைத் தெரிந்து அதில் பங்கேற்கிறவர்கள் தேவை ;
- வேலையில் சோம்பல் இல்லாத, பெருமை இல்லாத மனிதர்கள் தேவை ;
- தாங்கள் சம்பாதித்தவைகளை புசிக்க விருப்பமுள்ளவர்களும், எதற்காக பணம் செலுத்தி வாங்கினார்களோ அதை உடுத்திக் கொள்ள விருப்பம் உள்ளவர்கள் தேவை ;
- வேலைக்கு அழைப்பு விடுக்கப்படும் போது முடியாது என்று மறுக்காத வேலை ஆட்கள் தேவை.

# சிலுவையிலிருந்து செய்தி : மன்னித்தல்

## Message From The Cross : Forgiving

*Royce Frederick*

" கபாலஸ்தலம் என்னும் அர்த்தங்கொள்ளும் கொல்கொதா என்னும் இடத்துக்கு வந்தபோது, கசப்புக் கலந்த காடியை அவருக்குக் குடிக்கக் கொடுத்தார்கள்; அவர் அதை ருசிபார்த்து, குடிக்க மனதில்லாதிருந்தார் " (மத். 27:33-35).

இந்த முறை மாபெரும் போதகர் கலிலேயாக் கடலின் அருகிலுள்ள மலையிலோ, அழகான தேவாலயத்திலோ இருக்கவில்லை. அவருடைய ஒவ்வொரு வார்த்தையையும் ஆவலுடன் கேட்கும்படியாக அவரைப் போற்றும் ஆதரவாளர்களோ அல்லது சீஷர்களோ உடனிருக்கவில்லை. மாறாக, அவர் பொதுவான இடத்தில் வைத்து கொலை செய்யப்பட்டார். அவருடைய நண்பர்கள் அவரை விட்டு ஓடிவிட்டார்கள். மதத் தலைவர்கள் அவரை தேவனுடைய சத்துரு என்று அழைத்தார்கள். ரோம ஆளுநராயிருந்த பிலாத்து அவர் சிலுவையில் அறையப்படுவதை அங்கீகரித்தான். எனவே தான், நான் இந்த மனுஷனிடத்தில் ஒரு குற்றத்தையும் காணவில்லை என்று அறிவித்தான். லூக்கா 23:4; வசனம் 14 யையும் வாசியுங்கள். (யோ. 18:38; 19:46). இம்முறை அவர் என்ன சொல்வார்? " பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே " என்றார் (லூக். 28:34).

பல வருடங்களுக்குப் பிறகு கூட காரியங்களை மன்னிப்பதென்பது கடினமான காரியம்தான். ஆனால், இயேசு அந்த ஜனங்களை அவர்கள் அவரை கொலை செய்து கொண்டிருக்கும் போதே மன்னித்தார். அவர் தனக்கு மரணத்தைக் கொடுத்தவர்களுக்கு ஜீவனை விரும்பியிருக்கிறார். தேவன் ஒருவரும் நித்திய நித்தியமாக இழந்து போவதை விரும்புவதில்லை (எசே. 33:11; IIபேது 3:9; I தீமோ. 2:4)

இயேசு கலிலேயாவில் இருந்த திரளான கூட்டத்தைப் பார்த்து "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள். உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்" என்று சொன்னார் (மத். 5:11) அவர் முதலில்

அதை நமக்குச் சொன்னார். பின்பு அதை நமக்கு நடப்பித்துக் காட்டினார்.

மேலும் இயேசு, " நீங்கள் மனுஷருடைய தப்பிதங்களை மன்னியாமல் போனால், பரம பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னிக்கமாட்டார்" (மத்.12:14); (யாக். 2:13; கொலோ. 3:13). நாம் பரலோகத்தில் பிரவேசிப்பதற்கு நாம் மன்னிக்கப்பட வேண்டும், நாம் மன்னிக்கிறவர்களாக இருக்க வேண்டும்.

## கிறிஸ்தவனின் மனப்பான்மை மற்றும் நம்பிக்கை

1. இப்பூமியின் வாழ்க்கை குறுகிய கால அளவை உடையது; ஆனால், மரணம் நிச்சயம் [எபி. 9:27]
2. கொஞ்ச காலந் தோன்றிப் பின்பு தோன்றாமற் போகிற புகையைப் போலிருக்கிறது [யாக். 4:14]
3. நம் வாழ்க்கை குறுகியதாயிருக்கிறபடியால் நாம் பெற்றிருக்கும் பூமிக்குரிய ஆசீர்வாதங்களை பிறருக்குப் பகிர்ந்து கொடுக்க வேண்டும் [1தீமோ. 6:17,18]
4. நம் இலக்கு அழிந்து போகின்ற ஆஸ்திகளை சேர்த்து வைக்கிறதாக இருக்கக் கூடாது [1 தீமோ. 6:6,10] எபி. 11:24,26]
5. கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் [பிலிப். 1:21]
6. பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்து போனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத்தில் நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம் [1 கொரி. 5:1]

இரட்சிப்பு

# யார் கிறிஸ்தவன்?

## Who is a Christian?

*E. Claude Gardner*



எந்த ஒரு மனிதனும் தன்னுடைய ஞானத்தால் யார் கிறிஸ்தவன் என்பதை தீர்மானிக்க முடியாது. ஆயினும், வேதாகமம் ஒரு கிறிஸ்தவனைப் பற்றிய விளக்கத்தைக் கொடுத்து விவரிக்கிறது.

" கிறிஸ்தவன் " என்கிற பதமானது கிறிஸ்துவுக்குள் இருக்கிற ஒரு தேசத்தை குறிக்கும் வகையில் கூட விரிவாகப் பயன்படுத்தப்படுகிறது. மேலும், இயேசுவைப் பின்பற்றுகிறேன் என்று சொல்லிக் கொள்ளும் ஒரு தனிப்பட்ட நபரையும் கிறிஸ்தவன் என்கிற வார்த்தை குறிக்கிறது.

வேதாகமத்தின் அர்த்தத்தில் யார் கிறிஸ்தவன் என்பதைப் புரிந்து கொள்வது முக்கியமானது. இது புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை நாம் பிற மதக்குழுக்களான பிராடஸ்டண்ட், கத்தோலிக்கர்கள், யூதர்கள், இஸ்லாமியர்கள் போன்றவர்களுக்கு போதிப்பதை நாம் நாடுகிறோமா என்பதைத் தீர்மானிக்கும். மேலும், நாம் சந்திக்கும் நபர்கள் கிறிஸ்தவர்களாயிருந்தால் அவர்களோடு ஐக்கியம் கொள்ள வேண்டும். ஆவிக்குரிய காரியங்களில் பங்கு பெற வேண்டும். புதிய ஏற்பாட்டால் விவரிக்கப்பட்டிருக்கிற கிறிஸ்தவர்களாயிருந்தால் மட்டுமே ஆராதனை வெளி ஊழியம் மற்றும் பக்தி ரீதியான திட்டங்களில் அவர்களோடு பங்கு பெற வேண்டும். சத்தியத்தின் ஒளியில் நடக்கிற எல்லோருமே கிறிஸ்துவோடும், ஒருவருக் கொருவரோடும் ஐக்கியம் கொள்கிறார்கள் (I யோவான் 1:7)

தேவனை அவருக்குப் பிரியமாக சேவிக்க முயற்சி செய்து கொண்டிருக்கும் நல்ல ஒழுக்கமான மக்களோடு சகோதரத்துவத்தை

வெளிப்படுத்துவது அருமையாக இருக்கும். கனமும், பக்தியுமுள்ள, மரியாதைக்குரிய மக்களிடமிருந்து பிரிவது என்பது உண்மையில் வேதனையான காரியம்.

வேதாகமத்தில் கொடுக்கப்பட்டிருக்கிற ஒற்றுமையின் திட்டம் கிறிஸ்துவோடு ஒன்றித்திருப்பதற்கான தெய்வீக வழியாக இருக்கிறது (எபேசு 3:6). இதில் வருத்தப்படவேண்டிய விஷயம் என்னவென்றால், பக்தியுள்ள மக்கள் ஒரே சரீரம் (சபை) ஒரே ஆவி, ஒரே நம்பிக்கை, ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம் (நம்பிக்கை), ஒரே ஞானஸ்நானம், ஒரே தேவன் போன்ற ஏழு அடிப்படைக் கருத்துக்களை நிராகரிக்க அல்லது தவிர்க்க முயற்சி செய்திருக்கிறார்கள்.

நாம் மனித அறிவைக் கொண்டு யார் கிறிஸ்தவன் என்று தீர்க்கத் துணிய வேண்டாம். தேவனே அதற்கான பதிலைத் தருகிறார். தேவன் இரட்சிப்பின் திட்டத்தை வெளிப்படுத்தியிருக்கிறார். ஒருவர் அதற்குக் கீழ்ப் படிவதன் மூலம் அதாவது கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிவதன் மூலம் கிறிஸ்தவன் ஆகிறார். இயேசுவும், தேவ ஆவியினால் ஏவப்பட்ட அப்போஸ்தலர்களும் விதித்த நிபந்தனைகளின் அடிப்படையில் இயேசுவிடம் வருவதினால் கடந்த கால பாவங்களிலிருந்து இரட்சிக்கப்பட்டவனே கிறிஸ்தவன்.

இயேசு மிக எளிய முறையில் இவ்விதமாகச் சொன்னார். "விசுவாச முள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியா தவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படுவான்" (மாற்கு 16:16). பேதுரு இவ்விதமாகக் கட்டளையிட்டார். நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (அப் 2:38). இந்தக் கட்டளைகளெல்லாம் அவசியமானது என்று எண்ணற்ற வேத வசனங்கள் போதிக்கின்றன. ஒரு கட்டளை தள்ளுபடி செய்யப்பட்டால் அல்லது லேசாக எடுத்துக்கொள்ளப்பட்டால், மற்ற கட்டளை களுக்கும் நாம் அப்படிச் செய்ய முடியும். மனந்திரும்புதல் மற்றும் ஞானஸ்நானம் இரண்டுமே அவசியம் தான்.

பல சபைகள் ஒருவர் " விசுவாசத்தினால் " மாத்திரமே கிறிஸ்தவனா கிறார் என்று போதிக்கின்றன. அதே போல் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் போதும் அல்லது பாவ மன்னிப்புக்காக ஜெபிக்கும் போதும் ஒருவர் கிறிஸ்தவனாகிறார் என்றும் போதிக்கின்றன. இருந்த போதிலும், இயேசுவின் வார்த்தை தான் இறுதியாயிருக்கிறபடியால், ஒரு மனந்திரும்பிய விசுவாசி கிறிஸ்தவராக வேண்டுமென்றால் பாவ மன்னிப்பைப் பெற்றுக்கொள்ள ஞானஸ்நானம் பெற வேண்டும் என்று நாம் போதிக்க வேண்டும். இயேசுவுக்குக் கீழ்ப்படியாதவர்களோடு நாம் எப்படி கூட்டு வைத்துக் கொள்ள முடியும்?

கீழ்ப்படிதலோடு இயேசுவினிடத்தில் வருபவன்தான் கிறிஸ்தவன் (அப். 2:38,41) இது செய்யப்படும் போது, அவர் இயேசுவால் இரட்சிக்கப்படுகிற படியால்சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார். " இரட்சிக்கப்படுகிறவர் களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார் " (அப். 2:47). புதிய ஏற்பாட்டு காலங்களில் இரட்சிக்கப்பட்டவர்கள் சபைக்கு வெளியே இருக்கவில்லை. கிறிஸ்தவர்களானவர்களோ அல்லது இரட்சிக்கப்பட்டவர் களோ சபையில் தான் சேர்க்கப்பட்டார்கள். ஏனென்றால், பல நூற்றாண்டுகள் வரை வேறு எந்த சபையும் தோன்றவில்லை. இது ஒரு சரீரப் பிரகாரமான பிறப்பைப் போன்றது. ஒரு குழந்தை பிறக்கும் போதே ஒரு குடும்பத்தின் உறுப்பினராகவும் மாறிவிடுகிறது. அது போல் ஒருவர் மறுபடியும் பிறக்கும் போது, அவர் சபையாகிய தேவனுடைய குடும்பத்தில் பிரவேசிக்கிறார் (யோவான் 3:5). கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு கீழ்ப்படிந்தவர்கள் கிறிஸ்து வுக்குள் சகோதர, சகோதரிகளாக தங்கள் ஐக்கியத்தை வெளிப்படுத்து கிறார்கள்.

கிறிஸ்துவின் நாமத்தைத் தரித்திருப்பவன்தான் கிறிஸ்தவன். கிறிஸ்தவன் என்பவன் கிறிஸ்துவைப் போன்றவன். அவன் கிறிஸ்துவைப் பின்பற்றுபவனாக, கிறிஸ்துவின் சீஷனாக இருந்து கொண்டு, கிறிஸ்துவை சபையின் இரட்சகராக, ஸ்தாபகராக, தலையாக கனப்படுத்துகிறான். அவன் எல்லா மனித மற்றும் வேதத்தில் இல்லாத பெயர்களை பிரிவினையுள்ள மற்றும் வேதத்திற்கு புறம்பானவைகளை நிராகரிக்கிறான். கிறிஸ்தவனாக இருப்பது மட்டுமே சரியானது (பேதுரு 4:16)

ஒரு கிறிஸ்தவன் இயேசுவின் போதனைகள் மற்றும் வாழ்க்கையோடு இசைந்த வாழ்க்கையை வாழ்கிறான். பூரணமாக இல்லாவிட்டாலும், வாழ்க்கையின் எல்லா நிலைகளிலும் கர்த்தரைப் போல் இருக்க நாடுகிறான். அவன் ஆராதனையிலும், ஜெபத்திலும், வேதபாட வகுப்பிலும் கலந்து கொள்ளத் தன்னை அர்ப்பணித்துக் கொள்கிறான். அவன் சமுதாயத்திலும், குடும்பத்திலும், வியாபாரத்திலும், சபையிலும் நல்ல குடிமகனாக இருப்பான் (தீத்து 2:11,13 ; மத் 7:16).

ஒரு கிறிஸ்தவன் உண்மையுள்ளவனாக இருந்தால், ஒரு நாளில் தேவனுடைய கிருபையால் இயேசு " *நல்லது, உத்தமும் உண்மையுள்ள ஊழியக்காரனே* " என்று சொல்லக் கேட்பான் (மத். 25:21).

இயேசு " *பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய் கிறவன் எவனோ, அவனே எனக்குச் சகோதரனும், சகோதரியும், தாயுமாய் இருக்கிறான்* " என்று போதித்தார் (மத். 12:50). இன்று பிதாவின் சித்தத்தின்படி செய்கிற எல்லாரோடும் நாம் ஐக்கியத்தை வைத்துக் கொள்ள முடியும்! (மத். 7:21).

# சோக முடிவு

# The Ultimate Tragedy

*David Pharr*

நீங்கள் விழுந்து போக நேர்ந்தால் (அதாவது, சபையை விட்டு விட்டு உங்கள் பழைய வாழ்க்கை முறைக்கோ அல்லது பழைய மதத்திற்கோ அல்லது பாவத் திற்கும், கீழ்ப்படியாமைக்கும் நீங்கள் மறுபடியும் சென்றிருந்தால்) உங்கள் நிலைமை என்னவாயிருக் கும்? அழுத்தம் மற்றும் " சோதனை யில் இருந்து காத்துக்கொள்ளும் படியாக விழுந்து போகுதலின் பயங் கரமான விளைவுகளை நீங்கள் அறிந்து கொள்ள வேண்டும்".

விழுந்து போகிறவர்களின் முடிவை விவரிக்கும் அநேக வேத வசனப் பகுதிகள் இருக்கின்றன. ஆனால், கீழ்க்காணும் வசனப் பகுதி கள் தேவனை விட்டு விலகிச் செல்வது எவ்வளவு பயங்கரமானது என்பதை நமக்குக் காட்டுவதற்கு போதுமானது. தயவு செய்து அவை களை மிகவும் ஜாக்கிரதையாக வாசியுங்கள்.

யோவான் 15:4-6. இது இயேசு பயன்படுத்திய உதாரணங்களில் ஒன்று. கொடியானது எப்படி செடியில் நிலைத்திருக்க வேண்டுமோ, அதே போல் ஒவ்வொரு கிறிஸ்தவனும் கிறிஸ்துவில் நிலைத்திருக்க வேண்டும். கொடியானது செடியில் நிலைத்திருக்கிறது என்பதற்கு கனி கொடுத்தல் தான் சாட்சியாக இருக்கிறது. ஆறாம் வசனத்தில் இடம் பெற்றுள்ள விளைவுகளைக் கவனியுங்கள்.

எபிரெயர் 10:26-31 வசனப் பகுதியில் 26 ஆம் வசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் மனப் பூர்வமாய்ச் செய்யும் பாவம். கிறிஸ்துவையும், அவருடைய சபை யையும் விட்டுச் செல்லும் துணி கரமான முடிவைத்தான் குறிக்கிறது. ஒருவர் இதைச் செய்யும் போது பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க ஒரே பலியை விட்டுவிட்டு (அப்பாவத் திலிருந்து மனந்திரும்பும் வரை) இரட்சிக்கப்படும்படியான நம்பிக் கையை அவர் ஒரு போதும் பெற்றுக் கொள்வதில்லை. 28-31 வரை உள்ள வசனங்கள் நித்தியமாக இழந்து போவது, இரக்கம் இல்லாமல் கொல்லப்படுவதை விட மோச மானது (கொடிதான ஆக்கினை) என்பதைக் காட்டுகிறது.

2 பேதுரு 2:20-22 கிறிஸ்தவனா யிருந்த ஒருவன் கிறிஸ்துவையும் அவருடைய சபையையும் விட்டு விட்டு, சத்தியத்தைக் கைவிடும் போது, தேவனை ஒரு போதும் அறிந்திராத புற ஜாதியானை விட தன்னை மிக மோசமான நிலைக்குத் தள்ளுகிறான். 22 ஆம் வசனத்தில்

சொல்லபட்டிருக்கும் நாய், பன்றி போன்ற உதாரணங்கள் பாவத்தில் மறுபடியும் விழுந்து போவதன் அவல நிலைமையை எடுத்துரைக்கிறது.

ஒரு சகோதரரிடம் ஒருமுறை "நீங்கள் எப்போதாவது சபையை விட்டுப் போக வேண்டுமென்றால், எங்கே போவீர்கள்" என்று கேட்கப் பட்டது. அதற்கு அவர் " நரகத்திற்கு " என்று பதிலளித்தார். வேதாகமம் ஒன்றில் சரியாக இருக்க வேண்டும் அல்லது தவறாக இருக்க வேண்டும். தேவன் பொய்யுரையாதவராயிருக் கிறார். கிறிஸ்துவின் சபையில் உண்மையாயிருப்பதன் அவசியம் பற்றியும், சத்தியத்திற்கு விசுவாசமா யிருப்பதன் அவசியம் பற்றியும் வேதாகமம் என்ன சொல்கிறது. சாக்குபோக்குகளும், சுய அங்கீகார நியாயப்படுத்துதலும், அதை மாற்ற முடியாது. தேவனுடைய சித்தம் ஒரு போதும் மாறுவதில்லை. ஜனங்கள் தேவனிடமிருந்து திசை திரும்பிச் செல்லும் போது அவர்கள் மிகக் கோரமான விளைவுகளை எதிர் கொள்கிறார்கள்.

சபையின் அங்கத்தினர் ஒருவர் மனப்பூர்வமான பாவத்திற்கு திரும்பப் போய் உண்மைத் தன்மைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் போது, சபையார் எல்லோரும் அந்த நபரிடமிருந்து ஐக்கியத்தை விலக் கிக் கொள்ள வேண்டும். இதைக் குறித்து பவுலின் அறிவுரைகளை (II தெச. 3:6,14,15) வசனங்களில் கவனி யுங்கள். I கொரி. 5:1-13 வசனங்களை யும் வாசியுங்கள். அங்கே விபசாரத் தில் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு சகோதரனைப் பற்றி பேசுகிறார்.

ஒருவர் தேவனுடைய ஜனங்க ளோடு ஐக்கியம் வைத்துக் கொள்ள முடியாதென்றால், தேவனோடும் அவரால் ஐக்கியம் வைத்துக் கொள்ள முடியாது. இப்படிபட்ட நபர் மனந்திரும்பி மறுபடியும் சரியான பாதைக்கு வரும்வரை நம்பிக்கை யற்ற நிலையில் தான் இருக்கிறார். விழுந்து போன நிலையில் மரிப்ப தென்பது என்றென்றும் இழந்து போன நிலை என்று தான் பொருள் படுகிறது.

நீங்கள் ஒரு போதும் கிறிஸ்து வினிடத்திலும் சபையினிடத்திலும் முதுகை காட்ட மாட்டீர்கள் என்று நினைத்துக் கொண்டிருக்கலாம். அதாவது கிறிஸ்துவை விட்டும் அவருடைய சபையை விட்டும் வழி விலகிச் சொல்ல மாட்டோம் என்று நினைத்துக் கொண்டிருக்கலாம். இது நிச்சயமாக உங்கள் ஜெபமாக, நோக்கமாக இருக்க வேண்டும். ஆனால், கொரி 10:12ல் "தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்க கடவன்" என்று வாசிப்பதை நினை வில் கொள்ள வேண்டும். இப்படி விழுந்து போவதற்கு வாய்ப்பு உண்டு என்பதை எப்போதும் உணர்ந்து கொள்ளுங்கள். சோதனைகள் சோர்வுகள் மற்றும் உங்கள் அன்பு விசுவாசம் போன்றவற்றை பல வீனப்படுத்தும் எந்த ஒரு காரியத் திற்கு எதிராகவும் நீங்கள் ஜாக்கிர தையுள்ளவர்களாயிருந்து உங்களை காத்துக் கொள்ளுங்கள். பின் வாங்கிப் போவதற்கான சிறிய சோதனை ஏற்பட்டால் கூட உடனே அதை சீர்படுத்திவிட வேண்டும். நீங்கள் தேவனோடு பேசும் போது, பிசாசு உங்களிடம் பேசமாட்டான்.



இரட்சிப்பு

# ஊக்கமான ஜெபம்

## *Fervent Prayer*

***B. Arjunan***

முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்கள், ஊழியக்காரர்கள் மற்றும் பழைய ஏற்பாட்டு தேவ ஜனங்கள் ஊக்கமாக கர்த்தரை நோக்கி ஜெபித்திருக்கிறதை நாம் பரிசுத்த வேதாகமத்தின் துணை கொண்டு அறிகிறோம். " பேதுரு சிறைச்சாலையிலே காக்கப்பட்டிருக்கையில் சபையார் அவனுக்காக தேவனை நோக்கி ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்கள் " என்று அப்போஸ்தல நடபடிகள் 12:5ம் வசனத்தில் படிக்கிறோம். அக்காலத்தில் ஏரோது சபையிலே சிலரைத் துன்பப்படுத்தத் தொடங்கி; யோவானுடைய சகோதரனாகிய யாக்கோபை பட்டயத்தினாலே கொலை செய்தான். அது யூதருக்குப் பிரியமாயிருக்கிறதென்று கண்டு, பேருதுவையும் பிடித்து சிறைச் சாலையிலே போட்டான். இதை அறிந்த சபையார் ஏரோதின் கைக்கு பேதுருவை விடுவிக்கும்படிக்கு ஊக்கத்தோடே ஜெபம் பண்ணினார்கள். கர்த்தர் சபையாரின் ஜெபத்தைக் கேட்டு பேதுருவை விடுவித்தார்.

எப்படியென்றால்; " ஏரோது அவனை வெளியே கொண்டு வரும்படி குறித்திருந்த நாளுக்கு முந்தின நாள் இராத்திரியிலே, பேதுரு இரண்டு சங்கிலிகளினாலே கட்டப்பட்டு, இரண்டு சேவகர் நடுவே நித்திரை பண்ணிக் கொண்டிருந்தான்; காவற்காரரும் கதவுக்கு முன்னிருந்து சிறைச்சாலையைக் காத்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது கர்த்தருடைய தூதன் அங்கே வந்து நின்றான்; அறையிலே வெளிச்சம் பிரகாசித்தது. அவன் பேதுருவை விலாவிலே தட்டி, சீக்கிரமாய் எழுந்திரு என்று அவனை எழுப்பினான். உடனே சங்கிலிகள் அவன் கைகளிலிருந்து விழுந்தது. தூதன் அவனை நோக்கி; உன் வஸ்திரத்தைப் போர்த்துக் கொண்டு என் பின்னே வா என்றான். அந்தப்படியே அவன் புறப்பட்டு அவனுக்குப் பின்சென்று. தூதனால் செய்யப்பட்டது மெய்யென்று அறியாமல், தான் ஒரு தரிசனம்காண்கிறதாக நினைத்தான். அவர்கள் முதலாங்காவலையும், இரண்டாங் காவலையும் கடந்து, நகரத்திற் குப் போகிற இருப்புக்கதவண்டையிலே வந்தபோது அது தானாய் அவர் களுக்குத் திறவுண்டது; அதின் வழியாய் அவர்கள் புறப்பட்டு ஒரு வீதி நெடுக நடந்துபோனார்கள்; உடனே தூதன் அவனை விட்டுப் போய் விட்டான். பேதுருவுக்குத் தெளிவு வந்தபோது; ஏரோதின் கைக்கும் யூத ஜனங்களின் எண்ணங்களுக்கும் என்னை விடுதலையாக்கும்படிக்குக் கர்த்தர் தம்முடைய

தூதனை அனுப்பினாரென்று நான் இப்பொழுது மெய்யாய் அறிந்திருக் கிறேன் என்றான் " (அப். 12:6-11). எத்தனை அற்புதமான காரியம் பார்த்தீர் களா? சபையாரின் வேண்டுதல் வீண்போக வில்லை. இன்றைக்கும் நாம் சபையின் ஊழியருக்காக ஜெபிக்கத் தவறாதிருக்க வேண்டும். அவர்கள் நமக்கு நன்மை உண்டாயிருக்கும்படி கர்த்தருடைய ஊழியக்காரராயிருக் கிறார்கள். ஆகையால், ஒவ்வொரு நாளும் சில மணித்துளி நேரமாவது நாம் அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். தேவ தூதனால் விடுவிக்கப்பட்ட பேதுரு, " மாற்கு என்னும் பேர் கொண்ட யோவானுடைய தாயாகிய மரியாள் வீட்டுக்கு வந்தான்; அங்கே அநேகர் கூடி ஜெபம் பண்ணிக் கொண்டிருந் தார்கள் " (அப். 12:12). பேதுருவைப் பார்த்தவுடன் சபையாருக்கு மிகுந்த சந்தோஷம் உண்டாயிற்று. கர்த்தர் தம்மை விடுவித்த விதத்தைக் குறித்து அவர்களோடு பேசி பகிர்ந்து கொண்டார்.


பழைய ஏற்பாட்டு காலத்தில் வாழ்ந்த தேவ மனுஷிகளில் குறிப்பாக எஸ்தர் என்று பெண்மணி மிகவும் போற்றத் தகுந்தவள். அவள் மொர்தெகாய்க்கு சொல்லச் சொன்ன செய்தி என்னவென்றால்; " நீர் போய் சூசானில் இருக்கிற யூதரையெல்லாம் கூடிவரச் செய்து, மூன்று நாள் அல்லும் பகலும் புசியாமலும், குடியாமலுமிருந்து, எனக்காக உபவாசம் பண்ணுங்கள்; நானும் என் தாதிமாரும் உபவாசம் பண்ணுவோம்; இவ்விதமாகச் சட்டத்தை மீறி, ராஜாவினிடத்தில் பிரவேசிப்பேன்; நான் செத்தாலும் சாகிறேன் என்று சொல்லச்சொன்னாள் " (எஸ். 4:16). தன் யூத ஜனத்திற்காக பக்தி வைராக்கியம் கொண்டு செத்தாலும் சாகிறேன் என்று துணிந்து ராஜாவிடம் சென்றாள். அவளுடைய மன்றாட்டு தம் ஜனத்தைப் பற்றியதாக இருந்தது. பொதுவாகவே நமக்கேன் வம்பு என்று ஒதுங்கி விடுவார்கள். ஆனால், எஸ்தரோ, ஆமான் நிமித்தமாக வந்த காரியத்தினிமித்தம் யூத ஜனங்கள் மாண்டு போய் விடக்கூடாது என்பதற்காக சட்டத்தை மீறி ராஜாவிடம் சென்று தன் மன்றாட்டை வைத்தாள். ஊக்கமாக உபவாசம் செய்து, ஊக்கமாக ஜெபித்த ஜெபத்திற்கு பலன் கிடைத்தது. இவ்விதமாய் யூதருக்கு வெளிச்சமும், மகிழ்ச்சியும், களிப்பும், கனமும் உண்டாயிற்று. அன்று அவர்கள் செய்த உபவாச ஜெபத்தின் பலன் இந்து தேச முதல் எத்தியோப்பியா தேசம் வரைக்குமுள்ள நூற்றிருபத்தேழு நாடுகளிலும் இருந்த யூதர்களுக்கு களிப்பான நாளாயிருந்தது.

ஆண்டவர் இயேசு, பாவத்தில் அடிமைகளாக இருந்த நம்மை மீட்கும்படியாக இவ்வுலகிற்கு கடந்துவந்தார். அவர் இப்பூமியில் பிறந்தது முதல் மரணம் வரை அவருக்குப் போராட்டம் இருந்தது. அத்தனை போராட்டங்களிலும் அவர் தம்முடைய பிதாவாகிய தேவனை நோக்கி ஊக்க மாக ஜெபித்தார். அவர் முப்பதாம் வயதில் ஞானஸ்நானம் பெற்று கரையேறி யவுடன் பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத் திற்குக் கொண்டு போகப்பட்டார். அவர் இரவு பகல் நாற்பது நாள் உபவாச மிருந்தார். அப்பொழுது உங்களுக்காகவும் எனக்காகவும் மன்றாடி ஜெபித்தார். பிசாசையும் அவன் கொண்டு வந்த ஆசைகளையும் சபித்தார். அதினாலே உலகத்திற்கே இரட்சிப்பு கிடைத்தது. பவுல் சொல்லும் போது; "பாவிகளை இரட்சிக்க கிறிஸ்து இயேசு உலகத்தில் வந்தார் என்கிற வார்த்தை உண்மையும் எல்லா அங்கிகரிப்புக்கும் பாத்திரமுமானது; அவர்களில்

பிரதான பாவி நான் என்கிறார் " (1 தீமோ. 1:15). மேலும் பவுல் அகிரிப்பா ராஜாவிடம் பேசும்போது; " அகிரிப்பா ராஜாவே, தீர்க்கதரிசிகளை விசுவாசிக்கிறீரா? விசுவாசிக்கிறீர் என்று அறிவேன் என்றான். அப்பொழுது அகிரிப்பா பவுலை நோக்கி; நான் கிறிஸ்தவனாகிறதற்குக் கொஞ்சங்குறைய நீ என்னைச் சம்மதிக்கப்பண்ணுகிறாய் என்றான். அதற்குப் பவுல்; நீர் மாத்திரமல்ல, இன்று என் வசனத்தைக் கேட்கிற யாவரும், கொஞ்சங்குறைய மாத்திரம் அல்ல இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப் போலாகும் படி தேவனை வேண்டிக் கொள்ளுகிறேன் என்றான் " (அப். 26:27,29). பவுலுடைய வேண்டுதலைப் பார்த்தீர்களா? கொஞ்சங்குறைய இந்தக் கட்டுகள் தவிர, முழுவதும் என்னைப்போலாகும் படி வேண்டிக் கொள்கிறேன் என்றார். நாம் மற்றவர்களைப் பார்க்கும் போதெல்லாம் அவரைப் பற்றியும் அவருடைய அன்பைப் பற்றியும் மற்றவர்களோடு பகிர்நது கொள்ள வேண்டும். அது யாராக இருந்தாலும் சரி, பெரிய அதிகாரிகளாக இருந்தாலும் சரி அவர்களுக்கு ஆண்டவர் இயேசுவைப் பற்றியும் அவர் கொடுக்கும் பாவ மன்னிப்பின் நிச்சயத்தைப் பற்றியும் சொல்லி அவர்களுக்காக வேண்டிக் கொள்ள வேண்டும். மேலும், பவுலுடைய மேலான புத்திமதி என்னவென்றால்; எல்லா மனுஷருக்காகவும் விண்ணப்பங்களையும், ஜெபங்களையும், வேண்டுதல்களையும், ஸ்தோத்திரங்களையும் பண்ண வேண்டும். நாம் எல்லாப் பக்தியோடும், நல்லொழுக்கத்தோடும் கலகமில்லாமல் அமைதலுள்ள ஜீவனம் பண்ணும்படிக்கு, ராஜாக்களுக்காகவும், அதிகாரமுள்ள யாவருக்காகவும் அப்படியே செய்ய வேண்டும். நம்முடைய இரட்சகராகிய தேவனுக்கு முன்பாக அது நன்மையும் பிரியமுமாயிருக்கிறது" என்கிறார் (1 தீமோ. 2:1-3).

## இடைவிடாமல் ஜெபிக்க வேண்டுமா?

இது ஒரு நல்ல கேள்விதான். ஆம் சிந்திக்க வேண்டிய கேள்வியும் கூட. எப்படியென்றால், இடைவிடாமல் என்றால் ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம், ஸ்தோத்திரம் ... என்று சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும் என்றல்ல. அநேகர் அவ்விதமாக சொன்னால் தான் இடைவிடாமல் ஜெபிப்பதாக அர்த்தம் என்று எண்ணுகின்றனர். இடைவிடாமல் என்றால், தொடர்ந்து என்று அர்த்தம். ஒரு நாளைக்கு மூன்று முறை ஜெபித்து வந்தார் தானியேல் என்ற தேவதாசன். அதைப்போல தொடர்ந்து இடைவிடாது ஜெபிக்க வேண்டும். மாதத்திற்கு ஒரு முறை அல்ல அல்லது வருடத்திற்கு ஒரு முறை அல்ல. சிலர் மாதத்திற்கு ஒரு முறை மட்டுமே சபைக்கு செல்வார்கள். அவ்விதமாக இல்லாமல் இடைவிடாமல் தொடர்ச்சியாக சென்று ஜெபிக்க வேண்டும். நாம் இச்செய்தியில் தியானித்தபடி ஊழியக்காரருக்காக, சபையாக கூடி ஜெபிக்கலாம். ஊழியக்காரர்கள் சபையின் ஆடுகளுக்காக ஜெபிக்கலாம். பவுல் தீமோத்தேயுவுக்கு சொன்னதைப்போல எல்லா மனுஷருக்காகவும் ஜெபிக்கலாம். நம் நாட்டிற்காக, வீட்டிற்காக, சபைக்காக, குறிப்புகளை வைத்துக்கொண்டு கிடைக்கக்கூடிய நேரத்திலெல்லாம் ஜெபிக்கலாம். ஆண்டவரும் அவ்வப்போது ஒலிவமலைக்குச் சென்று ஜெபித்து வந்தார் என்று சுவிசேஷப் புத்தகங்களில் படிக்கிறோம். அவ்விதமாக நீங்களும் இடைவிடாமல் ஜெபியுங்கள். நாங்களும் உங்களுக்காக ஜெபிக்கிறோம்.



# A MASSIVE MISSION

Lewis G. Hale

# மாபெரும் ஊழியம்

**பி**ரதான கட்டளையை மேலெழுந்தவாரியாக வாசிப்பது மிகவும் எளிமையான காரியமாகும். " *நீங்கள் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்* " (மாற்கு 16:15) கிறிஸ்து தம்முடைய மரணத்தை நேரில் பார்த்த மனிதர்களோடு பேசிக் கொண்டிருக்கிறார். அந்த மனிதர்கள் இயேசுவின் உயிர்த் தெழுதலையும் நேரில் பார்த்தவர்கள். அவர்களிடத்தில் உலகமெங்கும் போய் சர்வ சிருஷ்டிக்கும் இந்த நற்செய்தியை அறிவிக்கும் மாபெரும் ஊழியம் கொடுக்கப்பட்டது. அவர்கள் தங்கள் ஊழியத்தின் தன்மையை முழுமையாக அறிந்திருந்தார்கள் என்று நாம் நிச்சயமாகச் சொல்ல முடியாது. புறஜாதி உலகத்திற்கு நற்செய்தியை அறிவிக்க ஆர்வம் காட்டாததை வைத்துப் பார்க்கும் போது ஊழியத்தின் தன்மையை

அவர்கள் முழுமையாக உணர வில்லை என்றே தெரிகிறது. பேதுரு கொர்நேலியு மற்றும் அவனுடைய வீட்டாரிடத்தில் பிரசங்கிங்கும்படி யாக அனுப்பப்பட்ட போது தான் அதைக் கற்றுக் கொண்டார். யூதத் தலைவர்கள் புறஜாதியாரை ஏற்றுக் கொள்ள சம்மதித்த போது கூட தங்களுடைய நிபந்தனைகளின்படி தான் அது இருக்க வேண்டுமென்று விரும்பினார்கள். மேலும், அந்த யூதத்தலைவர்கள் புறஜாதிகள் முதலில் விருத்தசேதனம் செய்து கொள்வதன் மூலமாக யூதர்களாக மாறட்டும். அதன்பின்பு, அவர்கள் கிறிஸ்தவ விசுவாசத்தில் ஏற்றுக் கொள்ளப்பட முடியும் என்று வலியுறுத்தினார்கள்.

அந்த பிரதானகட்டளை இன்றும் அமுலில் இருக்கிறது என்பதை நாம் அறிந்திருக்கிறோமா? அது உலகத்தின் முடிவு பரியந்தமும் இருக்கும் (மத். 28:20). சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது என்பது அப்போஸ் தலர்களுக்கு எப்படி அவசியமாக இருந்ததோ அதேபோல் தான் நமக்கும் அது அவசியமாக இருக் கிறது. இன்றும் இழந்துபோன மனிதர்கள் இருக்கிறார்கள். இரட்சிப் பதற்கு சுவிசேஷம் இன்றும் தேவ பெலனாயிருக்கிறது. " *அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாத வர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்?* " (ரோமர் 10:14) அதற்கான தீர்வு என்ன? " *ஆதலால் விசுவாசம் கேள்வியினாலே வரும் கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்* " (ரோமர் 10:17).

சபையானது தேவனை ஆராதிக்கும்படியாகக் கூடி வருவதி லும், சில பாடல்களைப் பாடுவதிலும் சில விண்ணப்பங்களை ஏறெடுப்ப திலும் நடப்புச் சம்பவங்களைப் பற்றிய செய்தியைக் கேட்பதிலும், கர்த்தருடைய பந்தியில் பங்கு பெறுவதிலும் காணிக்கை கொடுப்ப திலும் திருப்தி பட்டுக்கொண்டு வீட்டிற்குப் போய் பக்தியை ஒரு வாரத்திற்கு ஓரமாக வைத்து விட்டால், தங்களிடத்தில் ஒப்புவிக் கப்பட்டிருக்கிற மாபெரும் ஊழியத் தைப் பற்றி அவர்களுக்கு எந்த எண்ணமும் இல்லை என்பது வெட்ட வெளிச்சமாகிவிடும்.

நாம் சபையாக கூடி வருவது தேவனுடைய திட்டத்தில் ஓர் இன்றி யமையாத பகுதியாக இருக்கிறது. ஆராதனை மிகவும் அவசியமானது. தேவன் துதிக்கப்படத்தக்கவர். ஆனால், இழந்து போனவர்களிடத் தில் நற்செய்தியை அறிவிக்கும் போது, மனிதர்கள் அதைக் கேட்க மறுக்கலாம். அது அவர்களுக்கும் தேவனுக்கும் இடையில் உள்ள காரியம். அவர்கள் அதைக் கேட்டு விட்டு அதற்கு செவிகொடுக்க மறுக்கலாம். ஆனால், அவர்கள் நற்செய்தியைக் கேட்க அவர் களுக்கு உதவுவது நம்முடைய பொறுப்பாயிருக்கிறது. அது நமக்கும் தேவனுக்கும் இடையில் உள்ள காரியமாயிருக்கிறது. உங்கள் ஊழியத்தைக் குறித்து ஜாக்கிரதை யாக இருந்து அதை நிறை வேற்றுங்கள்.

# நாங்கள் என்ன செய்ய வேண்டும்

## *What Shall we do?*

***E.Z. Selvanayagam***

வேதாகமத்தில் பல கேள்விகள் கேட்கப்பட்டிருக்கின்றன. மேலே, குறிப்பிட்டுள்ள கேள்வி அப். 2-ம் அதிகாரத்தின் பிற்பகுதியில் அப்போஸ் தலன் பேதுருவின் முதல் நற்செய்திப் பிரகடனத்தை செவிமடுத்த ஏராளமான மக்களில் தேவனுக்கு மெய்யாகவே பயப்பட்ட மக்களின் கேள்வி. இந்தக் கேள்வியைக் கேட்ட மக்கள் இயேசுவைச் சிலுவையில் அறைந்து கொன்ற கூட்டத்தில் இருந்தவர்களானபடியால் நீங்கள் சிலுவையில் அறைந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும், கிறிஸ்துவுமாக்கினார் என்று பேதுரு, பகிரங்கமாக, தைரியமாகக் குற்றஞ்சாட்டின பொழுது, அவர்கள் உள்ளத்தில் குற்ற உணர்வு மேலிட்டதால் அக்கறையுடன் கேட்கப்பட்ட கேள்வி (அப். 2:37).

### இக்கேள்வியைக் கேட்க அவர்களைத் தூண்டியது எது?

மோசே மூலமாய்க் கொடுக்கப்பட்ட யூதமார்க்கத்தின் கட்டுக் கோப்பையும், முன்னோர்களின் பாரம்பரியத்தையும் குறை கூறி அவைகளை நிலைகுலையச் செய்யும் முயற்சியில் வெற்றிமேல் வெற்றி பெற்றுக் கொண்டு வந்த இயேசுவை ஒழித்துக்கட்டி விட்டோம் என்று இறுமாந்திருந்தனர் சமயத் தலைவர்கள் பாவம்! அவர்கள் தேவனுடைய அநாதித் தீர்மானத்தை நிறை வேற்றுவதற்குப் பயன்படுத்தப்பட்ட கருவிதான் என்பதை அறியாமல் இருந்தார்கள். சரீரப் பிரகாரமாக இயேசுவைக் கொன்று போடுவதற்கு இம்மனிதர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியே, தேவனுடைய சித்தத்தை நிறை வேற்றுவதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்து இயேசுவைக் கர்த்தர் (அதிகாரம் உடையவர்) என்றும், கிறிஸ்து (தேவனால் அபிஷேகிக்கப்பட்டவர்) என்றும் அறிமுகம் செய்ய உதவியாக இருந்தது.

தேவனுடைய குமாரனைக் கொன்று போட்டோம், மனித குலத்தின் இரட்சகரை மரத்தில் தொங்க வைத்துவிட்டோம் என்ற குற்ற உணர்வே அவர்கள் இந்தக் கேள்வியை கேட்கத் தூண்டியது. பேதுருவின் பிரசங்கத் தைக் கேட்ட அவர்களுடைய மனோநிலை மாறி அவர்கள் இருதயம் குத்துண்டது.

### தங்கள் பாவ நிலையை உணர்ந்தனர்

ஒரு மனிதனின் இரட்சிப்புக்கு முதல்படி, தான் பாவி என்று உணர்ந்து ஒத்துக் கொள்வதாகும். பாவம் தான் நம்மை தேவனை விட்டுப் பிரிக்கிறது

என்ற உணர்வு வேண்டும் (ஏசாயா 59:2). இன்று உயிரோடு இருக்கிற நம்மில் அநேகர் இயேசுவின் நாட்களில் வாழ்ந்திருந்தால் நிச்சயமாக நாமும் கூட, அவரைச் சிலுவையில் அறையும், அறையும் என்று கூப்பாடு போட்டிருப் போம். ஏனெனில், இன்றைக்கும் நம்முடைய போக்கு இயேசுவை தேவனு டைய குமாரனை மீண்டும் சிலுவையில் அறைந்து அவமானப்படுத்துகிற தன்மையில் தான் இருக்கிறது (எபி. 6:6).

தங்களுடைய குற்றங்களை, மீறுதல்களை, பாவங்களை உணரும் நிலை உருவாவது எப்படி? அன்று பெந்தேகொஸ்தே நாளில் அறிவிக்கப்பட்ட சுவிசேஷத்தைக் கவனித்துக் கேட்ட மக்களைப் போன்று நாமும் சுவிசேஷத் தைக் கவனித்து கேட்க வேண்டும். அதனால் தான் இயேசு, " நீங்கள் கேட்கிற விதத்தைக் குறித்து கவனியுங்கள் " எனப் போதித்தார் (லூக். 8:18).

மேலும், அவர் மாற்கு 4:24ல், " நீங்கள் கேட்கிறதைக் கவனியுங்கள் " என்றார். நல்ல பலன் கிடைக்க வேண்டுமென்றால், கேட்கிறவர்களுடைய இருதயம் கூட நல்ல பக்குவத்தில் இருக்க வேண்டும் என்று கூறுகிறார். (மாற்கு 4:20). ஒருவர் என்ன கேட்கிறோம் என்றும், எப்படிக் கேட்கிறோம் என்றும் கூட கவனமாக இருக்கவேண்டும். அப்படியிருந்தால் தான் சுவிசேஷத் திற்குக் கீழ்ப்படியாததினால் அவர் மறுமையின்பத்தை இழந்து நிற்கிறார் என்று உணர முடியும். (ரோமர் 1:16; தெச. 1:7-10). சுவிசேஷமாகிய ராஜ்ஜி யத்தின் விதை (லூக். 8:11) ஒருவனுடைய உள்ளத்தில் ஊற்றப்படும் போது மறுபிறப்புக்குரிய வேலை தொடங்குகிறது (யோவான் 3:5) நண்பனே, சகோதரியே! நீங்கள் கிறிஸ்தவனானது சுவிசேஷத்தைக் கேட்டு, உங்கள் உள்ளம் குத்துண்டதாலா? அல்லது உங்கள் பெற்றோர், முன்னோர் கிறிஸ்த வர்கள் ஆகவே, நீங்களும் கிறிஸ்தவர்கள் என்ற பாணியிலா? வேதம் சொல்லுகிறதைக் கேளுங்கள். ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால், தேவனு டைய ராஜ்யத்தைக் காணமாட்டான். பிரவேசிப்பது என்பது அப்புறம் (யோவான் 3:3).

**விசுவாசித்தல் :** இரட்சிப்பின் திட்டத்தில் அடுத்தபடி விசுவாசம். விசுவாசம் எப்படி உண்டாகிறது? கேட்பவர்களெல்லாம் விசுவாசிகள் ஆகி விடுவதில்லை. இதைக் குறித்து ஏசாயா சொன்னதை அப்போஸ்தலன் பவுல் ரோமர் நிருபத்தில் மேற்கோள் காட்டி, " ஆனாலும் சுவிசேஷத்திற்கு எல்லாரும் கீழ்ப்படியவில்லை. அதைக் குறித்து ஏசாயா : கர்த்தாவே, எங்கள் மூலமாய்க் கேள்விப்பட்டதை விசுவாசித்தவன் யார்? என்று அங்கலாய்க்கிறான் " (ஏசாயா 53:1)

ஆதலால், விசுவாசம் கேள்வியினாலே வரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும் என்கிறார் (ரோமர் 10:16,17). அதாவது, சுவிசேஷம் வாயினால் பிரசங்கிக்கப்பட்டதானாலோ அல்லது அச்சிட்டதை வாசித்ததினா லோ விசுவாசம் வருகிறது. அதாவது, தேவனுடைய வசனம் விசுவாசத்தை உற்பத்தி செய்கிறது. ஒருவன் சுவிசேஷத்தைக் கேட்கும் போது, அவர்

பெத்லகேமில் வாழ்ந்த ஒரு ஏழைத் தச்சுத் தொழிலாளியின் மகன் அல்ல. அவர் தேவனுடைய குமாரன், உலக இரட்சகர் என்று ஏற்றுக் கொண்டு, என்னுடைய பாவங்களுக்காக அவர் மரித்தார் என்று விசுவாசித்துப் பின், அந்த விசுவாசம் அவனைக் கர்த்தர் சொன்ன எல்லா கட்டளைகளுக்கும் கீழ்ப் படிய வேண்டும் என்ற ஆவலை உண்டாக்குகிறது. இந்த விசுவாசம் அவனு டைய இருதயத்தை மாற்றுகிறது. நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக் கப்படும் (ரோமர் 10:10) வேதாகமம் இருதயம் என்று குறிப்பிடுவது மனிதனின் மனசு என்று பொருள்படும். அது அவனை கிறிஸ்துவுக்குப் பிரியமாய் நடக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தரும். " விசுவாசம் இல்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம். ஏனென்றால் தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக் கிறவர் என்றும் விசுவாசிக்க வேண்டும் " (எபி. 11-6). நண்பனே, சகோதரியே! சொல்லப்பட்டுள்ள, இந்த விசுவாசித்தல் எண்ணும் படியில் நீங்கள் ஏறின தாக நினைக்கிறீர்களா? இல்லாவிட்டால் இப்பொழுதாவது அதன் கருத்தைச் சிந்தித்துத் தக்க மாற்றத்தை உங்கள் உள்ளத்தில் ஏற்படுத்திக் கொள்ளுங்கள்.

**மனம் திரும்புதல் :**

மூன்றாவது படியாக, கீழ்ப்படிகிற விசுவாசம் ஒருவனுக்கு இருக்கு மானால் அது ஒருவனுடைய வாழ்க்கையை மாற்றி அமைக்கும். அதைத் தான் வேதாகமம் மனம் திரும்புதல் என்று கூறுகிறது. இது ஒரு கடினமான படி, இந்தப் படியேறும் போது தான் பலர் இடறிவிடுகிறார்கள். ஏனெனில், இந்த மனது (இருதயம்) எல்லாவற்றைப் பார்க்கிலும் திருக்குள்ளதும், மகா கேடுள்ளதுமாய் இருக்கிறது என்றும் (எரே. 17:9) இருதயத்தின் நினைவுகளின் தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாதது என்றும் (ஆதி. 6:5). மனிதனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயது முதல் பொல்லாததாயிருக்கிறது (ஆதி. 8:21) என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இன்று கிறிஸ்தவர்கள் என்று கூறிக்கொள்ளுகிற மக்கள் பலவிதமான பாவங்களில் தொடர்ந்து வாழ்ந்து கொண்டிருப்பதற்கு இந்தப் படி ஏறாததே காரணம். ஒரு பேருந்து வண்டியின் எல்லா உறுப்புக்களையும் பழுது பார்த்துச் சாயம் பூசி, பார்ப்பவர் கண் களுக்குப் பகட்டாக, வைத்துக் கொண்டாலும், எஞ்சினை இறக்கிப் பழுது பார்க்காமல் போனால் அதனுடைய ஓட்டம் சரியாக இராது. அதே போல் மனித னுடைய மனம் மாற்றம் இல்லாமல் போனால் வாழ்க்கையில் தூய்மையும், நற்பண்புகளும் காணப்படா. அதனால் தான் இயேசு, " நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். நீங்கள் மனந்திரும்பாமற் போனால், எல்லாரும் அப்படியே கெட்டுப்போவீர்கள் " என்கிறார் (லூக். 13:3). இதை மற்றவர்களோ, தேவனோ அல்ல, சம்பந்தப்பட்ட மனிதனே செய்தாக வேண்டும். ஒரு பக்தன் கூறினது போல், இருதயக் கதவுக்கு உள் தாழ்ப்பாள்தான் உண்டு. வெளித் தாழ்ப்பாள் கிடையாது என்பது எவ்வளவு உண்மை! மனந்திரும்புதல் என்பது ஒரு மனிதனுடைய சிந்தனைப் போக்கை மாற்றி, செயல்பட வைத்து கிறிஸ்து வுக்குள் நல்வழிப்படுத்துகிறது.

தலைப்பில் கண்டுள்ள கேள்வியைக் கேட்ட மக்களுக்கு அளிக்கப்பட்ட பதிலில் " மனந்திரும்புங்கள் " என்பது நிபந்தனையாகச் சொல்லப்பட்டிருக் கிறது (அப். 2:38). நண்பனே, சகோதரியே! நீ இந்த அனுபவத்தைப் பெற்றி ருக்கிறாயா? கெட்ட குமாரன் அந்த அனுபவத்தை அடைந்தான். அவன் புத்தி தெளிந்தான் (லூக். 15:17) எழுந்து, புறப்பட்டு, தன் தகப்பனிடத்தில் வந்தான் (15:20). சகேயு மனந்திரும்பினான் " சகேயு நின்று கர்த்தரை நோக்கி ஆண்டவரே; என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன். நான் ஒருவனிடத்தில் எதையேனும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் " (லூக். 19:8) அதன் பிறகே இயேசு இரட்சிப்பைப்பற்றி வாய் திறக்கிறார் (லூக். 19:9). நண்பனே, சகோதரியே! இந்தக் கடினமான படியைக் கடந்த அனுபவம் உண்டா? இல்லா விட்டால் முயன்று வெற்றி பெற உங்களுக்கு ஆலோசனை கூறுகிறேன்.

## அறிக்கையிடுதல் :

மனம் மாற்றப்பட்ட ஒருவனுடைய வாழ்க்கையில் கடக்க வேண்டிய நான்காவது படி, இயேசுவைக் கர்த்தர் என்று அறிக்கை பண்ணுதல். "மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன் " என்றார் இயேசு (மத். 10:32). அறிக்கை பண்ணுதல் என்றால் என்ன? குருவானவர் முன்பாக மண்டியிட்டு தான் செய்த பாவங்களையெல்லாம் அறிக்கையிட வேண்டும் என்று சிலர் போதிக்கிறார்கள். இதில் சில சங்கடங் களும், தகாத விளைவுகளும் உண்டாக வாய்ப்பு இருக்கிறது. மேலும், குருவானவருக்குப் பாவத்தை மன்னிக்க அதிகாரம் ஏது?

கிறிஸ்தவனாவதற்கு மிகவும் விருப்பப்பட்ட ஒரு மனிதனுக்குச் சொல்லப்பட்டதைக் கேளுங்கள். " நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை என்று பிலிப்பு கூறினதற்கு சம்பந்தப்பட்ட மனிதன், இயேசுக் கிறிஸ்துவைத் தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் " என்று பதில் சொன்னான் (அப். 8:37) மேலும், அப்போஸ்தலன் பவுல் ரோமருக்கு எழுதின நிருபத்தில் " இரட்சிப்புண்டாக வாயினால் அறிக்கை பண்ணப்படும் " (ரோமர் 10:10) என்கிறார். நண்பனே, சகோதரியே! நீங்கள் கிறிஸ்தவர்களான போது அப்படிப்பட்ட அறிக்கை செய்தீர்களா?

## தண்ணீரில் அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தீர்களா?

அதுதான் வேதம் சொல்லுகிற ஞானஸ்நானம். திருமுழுக்கு என்று இப்பொழுது அழகு தமிழில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. ஒருவன் சத்தியத்தைக் கேட்டு, விசுவாசித்து, மனந்திரும்பி அறிக்கையும் செய்து விடுகிறான். அதோடு இரட்சிப்பு பூரணமடைவதில்லை. ஐந்தாவதும், கடைசிப்படியும் ஆக அவன் தண்ணீரில் மூழ்கி ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும். " கிறிஸ்து இயேசுவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை

அறியாதிருக்கிறீர்களா? " (ரோமர் 6:3) மனந்திரும்பிய ஒருவன் தண்ணீரில் மூழ்கி (அடக்கம் பண்ணப்பட்டு) எழுந்திருக்கும் போது (உயிர்த்தெழும் போது) அவனுடைய பாவங்கள் போகக் கழுவப்படுகிறான். " நீங்கள் மனந் திரும்பி ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள் " என்றும் (அப். 2:38). " நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு, ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு " (அப். 22:16) என்றும் சொல்லப் பட்டிருக்கிறது. ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுக் கொள்கிறான். (ரோமர் 6:3; கலா. 3:27) ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருந்தால் புதுசிருஷ்டியாயிருக்கிறான் (2 கொரி. 5:17) ஒரு மனுஷனுடைய பாவங்கள் கழுவப்பட்டன என்றும், ஒருவன் கிறிஸ்துவுக்குள் இருக்கிறான் என்றும் அதுவே இரட்சிப்பின் சரியான வழி என்றும் அறிந்து கொள்வது எவ்வளவு மகிழ்ச்சியான செய்தி! இவைகளையெல்லாம் ஒழுங்காக நிறைவேற்றின பிறகு கர்த்தர் அவனை சபையில் சேர்த்துக் கொள்ளுகிறார். (அப். 2:47; 1 கொரி. 12:13).

இது முடிவு அல்ல : சுவிசேஷத்திற்கு மேற்சொன்ன முறையில் கீழ்ப் படிந்த பிறகு எஞ்சியுள்ள வாழ்க்கையை கர்த்தருக்குப் பிரியமாக வாழ வேண்டும் (வெளி. 2:10). இம்முறையை அடிபிறழாமல் கைக் கொண்டவர் களுக்கு மரணம் ஓர் இன்பக் கனவு போன்றது. நியாயத் தீர்ப்புக்குப் பிறகு, இதுவரையில் பரலோகத்தைப் பற்றி எண்ணிக் கொண்டிருந்த நினைவுக ளெல்லாம் நிஜமாகும்.

### அவர்கள் என்ன செய்தார்கள்?

தலைப்பில் கேட்கப்பட்ட கேள்விக்குப் பேதுரு மறுமொழி கொடுத்தவுடன் கேள்வி கேட்ட மக்கள் அவனுடைய பதிலைத் தெரிந்தவுடன், மகிழ்ச்சியாய் ஏற்றுக் கொண்டு ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். (அப். 2:41,42,47) நண்பனே! சகோதரியே! நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்? " அவரை அறிந்திருக்கிறேன் என்று சொல்லியும், அவருடைய கற்பனைகளைக் கைக்கொள்ளாதவன் பொய்யனாயிருக்கிறான். அவனுக்குள் சத்தியமில்லை " (3 யோவான் 2:4) என்பது தேவனுடைய தீர்ப்பு. ஆகவே, மனிதர்கள் உங்களை வஞ்சித்து விடாதபடி எச்சரிக்கையாயிருங்கள். இது வரை இந்தக் காரியங்களை நீங்கள் அறியாமலும், அறிந்தும் கீழ்ப்படியா மலும் இருந்தால் பரவாயில்லை. " அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர் போல் இருந்தார். இப்பொழுதோ மனம்திரும்ப வேண்டும் என்று எங்குமுள்ள மனுஷர் எல்லாருக்கும் கட்டளையிடுகிறார்" (அப். 17:30) உங்கள் பதில் என்ன?

# நெருக்கடி

# The Crisis

*Batsell Barrett Baxter*

கிறிஸ்துவுக்காக நாம் செய்யும் எல்லா வேலைகளிலும், ஒவ்வொரு செயலைப் பற்றிம், நிகழ்வு பற்றியும், செலவினம் பற்றியும் நாம் சுய பரிசோதனை செய்து கொண்டிருக்கிறோம். ஒவ்வொரு தீர்மானமும் நம் பிரதான நோக்கமாகிய ஆத்தும ஆதாயத்திற்காக எடுக்கப்பட வேண்டும். ஒவ்வொரு செயல்பாடும் மறுமதிப்பீடு செய்யப்பட வேண்டும். ஒவ்வொரு செயல்பாடும் புதிய அவதாரத்தை எடுக்க வேண்டும் அல்லது கைவிடப்பட வேண்டும்.

ஆத்தும இரட்சிப்பிற்காக நாம் சில தனிப்பட்ட அர்ப்பணிப்புகளையும், தியாகங்களையும் செய்ய வேண்டும். நாமெல்லோருமே நம் திறமைகள், நம் நேரம் மற்றும் நம் எல்லாவற்றையும் அவருக்கு ஒப்புக் கொடுக்க முன்வர வேண்டும். அவருடைய சுவிசேஷத்தினிமித்தம் நம்மையே முற்றிலுமாக ஒப்புக் கொடுக்க விரும்ப வேண்டும். நாம் திரும்பிப் போய் அப்போஸ்தலர் களின் அர்ப்பணிப்பை மறுபடியும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். குறிப்பாக, அப்போஸ்தலனாகிய பவுலின் அர்ப்பணிப்பை ஆராய்ந்து பார்க்க வேண்டும். உலகம் முழுவதிலுமுள்ள கிறிஸ்தவர்கள் உண்மையான உள்நோக்கத் துடன் கிறிஸ்துவின் சுவிசேஷத்தை நம்மைச் சுற்றி இருக்கும் இலட்சக் கணக்கான மக்களுக்கும், இவ்வுலகில் இருக்கும் கோடிக்கணக்கான மக்களுக்கும் கொண்டு சென்றால் தான் நம் ஊழிய முயற்சிகள் வலுப் பெறும்.

நாம் வாழும் காலம் தலைமைத்துவத்தில் நெருக்கடி ஏற்பட்டிருக்கிற காலமாயிருக்கிறது. மூப்பர்கள், உதவிக்காரர்கள், பிரசங்கியார்கள், பதிப்பா சிரியர்கள், வானொலி மற்றும் தொலைக்காட்சி பேச்சாளர்கள், போதகர்கள் மற்றும் இது போன்று செல்வாக்குள்ள எல்லாருமே இந்த ஊழிய நெருக்கடியில் முன்னோடியாய் இருந்து வழிநடத்த வேண்டும். மற்றவர்கள் பின்பற்ற வேண்டுமென்றால் தலைவர்கள் முன்னோடியாய்த் திகழ வேண்டும். நாம் பெரும்பாலும் பிற காரியங்களில் பரபரப்பாகி விடுகிறோம். அவைகள் முக்கியமான நல்ல காரியங்களாக மாறிவிடுவதால் ஊழியம் அதன் முக்கியத்துவத்தை இழந்து வெளியேற்றப்படுகிறது. மூப்பர்களும், பிரசங்கியார்களும் கர்த்தருடைய வேலையின் மற்ற நிலைகளில் தலைவர் களாக இருக்கிறவர்களும் வெளியே சென்று ஜனங்களை சந்தித்து

அவர்களுடைய ஆத்துமாக்களைக் குறித்துப் பேச நேரமில்லாமல் வேறு வேலைகளில் பரபரப்பாக இருக்கிறார்கள். ஒவ்வொருவரும் தங்களைத் தாமே தற்பரிசோதனை செய்து கொண்டு இந்தக் கேள்வியை கேட்க வேண்டும். " கடந்த பன்னிரண்டு மாதங்களில் கிறிஸ்துவினிடத்தில் எத்தனை பேரை நான் கொண்டு வந்திருக்கிறேன் "?

நம்முடைய அருமையான சபைக் கட்டிடங்களினாலும், வேதாகம பள்ளிகளினாலும் நாம் செய்த எல்லாவற்றினாலும், நம்மை மூடியிருக்கிற இருளின் உருவத்தை ஒன்றும் செய்ய முடியவில்லை. அது இன்னும் தொடர்ந்து வருகிறது. நாம் இரண்டாம் பட்சமான காரியங்களில் அதிக ஈடு பாடு கொண்டு முதன்மையான காரியத்தை உதாசீனப்படுத்தி விடுகிறோம். நம்மிடையே அர்ப்பணிப்பு குறைவாக இருக்கிறது. நம்முடைய உண்மை யான நெருக்கடி அர்ப்பணிப்பின்மை, விருப்பமின்மை போன்றவற்றால் ஏற்படும் செயல்பாடற்ற நெருக்கடிதான்.

## அல்ல, அல்ல

மணி மணியல்ல

அதை நீங்கள் அடிக்காத வரையில்!

முரசு முரசல்ல

அதை நீங்கள் கொட்டாத வரையில்!

பாட்டு பாட்டல்ல

அதை நீங்கள் பாடாத வரையில்!

அன்பு அன்பல்ல

அதை நீங்கள் செலுத்தாத வரையில்!

வாழ்க்கை வாழ்க்கையல்ல

அதை நீங்கள் கிறிஸ்துவுக்காக வாழாத வரையில்!!

# வெளிப்படையாக்கு

# Make it Plain

***Dan Jenkins***

தேவன் ஆபகூக்கிடம் "நீ தரிசனத்தை எழுதி அதைக் கடந்தோடு கிறவன் வாசிக்கும்படி பலகைகளிலே தீர்க்கமாக வரை" என்று சொன்னார் (ஆபகூக் 2:2). இந்த மனப்பான்மையே தேவனுடைய ராஜ்யத்தின் ஒவ்வொரு வேலையாளுக்கும் இருக்க வேண்டும். அவருடைய சேவையில் நாம் செய்யும் பெரும்பாலான காரியங்களில் எளிமை மற்றும் வெளிப்படைத்தன்மை காணப்படுவதில்லை.

பிரசங்கிமார்கள் வெளிப்படையாக பிரசங்கிக்க வேண்டும். பவுல் அகிரிப்பா ராஜா, பேலிக்ஸ் மற்றும் வேறு சிலரிடம் பிரசங்கித்த போது அந்த செய்தியில் உள்ள தெளிவை இன்று நாம் போதிக்கும் பாடங்களில் காணப்படும் தரத்தோடு வித்தியாசப்படுத்திப் பாருங்கள். வாரந்தோறும் நம் பிரசங்க மேடைகளில் செய்யப்படும் பிரசங்கங்களில் பெரும்பாலானவைகள் ஜெப ஆலயங்களிலும், கிறிஸ்துவில் விசுவாசம் வைக்காத கிறிஸ்தவ சபைகளிலும் வேண்டுமானால் ஏற்றுக் கொள்ளப்படலாம்.

முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களின் பிரசங்கங்கள் பட்டணங்களைக் கலக்கியதைக் குறித்து எப்போதாவது ஆச்சரியப்பட்டது உண்டா? அந்த பிரசங்கங்கள் மனித அதிருப்தியை ஏற்படுத்தி பெரும்பாலும் பிரசங்கியார்கள் கைது செய்யப்படுவதற்கு வழிவகுத்ததைக் குறித்து ஆச்சரியப்பட்டதுண்டா? ஆனால், இன்று செய்யப்படும் பெரும்பாலான பிரசங்கங்கள் பிரசங்கிமார்களை பட்டணத்தில் பிரபலமானவர்களாக ஆக்குகிறது. முதல் நூற்றாண்டு பிரசங்கங்கள் கேட்பவர்களுடைய இருதயங்களை கலக்கி அவர்கள் தங்கள் முந்தைய மதங்களை விட்டு விலகக் காரணமாயிருந்தது எப்படி? அதே நேரத்தில் இன்றைய நாட்களில் செய்யப்படும் பிரசங்கங்கள் கேட்பவர் தன்னுடைய வாழ்க்கையில் மாற்றம் தேவை என்பதை அறியாமலேயே அவ்விடத்தை விட்டு கடந்து செல்ல வழி வகுக்கிறது. அது எப்படி?

தனி நபர் ஊழியத்தைச் செய்கிறவர்கள் காரியங்களை வெளிப்படையாகப் பேச வேண்டும். நாம் மற்றவர்களோடு வேத வசனங்களைப் படிக்கும் போது தாங்கள் இழந்து போன நிலையில் இருப்பதை அவர்கள் காண வேண்டும். அவர்கள் கர்த்தரிடத்தில் வரும் போது தங்கள் முந்தைய

மதங்களை விட்டு விடுவதன் அவசியத்தை புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் எவ்வித சந்தேகமுமின்றி ஆராதனைக்கு வருவதிலும், கொடுத்த லிலும், தனி நபர் ஊழியத்திலும், ஒழுக்கத்திலும் தங்களுக்கு இருக்கும் கடமைகளை உணர வேண்டும். அவர்கள் செல்லு செலவை ஜாக்கிரதையாக கணக்குப் பார்க்க வேறு வழி இல்லை. தனி நபர் ஊழியத்தைச் செய்கிறவர்கள் வெளிப்படையாக பிரசங்கிக்கத் தவறுவதால் ஒரு பாவி உண்மையான தீர்மானத்தை எடுக்கத் தூண்டுவதில்லை.

வெளிப்படையாக்குங்கள் ! ஒவ்வொரு பக்திக்குரிய உரையாடலுக்கும், பிரசங்கத்திற்கும் வேத பாட வகுப்புக்கும், வீட்டு வேதபாட வகுப்புக்கும் இதுவே குறிக்கோளாக இருக்க வேண்டும். நம்முடைய பணி சத்தியத்தை வெளிப்படுத்துவதாகவே இருக்க வேண்டும். மறைப்பதாக அல்ல !

## இந்த வருடங்களின் சிறப்பு உங்களுக்குத் தெரியுமா?

1. **கி.மு. 536** ல் யூதர்கள் பாபிலோனிலிருந்து எருசலேமுக்குத் திரும்பினார்கள்
2. **கி.மு. 536** ல் ஏழாவது மாதத்தில் அவர்கள் பலி பீடத்தைக் கட்டி பலிகளைச் செலுத்தினார்கள்
3. **கி.மு. 535** ல் தேவாலயப் பணிகள் தொடங்கியது. ஆனால், பணிகள் உடனே நிறுத்தப்பட்டது
4. **கி.மு. 520** ல் தேவாலயப் பணிகள் ஆகாய் மற்றும் சகரியாவால் புதுப்பிக்கப்பட்டது.
5. **கி.மு. 516** ல் தேவாலயம் கட்டிமுடிக்கப்பட்டது.
6. **கி.மு. 478** ல் எஸ்தர் பெர்சியாவின் ராணி ஆனாள்.
7. **கி.மு. 457** ல் எஸ்றா பாபிலோனிலிருந்து எருசலேமுக்குச் சென்றார்
8. **கி.மு. 444** ல் நெகேமியா எருசலேமைச் சுற்றிலும் மதில்களைக் கட்டினார்
9. **கி.மு. 741** ல் இஸ்ரவேல் சீரியாவால் சிறைபிடிக்கப்பட்டது
10. **கி.மு. 606** ல் யூதா பாபிலோனால் சிறைபிடிக்கப்பட்டது

சபை வளர்ச்சி

# எனக்குப் பொறுக்கக்கூடாமற் போயிற்று

# I Cannot Hold It In

***Craig Phillips***



" ..... **நா**ன் கூறின கர்த்தருடைய வார்த்தை நாள்தோறும் எனக்கு நிந்தையும், பரிகாசமுமாயிற்று. ஆதலால், நான் அவரைப் பிரஸ்தாபம் பண்ணாமலும் இனிக் கர்த்தருடைய நாமத்திலே பேசமாலும் இருப்பேன் என்றேன்; ஆனாலும், அவருடைய வார்த்தை என் எலும்புகளில் அடைபட்டு எரிகிற அக்கினியைப் போல என் இருதயத்தில் இருந்தது; அதைச் சகித்து இளைத்துப் போனேன்; எனக்குப் பொறுக்கக் கூடாமற் போயிற்று " (எரேமியா 20:8-9).

**சுவிசேஷம் நம்முடைய கரங்களில் கொடுக்கப்பட்டிருக்கிறது. என்னால் அதைப் பொறுக்கக் கூடாமற் போயிற்று, ஏன்?**

***ஏனெனில், அன்பு ஓர் எச்சரிப்பை விடுக்கிறது!***

ஒரு மனிதன் தீப்பற்றி எரிகிற ஒரு கட்டிடத்தில் மாட்டிக் கொண்டான். அவனுடைய கண்கள் வேதனையால் துடித்தன; அங்கே இருந்த வெப்பத்தினாலும், புகையினாலும் அவனுடைய நுரையீரல் வெந்து கொண்டிருந்தது. அவன் தப்பிக்க வழியைத் தேடித்தேடி கடைசியாக அந்தக் கட்டிடத்திலிருந்து வெளியேறுவதற்கு ஒரு வழியைக் கண்டுபிடித்தான். ஓ! இப்போது என்னால் மூச்சுவிட முடிகிறது, நன்றாக இருக்கிறது! தேவனுக்கு நன்றி!

ஆனால், அதன்பிறகு எரியும் கட்டிடத்திற்குள்ளிருந்து வேறு சிலருடைய அலறுதல் சத்தத்தை அவன் கேட்கிறான். அவர் தன் மனதில் இவ்விதமாக நினைத்தார், " வெளியே போவதற்கு எனக்கு வழி தெரியும். அவர்கள் இன்னும் வழியைக் கண்டு பிடிக்கவில்லை. நான் அவர்களுக்கு உதவ வேண்டும் இல்லையென்றால் அவர்கள் எரிந்து மரித்து விடுவார்கள்". எனவே, அவன் தங்களை காப்பாற்றிக் கொள்ள முடியாதவர்களை காப்பாற்றுவதற்காக அக்கினி ஜுவாலையினிடத்திலும், புகையினிடத்திலும் திரும்பினான்.

" *அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறபடியே* " (எபி. 9:27)

"...... *தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும் ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்*" (2 தெச. 1:7-8).

" *அவரை விசுவாசியாதவர்கள் எப்படி அவரைத் தொழுதுகொள்ளுவார்கள்? அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்* " (ரோமர் 10:14) என வேத வசனம் சொல்கிறது.

உங்கள் வீட்டில் தீப்பற்றிக் கொண்டால், உங்கள் குடும்பத்தினரும், நண்பர்களும் அந்த ஆபத்தை உணராதிருந்தால், அவர்கள் உள்ளேயே எரிந்து சாகும்படி விட்டு விடுவீர்களா? இல்லை! நீங்கள் அவர்களை எச்சரிப்பீர்கள் அவர்களோடு மன்றாடுவீர்கள் - உங்களுடைய பிரியமானவர்கள் அந்த மரண இடத்திலிருந்து வெளியேற எதை வேண்டுமானாலும் செய்வீர்கள்.

## என்னால் அதைப் பொறுக்க முடியாது ஏன்?

ஏனெனில், பொறுப்பு நாம் பேசும்படி வலியுறுத்துகிறது

தேவன் எசேக்கியேலிடம் சொன்னதுபோல், நம்மிடமும் சொல்கிறார்... " *கலகக்காரராகிய அவர்கள் கேட்டாலும் சரி, கேளாவிட்டாலும் சரி, நீ என் வார்த்தைகளை அவர்களுக்குச் சொல்லு*" (எசேக்கியேல் 2:7).

"*மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன்; நீ என் வாயினாலே வார்த்தையைக் கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக. சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கமான வழியில் இராதபடிக்கு எச்சரிக்கும்படியாகவும், அவனை உயிரோடே காக்கும்படியாகவும், அதை அவனுக்குச் சொல்லாமலும், நீ அவனை எச்சரிக்காமலும் இருந்தால், அந்தத் துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்திலே சாவான்; அவன் இரத்தப் பழியையோ உன் கையிலே கேட்பேன்*" (எசே. 3:17,18).

இழந்துபோனவர்களிடத்தில் எனக்கு மிகப்பெரிய பொறுப்பு இருக்கிறது. ஏனெனில், இயேசு கிறிஸ்து நமக்காகப் பாடுபட்டார், நமக்காக இரத்தம் சிந்தினார், நம்முடைய இரட்சிப்பிற்காக மிகுந்த வேதனை அடைந்தார். நாம் போய் மற்றவர்கள் தங்கள் பாவங்களிலிருந்து எப்படி இரட்சிக்கப்பட முடியும் என்று சொல்லும்படியாக நமக்குக் கட்டளையிட்டிருக்கிறார்.

சிலர் எனக்குத் திறமை இல்லை... "நான் மிகவும் அலுவலாக இருக்கிறேன்..." எனக்கு வேறு

வேலை இருக்கிறது என்றெல்லாம் சொல்லுகிறார்கள்.

ஒரு ராணுவத் தளபதியின் கதை சொல்லப்பட்டிருக்கிறது. அது, ஒரு ராணுவ தளபதி போர்முனையில் சண்டையிட்டு காயமடைந்து, மிகுந்த சோர்வுடன் முகாமுக்குத் திரும்பி விடுகிறார். முகாமுக்கு அருகில் திடகாத்திரமான ஒரு மனிதனைக் கண்டு, " ராணுவ வீரனே " என்று அழைத்து " நீ இங்கே என்ன செய்து கொண்டிருக்கிறாய்" என்று கேட்டார்.

" நல்லது, ஐயா, எங்கள் கேப்டனுடைய காலணியை மின்னச் செய்து கொண்டிருக்கிறேன்" என்பது அந்த ராணுவ வீரனுடைய பதிலாக இருந்தது.

"கேப்டனுடைய காலணியைத் துடைக்கிறாயா" என்று அந்த தளபதி கேட்டார்.

ஆம், அவருடைய வருகையின் போது எல்லாம் நன்றாக இருக்கிறது என்று நிச்சயப்படுத்துகிறேன்.

"ராணுவ வீரனே, நீ போர்முனையில் தேவைப்படுகிறாய்" என்று அந்த தளபதி தொடர்ந்து வலியுறுத்தினார்.

"ஆனால், ஐயா அந்த அளவு எனக்கு திறமை இல்லை; போர் என்றால் எனக்கு பயம்" என்று அந்த ராணுவ வீரன் சொன்னான்.

"ராணுவ வீரனே, நான் உன்னிடம் இன்னொரு கேள்வி கேட்கட்டும். இரண்டு கால்கள் இருக்கிறதா?" என்று கேட்டார்.

"ஆம், ஐயா என்று அந்த ராணுவ வீரன் பதிலளித்தார்".

"உன்னுடைய கை, கால், காது, கண் போன்றவைகளில் ஏதாவது பிரச்சனை இருக்கிறதா, உன் மனதுக்கு ஏதாவது பிரச்சனை இருக்கிறதா?" என்று தளபதி கேட்டார்.

அதற்கு இல்லை என்று அந்த ராணுவ வீரன் பதிலளித்தார்.

அப்போது அந்தத் தளபதி தன்னுடைய உதவியாளரிடம், "இந்த மனிதன் கொல்லப்பட வேண்டும்" என்று கட்டளையிட்டார்.

அந்த ராணுவ வீரன் அதிர்ச்சியடைந்து, "தளபதியே, நீங்கள் கடினமான மனுஷன்" என்று சொல்லி தன்னுடைய எதிர்ப்பை தெரிவித்தான்.

இயேசு தம்முடைய ஜனங்களுக்காக அதிகமாகப் பாடுபட்டார். அவர் நம் ஒவ்வொருவருக்கும் தந்திருக்கிற தாலந்துகளை இழந்து போனவர்களைச் சந்திக்கப் பயன்படுத்தும்படியாக கேட்டுக் கொள்கிறார். தாலந்துகளின் உவமையில், பயந்த அந்த வேலைக்காரன் தனக்குக் கொடுக்கப்பட்ட தாலந்துகளைப் பயன்படுத்துவதற்குப் பதிலாக மண்ணுக்குள் புதைத்து வைத்தான். தன்னுடைய எஜமானிடம் தன் எதிர்ப்பை தெரிவித்தான். "ஆண்டவனே, நீர் கடினமுள்ள மனுஷன் என்று அறிவேன். ஆகையால், நான் பயந்து, போய் உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன்; இதோ, உம்முடையதை வாங்கிக் கொள்ளும்" என்றான்.

இயேசுவின் பதில் அந்த தளபதியின் பதிலில் இருந்து சற்று வேறுபடுகிறது. இயேசு "பொல்லாத வனும், சோம்பனுமான ஊழியக் காரனே" என்று சொன்னார். அதன் பின்பு அவர் தம்முடைய தூதர்க ளுக்கு "அவனைப் புறம்பான இருளி லே தள்ளிப் போடுங்கள்" என்று அறிவுறுத்தினார். அங்கே அழுகை யும், பற்கடிப்பும் உண்டாயிருக்கும்" என்றார் (மத். 25:24-26,30).

அந்த தாலந்துகளின் உவமையில் இயேசு நம் இரட்சகர் என்று மாத்திரமல்ல, அவர் கடின மான மனிதர் என்றும் வெளிப்படுத் தப்பட்டிருக்கிறது. அவர் நாம் செய்யும்படியாக ஒரு பணியைத் தந்து நாம் அதை நிறைவேற்ற வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்.

சிலர், "இது மிகவும் கடின மானது" என்று சொல்கிறார்கள். மக்கள் அதைக்கேட்க விரும்பு வதில்லை.

உங்கள் பொறுப்பின்மை யைப் பார்த்து இயேசு கண்ணீர் விடும்படி செய்து விடாதீர்கள். ஜனங்கள் கீழ்ப்படியாதவர்களாகத் தான் இருக்கிறார்கள். பல வேளை களில் நாம் தேவனுடைய பணியைச் செய்வதற்காக வெளியே கடந்து செல்கிறோம். ஆனால், யாரும் நற்செய்தியைக் கேட்க விரும்பு வதில்லை. நாம் மறுபடியும், மறு படியும் போக வேண்டும். ஜனங்க ளுடைய விருப்பமின்மையை நாம் எதிர்கொள்வோம். ஆர்வக் குறை வை நாம் எதிர்கொள்வோம். ஆனால், நாம் நம்முடைய முயற்சியை விட்டு வெளியேறும்படி சாத்தான் நம்மைச் சோர்வுறச் செய்ய ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

ஓர் இளம் கிறிஸ்தவனாக, சுவிசேஷத்தை எடுத்துரைக்க விரும்பி, உலகத்தில் என்னைப் போன்ற ஒரு பின்னணியுள்ள ஒரு மனிதனிடம் நட்பை வளர்த்துக் கொண்டேன். இரட்சிப்பு எனக்கு விலையேறப் பெற்ற ஒன்றாக இருந்தது. நான் கற்றுக்கொண்ட அருமையான சமாதானத்தையும், நம்பிக்கையையும் என் நண்பர் அறிந்து கொள்ள விரும்பினேன்.

நான் என் நண்பனுடைய வீட்டிற்குப் போய் அவரோடு பேச முயற்சி செய்தேன். ஆனால், அதில் அவருக்கு விருப்பம் இல்லாதிருந் தது. ஆனால், அவருக்கு சுவிசேஷம் எவ்வளவு அவசியம் என்பதை என்னால் மறுக்க முடியவில்லை. எனவே, தொடர்ந்து அவரை தொலைபேசியில் அழைத்துக் கொண்டும், அவரைப் பார்க்க போய்க்கொண்டும் இருந்தேன். ஒரு நாள் அவருடைய வீட்டிற்கு முன்பாக என் வண்டியை நிறுத்தின போது, அந்த ஜன்னல் வழியாக மற்றுமொரு நண்பரைப் பார்த்தேன். அவர் திரும்பிப் பார்த்து என் நண்பரிடம் ஏதோ சொன்னார். என் நண்பர் வெளியே பார்க்கும்படியாக ஜன்னல் பக்கம் வந்தார். அவன் என் வாகனத்தைப் பார்த்தபோது கோபம் மற்றும் எரிச்சலை வெளிப்படுத்தும் விதமாக தன் கைகளை வீசினார். அந்தச் செயல் என்னை கத்தியைப் போல் குத்தியது. ஏனென்றால், அது

அவரோடு நான் சத்தியத்தை பகிர்ந்து கொள்ளும்படி நான் எடுத்த முயற்சி களை அவர் எவ்வளவாய் வெறுத்தார் என்பதையே காட்டியது.

என் கண்ணீரைக் கட்டுப் படுத்த முடியாதபடியால் நான் வண்டியை எடுத்துப் புறப்பட்டு விட்டேன். ஆனால், நான் மறுபடியும் சென்றேன். தொடர்ந்து அந்த நண்ப ரோடு பேசி அவர் தான் வாழ்ந்து கொண்டிருந்த முறையினால் தன்னு டைய வாழ்க்கையையும், ஆத்துமா வையும் தூக்கி எறிந்து விட்டார் என்பது குறித்த காரண காரியங் களைப் பேசினேன். தேவன் அந்த நண்பரை நேசித்து அவர் மனமாற உதவி செய்தார்.

இன்று அந்த நண்பர் சுவிசேஷப் பிரசங்கியாராயிருக் கிறார். தற்சமயம் அவர் பிறரைப் போய் சந்திக்கத்தக்கதாக தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்ளும் விதமாக ஒரு வேதாகமப் பள்ளியில் பயின்று வருகிறார். நான் திரும்ப வும் போகாமல் இருந்திருந்தால், அந்த நண்பருடைய கோபச் செயல் அவரை ஆதாயப்படுத்துவதை விட்டு விட நான் அனுமதித்திருந் தால் என்ன நடந்திருக்கும் என்பதை நினைக்கும் போது என் இருதயம் உறைந்து போகிறது.

நாம் நேசிக்கும் ஆத்துமாக்கள் நிமித்தம், நாம் எதிர்கொள்ளும் எந்த ஒரு மனப்பான்மையினாலும் நாம் சோர்வடைந்துவிடக் கூடாது.

இயேசு கிறிஸ்து அடிக்கடி ஊழியப் பணியை ஒரு விவசாயி யோடு ஒப்பிட்டுப் பேசியிருக்கிறார். விவசாயி விதையை விதைக்கிறான். அவன் தன் கைகளில் கொப்பளங் கள் நிறைந்தவனாய்க் காணப்படு கிறான். கடும் வெயிலில் வியர்வைச் சிந்துகிறான். காற்று அவனுடைய கண்களில் புழுதியை அள்ளி வீசு கிறது. பூச்சிகள் அவனைக் கொத்திக் கடிக்கின்றன. அவன் அடிக்கடி பறவையினிடத்திலும், வெள்ளத்தி னிடத்திலும் விதையை பறிகொடுக் கிறான். ஆனால், அவன் விதைப்ப தையும், தண்ணீர் பாய்ச்சுவதையும் நிறுத்துவதில்லை. ஏனென்றால், பணியில் தன்னுடைய பங்கை உண்மையாகச் செய்யும் போது அறுவடை உண்டாகும் என்பதை அவன் அறிந்திருக்கிறான்.

நாம் அதுபோல் தொடர்ந்து தேவனுடைய வார்த்தையைப் பிரசங் கித்துக் கொண்டே இருக்க வேண் டும். (சங். 126:5) " கண்ணீரோடே விதைக்கிறவர்கள், கெம்பீரத்தோடே அறுப்பார்கள்" என்று சொல்கிறது.

எனக்குப் பொறுக்கக் கூடாமற் போயிற்று! ஏன்?

ஏனென்றால், நற்செய்தி பகிர்ந்து கொள்ளப்படுவதற்குப் பாத்திரமாயிருக்கிறது. 2 ராஜாக்கள் ஆறாம் அதிகாரத்தில் இஸ்ரவேலின் முக்கியப் பட்டணமாகிய சமாரியா சீரியப்படையால் சூழ்ந்து கொள்ளப் பட்டது. அந்தப் பட்டணத்தில் மிகப் பெரிய பஞ்சம் உண்டானது, பஞ்சத்தால் அந்த ஜனங்கள் சோர்ந்து போய்விட்டார்கள். அங்கே இரண்டு தாய்மார்கள் தங்களுடைய ஆண்பிள்ளைகளை சமைத்துச் சாப்பிட சம்மதிக்கும் அளவுக்கு பஞ்சம் கொடுமையாக இருந்தது.

ஏழாம் அதிகாரத்தில் நான்கு குஷ்டரோகிகள் பட்டணத்திற்குப் போய் பிச்சை எடுப்பதா அல்லது சீரிய ராணுவத்தின் பாளையத்திற்குப் போவதா என்பதைக் குறித்து அவர்களுக்குள்ளே வாக்குவாதம் பண்ணினார்கள். சமாரியாவில் ஆகாரம் இல்லை என்பதை அவர்கள் அறிந்திருந்தபடியால் சீரியர்களிடம் சரணடைய விரும்பினார்கள். அவர்கள் சீரிய ராணுவத்தின் பாளையத்தை அடைந்த போது அது காலியாக இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள். அந்த இராத்திரியில் தேவன் சீரியரின் இராணுவத்திற்கு ரதங்களின் இரைச்சலையும், குதிரைகளின் இரைச்சலையும் கேட்கப் பண்ணினதினால் அவர்கள் பயங்கரமாக பயந்து பாளையத்தை அவர்களாகவே விட்டுச் சென்றுவிட்டார்கள்.

அந்த குஷ்டரோகிகள் சீரியரின் பாளையம் காலியாக இருந்ததைக் கண்டு உள்ளே புகுந்து வெள்ளி, பொன் போன்றவைகளைக் கொள்ளை அடித்து, ஒளித்து வைத்தார்கள். பின்பு அந்த குஷ்டரோகிகளில் ஒருவன் நாம் செய்கிறது நியாயமல்ல. இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மவுனமாயிருந்து, பொழுது விடியும் மட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும்; இப்போதும் நாம் போய் ராஜாவின் அரமனை யாருக்கு இதை அறிவிப்போம் வாருங்கள் என்றான் (2 ராஜா 7:3,9).

தேவனுடைய இரட்சிப்பு நற்செய்தியாயிருக்கிறது. நம்மேல் தண்டனை வராதபடிக்கு நமக்குள்ளே அதை அடக்கி வைக்கக் கூடாது. நிச்சயமாகவே, சிலர் நமக்கு செவி கொடுக்க விரும்பமாட்டார்கள். ஆனால், பட்டினியாயிருப்பவர்களுக்கு நம் வார்த்தைகள் உண்மையாகவே ஜீவ அப்பமாக இருக்கும்.

இன்னும், போதிப்பதற்கு சிறந்த வழி தனி நபர் வேத பாட வகுப்பாகும், சிறந்த இடம் வீடு. அது உங்கள் வீடாகவோ, அல்லது உங்கள் நண்பர்களுடைய வீடாகவோ அல்லது உறவினருடைய வீடாகவோ இருக்கலாம். மும்பையில், தனிப்பட்ட கிறிஸ்தவர்கள் வாரத்திற்கு ஒருமுறை தங்கள் இல்லங்களில் அவர்களுடைய நண்பர்களை அவர்களாகவே முன்வந்து அழைத்தார்கள். ராஜ மோசஸ் என்பவர் தன்னுடைய வேத பாட வகுப்பிற்கு ஐந்து பார்வையாளர்கள் என்கிற இலக்கை வைத்தார். முதலில் அவர் அதில் தோல்வி அடைந்தார். ஆனால், தொடர்ந்து அவர் பார்வையாளர்களை அழைக்கவும், வார்த்தைகளைப் பகிர்ந்து கொள்வதாகவும் இருந்தார். இப்போது வாரந்தோறும் 35 முதல் 40 ஆத்துமாக்கள் வருகிறார்கள்.

நற்செய்தியானது பகிர்ந்து கொள்ளப்பட வேண்டியதாயிருக்கிறது.



# மேலானவைகளைத் தேடுங்கள்

## Seek Those Things which Are Above

*Wayne Barrier*

நம்முடைய வாழ்க்கையில், நாம் நமக்குத் தேவையான ஆற்றல், கவனம், முக்கியத்துவம் கொடுத்தல் போன்றவைகளில் எதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டுமென்று வேதாகமம் தெளிவாக அறிவுறுத்துகிறது. சிலவேளைகளில் நாம் இதை மறந்து குறைவான முக்கியத்துவம் வாய்ந்த காரியங்கள் நம் வாழ்க்கையை கட்டுப்படுத்த அனுமதித்து விடுகிறோம். நாம் பல நேரங்களில் மிக எளிதாக சிக்கலான, பரபரப்பான, கிறிஸ்தவ அறத்திற்குப் புறம்பான வாழ்க்கை முறைக்குள் அடித்துச் செல்லப்படுகிறோம் அவைகள் வாழ்க்கையின் மற்ற நிலைகளை விட கிறிஸ்தவ சேவையையும், முக்கியத்துவத்தையும் சற்று கீழான நிலையில் வைக்கும்படி நம்மைச் செய்துவிடுகிறது.

கொலோ. 3:1-4 வசனங்களில் நாம் இவ்விதமாக வாசிக்கிறோம். "நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள். ஏனென்றால், நீங்கள் மரித்தீர்கள், உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது நம்முடைய ஜீவனாகிய கிறிஸ்து வெளிப்படும்போது, நீங்களும் அவரோடேகூட மகிமையிலே வெளிப்படுவீர்கள்".

மத். 6:33ல் இயேசு "முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும், அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகள் எல்லாம் உங்களுக்குக் கூட கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார். இந்த வசனத்தில் இயேசு கிறிஸ்து,


மனிதன் தேவனுடைய ராஜ்யத்திற்கு மேலாக முக்கியத்துவம் கொடுக்கிற, அடிக் கடித்தேடுகிற காரியங்களைப் பட்டியலிடுகிறார்". மேலும், மத். 6:24ல் இயேசு இவ்விதமாகச் சொல் கிறார். "இரண்டு எஜமான்களுக்கு ஊழியஞ் செய்ய ஒருவனாலும் கூடாது; ஒருவனைப் பகைத்து, மற்ற வனைச் சிநேகிப்பான்; அல்லது ஒருவனைப் பற்றிக் கொண்டு மற்ற வனை அசட்டை பண்ணுவான்; தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ் செய்ய உங்களால் கூடாது".

நாம் மேலான காரியங் களுக்கு முக்கியத்துவம் கொடுக்க கற்றுக் கொள்ள வேண்டும். அதன் பொருள் நம் வாழ்க்கையின் வேறு எந்த காரியத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது என்பதல்ல. நிச்சயமாகவே, வாழ்க்கையின் மற்ற காரியங்களும் முக்கியமானது தான். நாம் வாழ்வதற்கு வேலை செய்ய வேண்டும். எனவே, நாம் வேலைக் கும், தொழில் நிதி போன்ற காரியங் களுக்கும் முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். நாம் மேலானவைக ளுக்கு முதலிடம் கொடுத்தால் வாழ்க்கையின் மற்ற பகுதிகளில் நாம் செய்யும் முயற்சிகள் முதலிடம் கொடுக்கிற கிறிஸ்துவால் ஆளுகை செய்யப்படும். மேலானவைகளை வெற்றிகரமாக நாம் முதலில் தேடும் போது நம் வேலைகள், தொழில்கள் நிதி போன்ற காரியங்கள் தேவனுக்கு மிகப்பெரிய சேவை செய்கிறதில் போய் முடியும்.

கொலோ. 3:5ல் பவுல் நாம் அழித்துப்போட வேண்டிய பூமிக் குரிய சில காரியங்களைக் குறித்துப் பேசுகிறார். இந்தக் காரியங்க ளெல்லாம் பூமிக்குரிய இலக்கு களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுப்பதனால் ஏற்பட்ட விளைவு களாகும். அதில் விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாரா தனையான பொருளாசை போன்ற வைகள் உள்ளடக்கம்.

நாம் மரணபரியந்தம் தேவ னுக்கு உண்மையுள்ளவர்களாயி ருந்தால் நமக்கு நித்திய ஜீவன் வாக்குத்தத்தம் செய்யப்பட்டிருக் கிறது (வெளி. 2:10). பெரும்பாலான மக்கள் இந்த பூமியில் தங்கள் ஆயுசு நாட்களை அதிகப்படுத்தும் எந்த ஒரு பொருளுக்கும் அதிக விலை கொடுக்க முன்வருவார்கள். கிறிஸ்து ஒவ்வொரு மனிதனும் நித்திய வாழ்வின் நம்பிக்கை பெற்றுக் கொள்வதை சாத்தியமாக்குகிறார். (யோவான் 3:16). நாம் வாழ்க்கையில் அவருக்கு முதலிடம் கொடுக்கும் படியாக மட்டுமே கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறோம். "முதலிடம்" என்பதற்கான பொருளை அவரு டைய வார்த்தை நமக்கு கற்றுத் தருகிறது.

# ஜீவன் என்னும் ஈவு




**Jane McWhorter**

நீங்கள் வாழ்க்கையை நேசிக்கிறீர்களா? அப்படியென்றால் நேரத்தை முட்டாள்தனமாக விரயம் செய்யா தீர்கள். ஏனென் றால், வாழ்க்கை யானது நேரத்தி னால் தான் உண் டாக்கப்பட்டி ருக்கிறது (பெஞ்ச மின் பிராங்களின்)

நம்மில் பலர் நேரமானது நாம் விரும்பும் விதத்தில் பயன்படுத்தப்படுவதற்கு கடமைப்பட்டுள்ளது என்று நினைக்கிறோம். ஆனால், தேவன் ஓர் புதிய விடியலுக்கோ அல்லது அந்தந்த நாளின் முடிவுக்கோ தேவன் நமக்குக் கடன்படுவதில்லை. நம் வாழ்வின் ஒவ்வொரு மணி நேரமும் அவரிடத்திலிருந்து வரும் விசேஷித்த ஈவாயிருக்கிறது. ஒரு விதத்தில் பார்த்தால் ஒவ்வொரு புதிய நாளின் தொடக்கத்திலும் தேவன் அந்த நாளை ஞானமாக பயன்படுத்த வேண்டும் என்கிற நோக்கத்தில் நமக்கு தேவன் தருகிறார்.

தற்கொலையைப் பற்றி நாம் கேள்விப்படும்போது, நம் வழக்கமான பதில் அறிவில்லா மல் வாழ்க்கையை தூக்கி எறிகிறார்களே என்பதாயிருக்கிறது; ஆனால் நம்மில் பலர் அதை கொஞ்சம் கொஞ்சமாக செய்வதைப் பற்றி கவலைப்படுவதில்லை. நேரத்தை வீணாகக் கழிப்பது அதைக் கொலை செய்வதற்குச் சமம் என்பதை நாம் உணர்ந்து கொள்ளத் தவறுகிறோம்.

உடல் மற்றும் உள்ளத் தைச் சுறு சுறுப்பாக வைத்துக் கொள்வதற்காக பொழுது போக்கு அம்சங்களில் ஈடுபடுவதோ அல்லது

அதற்காகச் செலவிடப்படும் நேரமோ வீணானதல்ல. ஆனால், அன்றாட கால அட்ட வணையுடன் அது ஒத்துப்போக வேண்டும். ஆனால், நம்முடைய பெரும் பாலான நேரங்கள் நாம் ஓய்வு எடுத்துக்கொண்டு பொழுது போக்கு அம்சங்களில் ஈடுபடுவதிலோ அல்லது தேவனுக்கோ, மனிதனுக் கோ செய்யப்பட வேண்டிய சேவையிலோ கழிவதில்லை. நாம் நேரத்தை சரியாக பயன்படுத்தத் தவறுவதால் அது வீணடிக்கப்படு கிறது.

ஒவ்வொரு நாளையும் ஒரு பெரியவாளியாக நினைத்துக் கொள்ளுங்கள். அந்த வாளியில் (பக்கெட்டில்) கால்பந்துகளை போட்டு நிரப்புங்கள். பக்கெட்டை பந்துகளால் முழுவதும் நிரப்பின வுடன் அதற்கு மேல் அந்த பக்கெட் கொள்ளாது அல்லது தாங்காது என்று நினைத்து விடுகிறோம். ஆனால், பந்துகளால் நிரப்பப்பட்ட அதே பக்கெட்டில் பந்துகளுக் கிடையே சிறிய அளவிலான வேறு பொருள்களைப் போட முடியும். அதற்கு மேல், பக்கெட் கொள்ளாது என்று நாம் நினைத்தாலும், அதற்கு மேலும் அந்த வாளிக்குள் குறிப்பிட்ட அளவு மணலைப் போட முடியும். இதற்கு மேல் ஒன்றும் போட முடியாது என்று நாம் நினைத்தால் கூட இன்னும் வாய்ப்புண்டு. ஆம், சந்துகளுக்கிடையேயும், மணலுக் குள்ளாகவும் தண்ணீர் ஊற்ற முடியும். அதேவிதமாக நமக்கு உபரியாக கிடைக்கும் நேரத்தை ஞானமாக பயன்படுத்துவதன் மூலம், நம் அன்றாட பரபரப்பான வாழ்வுக்கு மத்தியிலும் பயனுள்ள செயல்பாடுகளை சேர்த்துக் கொள்ள முடியும். காலம் என்னும் மணலில் அடிச் சுவடுகள் உட்கார்ந்த நிலையில் பதிக்கப்படுவதில்லை.

மத்தேயு இருபத்தைந்தாம் அதிகாரத்தில் தாலந்துகளின் உவமையில் அந்த வேலைக்காரர்கள் தாலந்துகளை எவ்விதமாக பயன் படுத்தினார்கள் என்பதைப் பற்றி கணக்கு ஒப்புவித்தார்கள். அதே போல் நாமும் தேவனுடைய ஈவான ஒவ்வொரு புதிய நாளையும் நாம் அதை எப்படி பயன்படுத்தினோம் என்று கணக்கொப்புவித்துக் கொண்டு, அந்த நாளை அந்தந்த இரவிலே கொடுத்தவருடைய பாதத்தில் வைத்து விட வேண்டும். நாம் நேர்மையாக இருந்தால் இந்த ஈவை நாம் எப்படி உக்கிராணத்துவம் செய்திருக்கிறோம் என்பதை குறித்து உண்மையில் வெட்கப்பட வேண்டியதாயிருக்கிறது. ஆயினும் ஒவ்வொரு புதிய நாளும் மறுபடியும் முயற்சி செய்வதற்கு மற்றுமொரு வாய்ப்பாக இருக்கிறது. இந்த விலை யேறப் பெற்ற ஈவை நாம் லேசாக எடுத்துக் கொள்ள வேண்டாம். ஏனென்றால், அது மீண்டும் ஒரு போதும் வராமல் போகலாம்.

# இன்று நேற்றைய தினத்தின் நாளையாக இருக்கும்

## *Today will be Yesterday Tomorrow*

***Willard Collins***

காலம் மிக வேகமாக கடந்து போகிறது. ஆகவே, இன்று என்பது நேற்றை நாளின் நாளையைப் போலாகி விடுகிறது. இந்த மாற்றத்திற்கு அதிக காலம் தேவைப்படுவதில்லை. எனவே, வாழ்க்கை மிகவும் குறுகியது.

சில நாட்களுக்கு முன்பு ஒரு சபை கட்டிடத்திற்கு முன்பாக " இன்று நேற்றைய தினத்தின் நாளையாக இருக்கும் " என்று எழுதப்பட்டிருந்ததைக் கண்டேன். இந்த உண்மையானது, நாம் ஒவ்வொருவரும் இன்று நன்றாக வாழத்தக்கதாக நம்மை தீர்மானிக்கச் செய்ய வேண்டும். ஆயினும், சிலர் நாளையைப் பற்றிய கவலையில் நிகழ்காலத்தை கெடுத்துக் கொள்கிறார்கள்.

இரண்டாம் உலகப் போரின் போது, எனக்கு பரிச்சயமானவரின் மனைவி தன் கணவனுடைய மனக்கிலேசத்திற்குக் காரணமாகிவிட்டாள். அந்நாட்களில் அமெரிக்க ராணுவத்தில் கட்டாய ஆள் சேர்ப்பு நடந்து கொண்டிருந்தது. எனவே அந்த பெண் தன் கணவனுக்கு எப்போது வேண்டு மானாலும் அழைப்பு வரலாம் என நினைத்துக் கொண்டிருந்தாள். எனவே, ஒவ்வொரு காலையிலும் எனக்கு பரிச்சயமான அந்த நபர் வேலைக்குச் செல்லும் போது, அவருடைய மனைவி அழுது, " நீங்கள் ராணுவத்திற்கு சென்று விடுவீர்கள், அதனால் உங்களுக்கு பல நாட்கள் காலை வணக்கம் சொல்வதற்கு எனக்கு வாய்ப்புக் கிடைக்காது " என்று சொன்னாள். ஒவ்வொரு நாள் காலையும் இவ்விதமாகவே கழிந்தன. வீட்டில் நிலவரம் இப்படி இருந்தபடியால், இவன் தானாகவே போய் ராணுவத்தில் சேர கிட்டத்தட்ட முடிவு செய்து விட்டான். கணவன் இல்லாமல் வாழ்க்கையை எப்படி நடத்துவது என்று மிகவும் துக்கப்பட்டாள். மேலும், அவள் தன் கணவனிடம், " நீங்கள் இராணுவத்திற்கு எந்த நாளிலும் அழைக்கப்படலாம், அந்த நாள் வரும்வரை நம் குடும்ப வாழ்வை நாம் அனுபவிக்கும்படி, ஒவ்வொரு நாளையும் நன்றாக வாழ விரும்புகிறேன் " என்றாள். ஆனால், ஆச்சரியம் என்னவென்றால் அந்த மனிதன் கடைசி வரை இராணுவத்திற்கு அழைக்கப்படவே இல்லை.

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு போதிக்கும் போது, ஒவ்வொரு நாளையும் நன்றாக வாழ்வதன் மதிப்பைப் போதித்தார். " ஆகையால், நாளைக்காகக் கவலைப்படாதிருங்கள்; நாளையத்தினம் தன்னுடையவை களுக்காகக் கவலைப்படும். அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுகள் போதும் என்றார் (மத். 6:34). பவுலும் இதே மையப் பொருளை தொடர்ந்து வலியுறுத்தி னார். " நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோட கூடிய ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் " என்று (பிலிப். 4:6).

ஒரு ஆயுள் காப்பீட்டு நிறுவனத்தின் தலைவர் என்பவர் " நாளை என்பது இன்று நம் வசமாகும் வரை நம்முடையதல்ல " என்று கூறுகிறார். இன்றைக்கான கடமையைச் செய்யுங்கள், இன்றே சோதனையைப் போராடி வெல்லுங்கள்; உங்களால் காண முடியாத காரியங்களை எதிர்நோக்கி வழிவிலகிப் போகாதீர்கள் அல்லது பெலவீனமடையாதீர்கள்.

ஜான் ரஸ்கின் என்பவர் ஒவ்வொரு நாளையும் நிறைவானதாக்குங்கள் என்று எழுதினார். மேலும், அவர், " ஒவ்வொரு நாளின் காலையும் உங்களுக்கு வாழ்வின் ஆரம்பமாக இருக்கட்டும், ஒவ்வொரு நாளிலும் சூரியன் மறைவது வாழ்க்கையின் முடிவாயிருக்கட்டும் " என்றார்.

**தன்னைத் தானே சோதித்தல்**

இன்று நேற்றைய நாளின் நாளையாக இருக்கிறபடியால், நாம் ஒவ்வொரு தினமும் தற்பரிசோதனை செய்து கொள்ள வேண்டும். நான் ஒரு முறை ஒரு வீட்டுச் சுவரில் தொங்கிக் கொண்டிருந்த கவிதையை பார்த்தேன். அந்தக் கவிதை அனுதின தற்பரிசோதனையின் தேவையை தெளிவாக போதிக்கிறது.

நான் என்னோடு வாழ வேண்டியதாயிருக்கிறது
அதை அறிய எனக்கு நானே தகுதியாயிருக்க வேண்டியதாயிருக்கிறது
நாட்கள் செல்ல, செல்ல பலமடையவும் என் கண்களால் என்னைக் காணவும் விரும்புகிறேன்.
மறையும் சூரியனோடு நிற்க நான் விரும்பவில்லை
நான் செய்த காரியங்களைக் குறித்து என்னை நானே வெறுக்கிறேன்
என்னை என்னிடமிருந்து ஒருபோதும் மறைக்க முடியாது
மற்றவர்களால் ஒருபோதும் பார்க்க முடியாத காரியங்களை என்னில் நான் பார்க்கிறேன்;
மற்றவர்களால் ஒருபோதும் அறிய முடியாத காரியங்களை என்னைப் பற்றி அறிகிறேன்;
என்னை நான் மறைக்கவே முடியாது
என்ன நடந்தாலும் நான் சுயமரியாதையும் மனச்சாட்சியும் உடையவனாக இருக்க வேண்டும்.

நம்மை நாம் அளப்பதற்கு தேவனுடைய சித்தமே நம் அளவுகோலாக இருக்க வேண்டும். தேவனுடைய சித்தத்தைப் பற்றி தம்முடைய சீஷர்களுக்கு கிறிஸ்து சொல்லும்போது இவ்விதம் கூறினார். " என்னை அனுப்பினவர் என்னுடனே கூட இருக்கிறார், பிதாவுக்குப் பிரியமானவைகளை நான் எப்பொழுதும் செய்கிறபடியால் அவர் என்னைத் தனியேயிருக்கவிடவில்லை என்று " (யோவான் 8:29).

# முக்கியமற்றவை, முக்கியமானவை, மிக முக்கியமானவை




நாம் முக்கியமற்ற, முக்கிய மான, மிக முக்கியமான காரியங் களை வேறுபடுத்திப் பார்க்க கற்றுக் கொள்ள வேண்டும். நம்மில் பலர் திசைமாறி சிறியவைகளை பெரிய வைகளாக்குகிறோம், பெரியவை களை சிறியவைகளாக்குகிறோம். இது சோக அலையை ஏற்படுத்து கிறது.

ஒரு பார்வையாளர் இவ்வித மாக விமர்சித்திருக்கிறார். " நவீன கால மனிதன் தன் வேலையை ஆராதிப்பவனாகவும், விளை யாட்டில் வேலை செய்கிறவனாக வும், ஆராதனையில் விளையாடு கிறவனாகவும் " இருப்பதாக விமர்சனம் செய்திருக்கிறார்.

உங்களை நீங்களே நன்றாக கவனியுங்கள். முக்கியமற்ற காரியங்கள் உங்கள் வாழ்க்கையில் ஆதிக்கம் செலுத்த நீங்கள் அனுமதிக்கிறீர்களா? மிக முக்கிய மான காரியங்களை விட முக்கிய மான காரியங்கள் உங்கள் வாழ்வில் முதன்மைபடுத்தப்படுகிறதா? மிக முக்கியமான காரியங்கள் கடை நிலைக்கு தள்ளப்படுகிறதா?





***DaltonKey***

நாம் எதைப்பற்றி பேசிக் கொண்டிருக்கிறோம்? நாம் அணிந் திருக்கும் உடையில் சிறு கறை என்பது முக்கியமற்றது; பாதுகாப் பான வருங்கால நிதி என்பது முக்கியமானது; ஜீவன் கர்த்தரிடம் உண்மையாயிருப்பது மிக முக்கிய மானது.

மேற்சொல்லப்பட்ட பிரச்சனை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தாலும், இதை விட இன்னும் அபாயகரமான பிரச்சனை இருக் கிறது. முக்கியமான காரியங்களுக் காக நம் ஆத்துமாவை அடகு வைக்குமளவுக்கு நெருங்கி விட்டோமா? ஆவியை விட மாம்சம் அதிகமாக முதன்மைப்படுத்தப் படும்போது, நித்திய ஜீவனுக்குப் பதிலாக தற்காலிகமான வாழ்வு வைக்கப்படும்போது, நித்தியத்திற்கு மேலாக நேரம் மதிக்கப்படும்போது நாம் நம் கவனத்திலிருந்து விலகி பேரழிவை நோக்கி பயணிக்கிறோம்.

# *The All - Important*

தேவனிடத்தில் உண்மையா யிருப்பதை விட அதிக முக்கிய மானது எதுவுமில்லை. இயேசு அதை எதிர்பார்க்கிறார்; சீஷத்துவத்திற்கு அது அவசியமாகிறது (மத். 16:24,25).



முதல் நூற்றாண்டு கிறிஸ்த வர்கள் அதற்காக தங்கள் உயிரை யே கொடுத்தார்கள் (வெளி. 2:10) சுய பாதுகாப்பு என்பது நம்முள் இயல் பாக இருக்கும் வல்லமையான ஒன்று. தாங்கள் வாழ்வதற்காக அடுத்தவர் களுக்கு தங்கள் கூர் நகங்களால் தீமை ஏற்படுத்தும் மிருகங்களை விட மேலானவர்கள். இந்த வாழ்க்கை யைத் தாண்டிப் பார்க்கும் திறனா லும், எதை முக்கியப்படுத்துவது என்ற அறிவாலும், முதன்மையான வைகளை முதன்மையாக வைக்க வேண்டுமென்ற ஞானத்தாலும் நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம்.



# பாவத்தின் அதிகப்படியான விலை

## The High cost of sin

*DayTon Keesee*

**பா**வத்தை லேசாக எடுத்துக் கொள்ளும் மெத்தனப் போக்கும், நியாயத்தையும், தண்டனையையும் தவிர்க்கும்படி வழக்கறிஞரின் வாதாடும் போக்கும், பலருடைய இருதயங்களை வஞ்சித்து விட்ட படியால், மனித இனத்தின் பெரும் பகுதி பொல்லாப்பைச் செய்ய

துணிந்து விட்டது (பிரசங்கி 8:11). இக்கட்டுரை மனித இனத்தின் சூழ்நிலையை நமக்கு விவரிக்கிறது.

நாம் நிச்சயமற்ற, நியாயமற்ற கடலில் நீந்திக் கொண்டிருக்கி றோம். ஒவ்வொரு நாளும் சில ஆத்துமாக்கள் சுட்டு வீழ்த்தப்படுகி றார்கள், அழிக்கப்படுகிறார்கள், தந் திரமாக பிடிக்கப்பட்டு தீங்கிழைக் கப்படுகிறார்கள், சம வயதினரால் பிரச்சனைக்குள்ளாகிறார்கள் அல்லது வீட்டில் ஏற்படும் சேதத்தால் அலக்கழிக்கப்படுகிறார்கள். வேலை நடக்கும் இடங்களில் பொறுப்பின்மை தலைவிரித்தாடு கிறது. அங்கே சிலர், கடமை செய் வதை விட விடுமுறை நாட்களைக் குறித்து கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். அவர்கள் தங்கள் உரிமைகளை தவறாகப் பயன்படுத்த விரும்புகிறார்கள். மேலும், ஒருவர் மீது ஒருவர் வழக்குத் தொடர்வதாக மிரட்டுகிறார்கள் (கொலோ. 22-25).

**உலகத்தைத் தட்டி எழுப்புங்கள்!**

பாவம் பாடாய்ப்படுத்துகிறது, காமக்களியாட்டம் விலைப்பட்டி யலை சுமந்து திரிகிறது! வாழ்க்கைப் பாதையில் இலவசத்தினால் சொகுசு வாழ்க்கை வாழ்பவர்கள் மனிதர்கள் போல் அல்ல மிருகங் களாக பிடிக்கப்பட்டு தங்கள் வாழ்க் கையை மாய்த்துக் கொள்கிறார்கள். இந்த ஆய்வு யூகத்தின் அடிப் படையில் அமைந்ததல்ல. யதார்த்த நிலைமை மற்றும் உண்மைத் தன்மையை அடிப்படையாக வைத்து அமைந்தது. ஆகவே, வானமும், பூமியும் ஒழிந்து போனாலும், ஒரு போதும் ஒழிந்து போகாத 'பிரமாணத்திற்கு செவிக் கொடுக்க வேண்டியது அவசியம் (மத். 24:35).

" நீங்கள் கர்த்தருக்கு விரோத மாய்ப் பாவம் செய்தவர்களாயிருப் பீர்கள், உங்கள் பாவம் உங்களைத் தொடர்ந்து பிடிக்கும் " (எண். 32:23). ஒருவன் வேலை செய்ய மனதில்ல திருந்தால் அவன் சாப்பிடவும் கூடாதென்று நாங்கள் உங்களி டத்தில் இருந்த போது உங்களுக்கு கட்டளையிட்டோமே (தெச. 3:10). இவர்கள் " துர்புத்தியுள்ள மனுஷர் கள், விசுவாச விஷயத்தில் பரீட்சைக்கு நில்லாதவர்கள். ஆனாலும், இவர்கள் அதிகமாய்ப் பலப்படுவதில்லை, அவ்விருவருடைய மதிகேடு எல்லா ருக்கும் வெளிப்பட்டது போல, இவர் களுடைய மதிகேடும் வெளிப்படும். (2 தீமோ. 3:8,9). " மோசம், போகாதி ருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப் பான்; தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்திய ஜீவனை அறுப்பான் " (கலா. 6:7,8).

வேத வசனங்கள் பாவத்தின் மீதும், பாவிகளின் மீதும் விதிக்கும் தண்டனைகளை எண்ணி நாம் விழித்துக் கொள்வோமாக, எனவே, நாம் தம்முடைய குமாரன் மூலமாக ஆத்துமாக்களை இரட்சிக்கும் தேவ னுடைய கிருபையையும், நன்மை யையும் தெரிந்து கொள்ள வேண் டும் (1 யோவான் 4:14; எபி. 5:8; மாற்கு 16:15; யோவான் 14:15; மத். 28:18-20) வசனங்களை கவனமாக வாசித்துத் தெளிவடைவது நல்லது.

# உங்கள் வேலையோடு உங்களை நிறுத்திக் கொள்ளாதீர்கள்

## Don't Limit Yourself To your Business

*DayTon Keesee*

**முன்னுரை :**

1. பிலிப்பியர் 2:1-4
2. வேதாகமம் நாம் நம் சொந்த அலுவல்களைப் பார்க்க வேண்டுமென்று சொல்கிறது. (1 தெச. 4:11; 2தெச. 3:11; 1 தீமோ. 5:13; 1 பேதுரு 4:15).
3. ஆனால், நாம் பெரும்பாலும் இந்த வேதாகம போதகத்தின் பொருளைச் சிதைத்து விடுகிறோம்.

A. நம் அயலகத்தார் அடிபட்டால் கூட அதைக் கண்டுகொள்ளாமல் நம் வேலையை மட்டும் பார்த்துக்கொள்கிறோம்.

B. ஒரு சகோதரன் பாவம் செய்யும் போது நாம் தலையிட்டு அதைத் தடுக்காமல் அவனை பாவம் செய்யவிட்டு, அவனுடைய ஆத்துமாவை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துவிடுகிறோம். (அது நம்முடைய வேலை அல்ல என்று நாம் அப்படிச் செய்கிறோம்)

4. இந்த வசனப்பகுதியில் பவுல் ஓர் உண்மையான கிறிஸ்தவன் தன்னுடைய வேலையோடு தனக்கு எல்லையை வகுத்துக் கொள்ளமாட்டான் என்று கூறுகிறார். அவன் கீழ்க்காணும் காரியங்களினிமித்தம் அப்படிச் செய்யமாட்டான்.

**I நாம் " கிறிஸ்துவுக்குள் " அபரிதமாக ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம் - வசனம்**

A. நம்மால் முடியாத போது, நம் வேலைகளில் அக்கறை கொண்டவரால் நாம் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம். இந்த ஆசீர்வாதங்கள் கீழ்கண்டவைகளை உள்ளடக்கியது.

1. உற்சாகம் " கிறிஸ்துவுக்குள் " - ரோமர் 6:3,4

   பாதுகாப்பு " தேவனுடைய வல்லமையால் "
2. அன்பின் ஆறுதல் - நெருக்கடியான நேரங்களிலும் கூட நம் எல்லா உபத்திரவங்களிலும் ஆறுதல் கிடைக்கிறது (2கொரி. 1:3)
3. ஆவியின் ஐக்கியம் - அப். 5:32 மற்றும் ரோமர் 8:26 வசனங்களில் "ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல் செய்கிறார் " என்பதைக் காண்கிறோம்.

II. நாம் அபரிதமாக ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறபடியால், நாம் " அதே அன்பை " நம்முடையதாக்கிக் கொள்ள வேண்டும் (வசனம் 2). அதன் மூலம் பவுலின் சந்தோஷத்தை பூரணப்படுத்த வேண்டும்.

A. அதன் பொருள், " சுயநலத்தையும், வீண் பெருமையையும்" நீக்கிப் போடுவதாகும் (பிலி. 2:3; ரோமர் 11:20)

B. வேறுவகையாகப் பார்த்தால், அதன் பொருள் மனத்தாழ்மையாக நடந்து கொள்வதாகும். மத். 11:28 லிருந்து பார்க்க

1. "ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக" எண்ணுவது (வச. 3)

2. "பிறருக்கானவைகளை நோக்குவது" (வசனம் 4)

a. "நமக்காக"ப் பார்க்க வேண்டும். ஆம்

b. அதே வேளையில், பிறர் பற்றிய காரியங்களும் என் மனதில் இருக்க வேண்டும்.

1. அது அவர்களுக்கான அங்கீகாரத்தை தேவனுக்கு முன்பாக ஏற்றுக் கொள்வதையும் உள்ளடக்கம்.

2. அது அவர்களை வாழ்த்துவதையும், அவர்களைப் பற்றித் தெரிந்து கொள்வதையும் உள்ளடக்கும்.

C. கிறிஸ்தவ மார்க்கம் மற்றவர்களுடைய நலனுக்கு முன்னுரிமை தரும் மார்க்கம்

1. கிறிஸ்து அதைச் செய்தார் (பிலிப். 2:5,11)

2. மூப்பர்கள் அதைச் செய்ய வேண்டும் (2 தீமோ. 4:1,2; 1 தீமோத். 5:20)

3. பிரசங்கியார்கள் அதைச் செய்ய வேண்டும் (2 தீமோ. 4:1,2; 1 தீமோத். 5:20)

4. எல்லா கிறிஸ்தவர்களும் அதைச் செய்ய வேண்டும் (பிலிப். 2:4; 1 யோ. 3:17; கலா. 6:10; ஆதி. 4:9 (சகோதரனுடைய காவலாளி)

**முடிவுரை :**

1. மற்றவர்களுடைய விவகாரங்களில் அதிகமாக நாம் தலையிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்பது உண்மைதான்.

2. ஆனால், மற்றவர்களோடு நான் ஆவிக்குரிய குடும்பத்தில் பிரவேசிக்கும் போது, ஒரு விதத்தில் நான் என் சகோதரனுடைய காவலாளி ஆகிறேன்.

3. உதாரணம் : ஒரு ஆணும், பெண்ணும் திருமணம் செய்யும் போது ஒருவருடைய வேலை மற்றவருடையதாகிறது. அதேபோல், தேவனுடைய ராஜ்யத்தில் நாம் ஒன்றிணைக்கப்பட்டிருக்கிறபடியால், என் சகோதரனுடைய வேலை ஓரளவுக்கு என்னுடைய வேலையாகிறது.

# கர்த்தர் வெறுக்கும் ஏழு காரியங்கள்

## SEVEN THINGS THE LORD HATES

*J.C. Choate*

**முன்னுரை :**

1. தேவனால் வெறுக்க முடியும் என்பது உங்களுக்குத் தெரியுமா? அவரால் அன்பு கூரவும் முடியும், அதே நேரத்தில் வெறுக்கவும் முடியும்.
2. இங்கே வெறுப்பு என்னும் வார்த்தை அருவெருப்பது, அருவருப்பானவை வைகளை அறவே வெறுப்பது என்று பொருள்படுகிறது.
3. நிச்சயமாகவே கர்த்தர் வெறுக்கக்கூடிய காரியங்கள் ஏழுக்கும் மேலிருக்கும், ஆனால், ஏழு என்பது பெரும்பாலும் பூரணத்தைக் குறிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது.
4. நிச்சயமாகவே இங்கே குறிப்பிடப்பட்டிருக்கும் ஏழு காரியங்கள் கர்த்தர் வெறுக்கும் மிக மட்டமான இழிவான காரியங்களாயிருக்கிறது.
5. தேவன் இவைகளை வெறுத்தால், இவைகளின் மீது நம்முடைய மனநிலை எப்படியிருக்க வேண்டும்?

**விவாதம் :**

**I பெருமையுள்ள பார்வை அல்லது மேட்டிமையான கண்**

1. இது ஒருவர் மற்றவர்களை விட தன்னை மேன்மையாகக் காட்டிக் கொள்வதாகும். மேலும், இது முதன்மையாயிருக்க விரும்புவதையும், கர்வமாகவும், இறுமாப்பாக இருப்பதையும் குறிக்கும்.
2. இது வேதாகமத்தில் எப்போதும் மோசமான ரீதியில்தான் பயன்படுத்தப் பட்டிருக்கிறது. (2 தீமோ. 3:2; யாக். 4:6; 1 பேதுரு 55:5).
3. இதற்கு மாறாக, நாம் தாழ்மையாக இருக்க வேண்டுமென்று வேதாகமம் போதிக்கிறது (மத். 5:5).

**II பொய் நாவு**

1. இது மெய்யற்ற தகவலை வஞ்சிக்கும் உள்நோக்கத்தில் சொல்வதாகும்.
2. பொய்யர் அனைவரும் அக்கினியும், கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்று வேதாகமம் சொல்கிறது (வெளி. 21:8)

3. பொய்யர் மீது கடுமையான தண்டனை விதிக்கப்படுகிறது, நம்பிக்கை அழிக்கப்படும்போது, உறவைக் கட்டி எழுப்புவதற்கு அடித்தளமே இல்லாமல் போய்விடுகிறது.
4. பொய்க்கு எதிர்ப்பதம் உண்மை, நேர்மை, உத்தமம் போன்றவை
5. தேவனுடைய வசனமே சத்தியமாயிருக்கிறது (யோ. 17:17); இந்த சத்தியம் தான் நம்மை நித்தியமாக இரட்சிக்கிறது (யோவான் 8:32).

**III. குற்றமற்றவர்களுடைய இரத்தம் சிந்துங்கை**

1. இது பகை உணர்வு, பழிவாங்குதல் மற்றும் போர்காரணமாகச் செய்யப் படும் கொலையாகும்.
2. மாம்சத்தின் கிரியையாக இந்த கொலை காணப்படுகிறது (கலா. 5:21)
3. கொலை பாதகர் நரகத்தில் தூக்கி எறியப்படுவார்கள் (வெளி. 21:8)

**IV. துராலோசனையைப் பிணைக்கும் இருதயம்**

1. இது சதா தீமையானவைகளை சிந்தித்து, அவைகளைச் செய்ய திட்டமிட்டுக் கொண்டிருக்கும் துன்மார்க்கமான இருதயத்தைக் குறிக்கிறது (மத். 15:19,20)
2. நாம் சுத்த இருதயங்களை உடையவர்களாக இருக்க வேண்டுமென்று தேவன் நம்மிடமிருந்து எதிர்பார்க்கிறார் (மத். 5:8)

**V. தீங்கு செய்வதற்கு விரைந்தோடுங்கால்**

1. இது பிரச்சனைகளை உண்டு பண்ணுவதற்கு, பிரிவினை மற்றும் பகை உணர்வைத் தூண்டுவதற்கு ஓடித்திரியும் ஒருவரைக் குறிக்கிறது.
2. இது வம்பளப்பு மற்றும் மற்றவர்களுடைய விவகாரங்களில் தலையிடுவதன் மூலம் செய்யப்படுகிறது (அப். 13:10).
3. நாம் சமாதானம் பண்ணுகிறவர்களாக இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் (மத். 5:9).

**VI. அபத்தம் பேசும் பொய்ச்சாட்சி**

1. இது ஒருவர் அதிகாரப்பூர்வமாக மற்றவருக்கு விரோதமாக பொய்ச்சாட்சி சொல்வதைக் குறிக்கிறது.
2. இது பத்துக் கட்டளைகளில் ஒன்றை மீறுவதாகும் (யாத். 20:10)
3. இவ்வகையான பாவம் ஒருவருடைய இருதயத்திலிருந்து புறப்பட்டு வருகிறது என்று இயேசு சொல்கிறார் (மத். 15:19,20).
4. நாம் தேவனுடைய ஜனங்களாயிருப்பதற்கு, நம் வார்த்தைகளைக் காத்துக்கொள்ள வேண்டும் (மத். 5:37).

### VII. சகோதரருக்குள்ளே விரோதத்தை உண்டு பண்ணுதல்

1. இந்த நபர் பிரிவினைகளை, சண்டைகளை, பிரச்சனைகளை உண்டு பண்ணுகிறார்.
2. நாம் எல்லோரும் ஒன்றாயிருக்கும்படி கிறிஸ்து ஜெபித்தார் (யோ. 17:20,21)
3. நமக்குள்ளே பிரிவினைகள் ஆகாது என்று பவுல் சொன்னார் (1 கொரி. 1:10)
4. பிரிவினைகளை உண்டாக்குகிறவர்களைக் குறித்து அவர்களை விட்டு விலக வேண்டுமென்று பவுல் சொன்னார் (ரோமர் 16:17,18)

**முடிவுரை :**

1. இந்தக் காரியங்களை தேவன் வெறுக்கிறபடியால், இத்தகைய காரியங்களில் ஒருவன் ஈடுபடுவது தேவனுக்கு விரோதமானது.
2. இப்படிப்பட்டவர்கள் மனந்திரும்பாவிட்டால் இழந்து போவார்கள்.
3. இத்தகைய தீமைகளிலிருந்து நம்மை நாம் விலக்கிக் காத்துக் கொண்டு, தேவன் வெறுப்பது போல அவைகளை நாமும் வெறுக்க வேண்டும்.

## நாம் எப்படி இரட்சிக்கப்பட முடியும்?

"*உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார்*" (யோவான் 3:17). இயேசு "*நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்*" என்று சொன்னார் (யோவான் 14:6). "*நானே அவர் என்று நீங்கள் விசுவாசியா விட்டால் உங்கள் பாவங்களிலே சாவீர்கள்*" என்றார் (யோவான் 8:24).

ஆகையால், நீங்கள் சரீர இச்சைகளின்படி பாவத்திற்குக் கீழ்ப் படியத்தக்கதாக, சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக. ...கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக் கிறீர்களா? ...நாம் இனிப் பாவத்துக்கு ஊழியஞ் செய்யாதபடிக்கு பாவ சரீரம் ஒழிந்துபோகும் பொருட்டாக நம்முடைய பழைய மனுஷன் அவரோட கூடச் சிலுவையில் அறையப்பட்டதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 6).

இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷம் என்பது அவர் நமக்காக மரித்து, அடக்கம் பண்ணப்பட்டு உயிர்த்தெழுந்தார் என்பதாகும். நாம் இயேசு கிறிஸ்துவினிடத்தில் பாவ மன்னிப்புக்காக திரும்பும்போது மட்டுமே நமக்கு இரட்சிப்பு உண்டாகிறது.

# இல்லம்

# Home

Owen Cosgrove



சில வேளைகளில் காலத்தால் அழியாத ஒரு வரி அந்த காவியத்தையே காலத்தால் அழியாத ஒன்றாக மாற்றிவிடுகிறது. ராபர்ட் பிராஸ்ட்டின் " வாடகை மனிதனின் மரணம் " என்கிற படைப்பில் முன்னாள் வேலைக்காரனான சீலாஸ் தான் முன்பு வேலை செய்த பண்ணைக்கு மீண்டும் திரும்புகிறான். பொருளாதார ரீதியாக அவன் உடைந்த நிலையிலும், சரீரப் பிரகாரமாக சோர்வடைந்த நிலையிலும் இவ்விதமாகப் பாடினார்.

" ....பெருமையுடன் திரும்பிப் பார்ப்ப தற்கு ஒன்றுமில்லை, நம்பிக்கையுடன் எதிர்நோக்குவ தற்கும் ஒன்றுமில்லை... " என்று

அவனுடைய முந்தைய எஜமான் அவனிடம் மென்மையாக நடந்து கொண்டார். சீலாஸ் பண்ணையில் வைக்கோல் காய வைத்துக்கொண்டிருக்கும்போது சம்பள உயர்வு காரணமாக ஏற்பட்ட பிரச்சனையால் தன்னுடைய எஜமானை விட்டுப் போய்விட்டான். இப்போது தன்னுடைய நம்பிக்கையற்ற நிலையில் பதிமூன்று மைல்கள் தூரத்திலுள்ள தன்னுடைய பணக்கார சகோதரனுடைய வீட்டிற்குச் செல்லாமல் தான் வேலை செய்த பண்ணைக்கு திரும்பி வருகின்றான். அதன் பின்பு ராபர்ட் பிராஸ்ட் என்னும் கவிஞர் நம் மனதை வாட்டும் மறக்க முடியாத வலிமை மிகு வரியை நமக்கு எழுதிக் கொடுத்துள்ளார். " இல்லம் என்பது நீங்கள் அங்கே போகும்போது, அவர்கள் உங்களை உள்ளே அழைத்துக் கொள்ளும் இடமாயிருக்கிறது ".

அந்த கெட்ட குமாரனுக்கு இன்னுமொரு வாய்ப்பு கொடுக்கப்பட்டிருந்தது. தெரிந்தெடுக்கும் வாய்ப்புகளெல்லாம் அவனிடம் தீர்ந்துவிட்டது. நம்பிக்கையற்ற நிலையில் அவன் வீடு நோக்கி புறப்பட்டான். அவனுக்கு வீடு இல்லாமல் இருந்திருந்தால் என்னவாயிருக்கும்? அவனை வாழ்த்துவதற்கும் உள்ளே அழைத்துச் செல்வதற்கும் தகப்பன் இல்லாதிருந்திருந்தால் என்னவாயிருக்கும்?.

இவ்வுலகில் எத்தனை பேர் தஞ்சம் புகுவதற்கு இடமில்லாமல் இருக்கிறார்கள்? பல வருடங்களுக்கு முன்பாக ஈமச்சடங்கை நடத்துகிற ஒருவரால் நான் வாழ்ந்த நகரத்தில் ஏழைகளின் ஈமச்சடங்கை நடத்தும்படி அழைக்கப்பட்டேன். அந்த ஏழைகள் தங்கள் பகுதியில் உள்ள கல்லறைத் தோட்டத்தின் மிகவும் மலிவான சவப்பெட்டியில் அடக்கம் பண்ணப்பட்டார்கள். அந்தக் கல்லறை தோட்டத்தில் அவர்களுடைய குடும்பத்திற்கென்று தனியாக இடம் இருக்கவில்லை. தனித்தனி கல்லறைகளே இருந்தன.

நான் நடத்தின சில அடக்க ஆராதனைகளில் இறந்து போனவருக்குத் தெரிந்த ஒருவர் கூட இல்லாமல் அடக்க ஆராதனையை நடத்தியிருக்கிறேன். நான், குழிதோண்டுகிறவர்கள், ஈமச்சடங்கு செய்யும் நிறுவனத்தின் பணியாளர்கள் ஆகியோர் சேர்ந்து, சவப்பெட்டியை கொண்டுச் செல்லும் வண்டியிலிருந்து சவப்பெட்டியை கல்லறைக்கு கொண்டு சென்றோம். மரணச் சான்றிதழில் நிரந்தர முகவரி தெரியவில்லை என்று எழுதப்பட்டிருந்தது.

நம் இல்லங்களுக்காக, நம் நினைவுகளுக்காக, நம் வேர்களுக்காக, நம் பெற்றோர்களுக்காக கிறிஸ்துவிலும், சரீரத்திலும் நாம் பெற்றிருக்கும் சகோதர, சகோதரிகளுக்காக, நம் பள்ளிகளுக்குக்காக, பொது நிறுவனங்களுக்காக, நம் நண்பர்களுக்காக, குடும்பங்களுக்காக, அயலகத்தாருக்காக, நம் கலாச்சாரத்துக்காக, நம் வாழ்க்கை அஸ்திபாரங்களுக்காக தேவனுக்கு நன்றிச் செலுத்த வேண்டும். கடந்த காலத்தை நாம் திருப்தியோடு திரும்பிப் பார்க்கவும், எதிர்காலத்தை நம்பிக்கையோடு எதிர்நோக்கவும் முடிகிறபடியால் தேவனை ஸ்தோத்தரியுங்கள். தங்கள் பிள்ளைகளை நேசித்து, அவர்களைப் போஷிக்கும்படியாக கடுமையாக உழைக்கிற தகப்பன்மார்களுக்காக, தாய்மார்களுக்காக அவரை ஸ்தோத்தரியுங்கள். தேவன் நமக்கு இந்த உலகிலும், வரப் போகிற உலகிலும் தந்திருக்கிற இல்லத்திற்காக தேவனை ஸ்தோத்தரியுங்கள். வீடானது எப்படி இருக்க வேண்டுமோ அப்படிப்பட்ட வீட்டை எப்படியாக்குவது என்று சொல்கின்ற புத்தகத்திற்காக அவருக்கு நன்றி செலுத்துங்கள்.

பிராஸ்ட் என்பவர் சொல்லும் போது "வீடு என்பது நீங்கள் அதைப் பெற்றுக்கொள்வதற்கு தகுதியாயிருக்கவேண்டிய ஒன்றல்ல" என்று சொல்கிறார். அது அப்படியாக இருக்கலாம். எனது பெற்றோர்கள் எனக்குத் தந்திருக்கிற வீட்டின் மதிப்பை நான் அதிகமாக உணர்கிறேன். அதுபோல் நான் என் பிள்ளைகளுக்குக் கொடுத்திருக்கிற வீடு தேவனுக்குப் பிரியமாயிருக்கும் என்று நம்புகிறேன். நம் இருதயம் எங்கேயோ அங்கே நம் வீடு இருக்கிறது. நம் நம்பிக்கை எங்கே இருக்கிறதோ அங்கே வீடு இருக்கிறது. நம் வீடு போன்று எங்குமே இடமில்லை.

# கணவன்களும், மனைவிகளும்



# Husbands and Wives

**Clarence DeLoach, Jr.**

*"அவர்களும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள் கிறவர்களானபடியால்...."* (I பேதுரு 3:7)

கணவன் மனைவி உறவு பற்றிய அருமையான வசனப்பகுதி புதிய ஏற்பாட்டில் (I பேதுரு 3:1-7) ல் காணப்படுகிறது. இங்கே பேதுரு மண வாழ்க்கை மகிழ்ச்சியாயிருப்பதற்கு அவசியமான மூன்று குணங்களின் மீது கவனம் செலுத்துகிறார்.

- கீழ்ப்படிதல்
- அக்கறை
- ஒத்துழைப்பு

கணவன்மார்கள் நான்கு விதமான பொறுப்புகளை ஏற்றுக் கொள்ளும் படி நினைப்பூட்டப்படுகிறார்கள்.

| | | |
|---|---|---|
| 1. சரீரப்பிரகாரமான காரியங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் | : | அவர்களுடனே வாழ்ந்து |
| 2. அறிவைப் பகிர்ந்து கொள்ளுதல் | : | விவேகத்தோடு |
| 3. உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளுதல் | : | அவர்களுக்குச் செய்ய வேண்டிய கனத்தைச் செய்யுங்கள் |
| 4. ஆவிக்குரிய காரியங்களைப் பகிர்ந்து கொள்ளுதல் | : | உங்கள் ஜெபங்களுக்குத் தடை வராதபடிக்கு. |

ஒரு வெற்றிகரமான, திருப்திகரமான திருமண வாழ்க்கைக்குத் திறவுகோல் இருவர் தங்கள் மனதையும், இருதயத்தையும், சரீரத்தையும், வாழ்க்கையையும் ஒருவருக்காக ஒருவர் விட்டுக் கொடுத்து அர்ப்பணிப்புடன் வாழ்வது தான்.

கிறிஸ்தவ குடும்பத்தில் கணவன்களும், மனைவிகளும் நித்திய ஜீவனாகிய கிருபையைச் சுதந்தரித்துக் கொள்ளுகிறவர்களானபடியால், இருவருமே கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படிகிறது போல ஒருவருக்கொருவர் கீழ்ப் படியும் போது திருமணம் ஒரு வளமான அனுபவமாகிறது.

பேதுருவின் வார்த்தைகளை அடிப்படையாக வைத்து கீழ்க்காணும் கேள்விகளுக்கு பதில் அளிப்பதன் மூலமாக உங்கள் திருமணத்தின் உண்மை நிலையை அறிந்து கொள்ளுங்கள்.

1. பரலோகம் போவதற்கான என்னுடைய திருமணப் பங்காளரின் முயற்சிக்கு உதவியாயிருக்கிறேனா அல்லது தீங்கு விளைவிக்கிறேனா?
2. என் வாழ்க்கைத் துணையின் ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஆரோக்கியமான சூழ்நிலையை உருவாக்கிக் கொடுக்கிறேனா?
3. ஒவ்வொருவருடைய குணம், ரசனை போன்றவைகளைப் புரிந்து கொள்வதில் வளர்கிறோமா?
4. என் வாழ்க்கைத் துணையின் உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுக்க கற்றுக் கொள்கிறேனா அல்லது வாழ்க்கைத்துணையை அலட்சியப்படுத்து கிறேனா?
5. திருமணம் மண வாழ்க்கையை வளமாக்குகிறதா அல்லது கண்ணியாக மாற்றிவிட்டதா - இவ்விரண்டில் ஏதோ ஒன்றிற்கு நானே காரணமாகி விட்டேனா?

மேற்கண்ட ஆவிக்குரிய பட்டியலின்படி உங்கள் திருமணம் எப்படி இருக்கிறதென்பதை நிதானியுங்கள்.

## நாம் அழைக்கப்பட்டவர்கள்

1. அவர் நம்மை அந்தகாரத்தினின்று நம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு அழைத்திருக்கிறார் (1 பேதுரு 2:9)
2. நாம் கிறிஸ்துவின் அடிச்சுவடுகளைப் பின்பற்றும்படியாக அழைக்கப்பட்டிருக்கிறோம் (1 பேதுரு 2:21)
3. நாம் ஆசீர்வாதத்தைச் சுதந்தரித்துக் கொள்ளும்படி அழைக்கப்பட்டிருக்கிறோம் (1 பேதுரு 3:9)
4. நாம் நம் நடக்கையிலும், பேச்சிலும் பரிசுத்தமாயிருக்கும்படி அழைக்கப்பட்டிருக் கிறோம் (1 பேதுரு 1:15)
5. தேவன் நம்மை கிறிஸ்து இயேசுவுக்குள் தமது நித்திய மகிமைக்கு அழைத்திருக்கிறார் (1 பேதுரு 5:10)
6. எனவே, நாம் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து கொள்வோம் (எபே. 4:1)

# நிலை மாறும் யோசபாத்

## Jumping Jehoshaphat

*Ancil Jenkins*

யோசபாத் ராஜா இஸ்ரவேலின் இராஜாவாகிய ஆகாபை நட்பின் அடிப்படையில் சந்தித்தான் (2 நாளா 18). இது விளங்காத ஒன்று. ஏனென்றால், யோசபாத் ஒரு நல்ல மனிதன். ஆனால், ஆகாப் முற்றிலும் கெட்டுப்போனவன்.

அங்கே ஆகாப், சீரியர்களால் கைப்பற்றப்பட்ட இஸ்ரவேலின் வட பகுதியில் அமைந்த கீலேயாத்தின் ராமோத்தை விடுவிப்பதில் தனக்கு உதவுமாறு யோசபாத்தை கேட்டுக் கொண்டான். ஆகாப் தேவனோடு நெருக்கமாக இருப்பவர்களோடு நெருக்கத்தை ஏற்படுத்திக் கொள்வதின் மதிப்பை அறிந்திருந்தான். அங்கே, யோசபாத் ஆகாபின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டான். ஆனால், அவனுடைய மனச்சாட்சி ஒட்டுமொத்தமாக ஒத்துக் கொள்ளவில்லை. எனவே, அவன் கர்த்தருடைய வார்த்தையை விசாரித்து அறிய வேண்டுமென்று சொன்னான்.

பாகாலின் நானூறு தீர்க்கதரிசிகள், " போம் ", தேவன், ராஜாவின் கையில் அதை ஒப்புக்கொடுப்பார் என்றார்கள். ஆனால், யோசபாத்தின் மனச்சாட்சி அதற்குச் சம்மதியாதபடியால், கர்த்தருடைய தீர்க்கதரிசியின் வார்த்தை வேண்டுமென்று வலியுறுத்தினான். மிகாயா சிறையிலிருந்து கொண்டு வரப்பட்டு ஆலோசனைச் சொல்லும்படியாக கேட்டுக் கொள்ளப்பட்டான். அதற்கு அவன் " இல்லை, போக வேண்டாம்" உங்கள் சேனை முறியடிக்கப்பட்டு ஆகாப் கொல்லப்படுவான் என்றான்.

ஆனால், அவர்கள் சென்றார்கள்! முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, ஆகாப் சாதாரண போர்ச்சேவகன் போல் வேஷம் போட்டான். ஆனால், ஒரு சீரியர் போர்ச்சேவகன் நினையாமல் வில்லை நாணேற்றி எய்தான். அது ஆகாபின் கவசத்தின் சந்துக்கிடையில் பட்டது; அவன் செத்து மடிந்தான். இது ஒருவர் தேவனிடத்திலிருந்து தன்னை ஒளித்துக் கொள்ள முடியாது என்பதை நிரூபித்தது. இந்த மரணம் ஏதோ எதேச்சையாக நடந்தது போல் தெரியாமல் தேவனுடைய முன்னறிவால் நடந்தது போல் தான் தெரிகிறது.

ராஜா யோசபாத் சமாதானத்தோடே திரும்பி சென்றான். அப்பொழுது தீர்க்கதரிசியாகிய யெகூ, தாக்கத்தை ஏற்படுத்தும் கேள்வியுடன் அவனை சந்தித்தான். துன்மார்க்கனுக்கு துணை நின்று, கர்த்தரைப் பகைக்கிறவர்களை நீர்

சிநேகிக்கலாமா? என்று கேட்டான் (2 நாளா 19:2). இதே கருத்தை மனதில் கொண்டவராகத்தான் 2 கொரிந்தியர் நிருபத்தை எழுதிய பவுலடியார், அந்நிய நுகத்திலே அசுவிவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக என்று எச்சரித்தார் (2 கொரி. 6:14).

கர்த்தருடைய ஒரு தீர்க்கதரிசி பாகாலின் நானூறு தீர்க்கதரிசிகளை விட மேலானவர் என்பதை இச் சம்பவம் நமக்கு எடுத்துக் காட்டுகிறது. அத்தோடு, சத்தியத்தை தவிர வேறொன்றறையும் பிரசங்கிக்காத பிரசங்கியார்களின் மதிப்பையும் உயர்த்திக்காட்டுகிறது.

## நான் விரும்பினால்

**நான் விரும்பினால் :** உலகத்திலேயே இந்த சபையை எழுச்சியுள்ள, கிரியை செய்கிற சபையாக மாற்ற உதவி செய்ய முடியும்.

**நான் விரும்பினால் :** சுகவீனமாக அல்லது வீட்டில் முடங்கிக் கிடக்கிற சபை அங்கத்தினர்களை போய் சந்திக்கவும், அவர்களுக்கு உதவ வேறு வழிகளை கண்டுபிடிக்கவும் முடியும்.

**நான் விரும்பினால் :** வேதபாட வகுப்புகளில் தவறாமல் பங்கேற்று மற்றவர்களையும் அதே போல் செய்ய உற்சாகப்படுத்த முடியும்.

**நான் விரும்பினால் :** ஆராதனையில் அதிக பக்தியை வெளிப்படுத்தி சேவை செய்வதினால் கிடைக்கும் அதிக நன்மையைப் பெற்றுக் கொள்ள முடியும்.

**நான் விரும்பினால் :** சத்தியம் என்னுடைய சில பெலவீனங்களை வெளிப்படுத்தும் போது, அதன் மீது என்னுடைய கோபத்தை வெளிப்படுத்தாதபடி பிரசங்கத்திலிருந்து அதிக நன்மையைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**நான் விரும்பினால் :** கிறிஸ்துவைப் பற்றியும், அவருடைய சபையைப் பற்றியும் பிறரிடம் எடுத்துரைத்து அவர்களை கிறிஸ்துவினிடத்தில் வழி நடத்த முடியும்.

நிச்சயமாகவே இவைகள் எல்லாமே நான் எதைச் செய்ய விரும்புகிறேனோ அதைச் சார்ந்து தான் அமையும்! நான் உண்மையாகவே விரும்பினால் எல்லாவற்றிலும் சிறந்தவருக்கு ஒரு கனமான ஊழியக்காரனாயிருக்க முடியும்.

# பவுலின் கடைசி நாட்கள்

## Paul's Last days

*J.C. Choate*



**ந**ம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு அடுத்த படியாக, புதிய ஏற்பாட்டில் எல்லோராலும் நன்கு அறியப்பட்டவர் பவுல். அவர் புதிய ஏற்பாட்டின் வரலாற்றுப் புத்தகமாகிய அப்போஸ்தலருடைய நடபடிகளில் முக்கியப் பங்கை வகிக்கிறார். அவர் வேறு எந்த ஒரு எழுத்தாளரையும் விட சபைகளுக்கு அதிக நிருபங்களை எழுதியிருக்கிறார். அவர் வேத மாணாக்கர் எல்லோருக்கும் பிடித்தமானவர். அவர் தன்னுடைய வாழ்க்கையிலும், தேவ ஆவியினால் ஏவப்பட்டு எழுதியவைகளிலும் கிறிஸ்துவைப் பிரதிபலித்தார்.

பவுலின் இரண்டாவது மற்றும் மூன்றாவது நற்செய்திப் பிரயாணங்களில் மருத்துவராகிய லூக்கா பவுலோடு பிரயாணித்தார். பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதின இரண்டாம் நிருபத்தில் " லூக்கா மாத்திரம் என்னோடு இருக்கிறான் " என்று எழுதினார். அதன் பொருள் பவுல் தன்னுடைய கடைசி நாட்களை ரோமாபுரி சிறைச்சாலையில் கழித்த போது லூக்கா அவரோடு கூட இருந்தார்.

ரோமாபுரியில் பேதுருவும், பவுலும் ரோமக் கொடுங்கோல் சக்கரவர்த்தியாகிய நீரோவால் கொல்லப்பட்டார்கள் என்று வரலாறு சுட்டிக் காட்டுகிறது. " பல வேத மாணவர்கள் லூக்கா ஏன் பவுலுடைய மரணத்தின் சூழ்நிலைகளை பதிவு செய்யவில்லை என்று ஆச்சரியப்படுகிறார்கள். பவுலின் மரணத்தைப் பற்றிச் சொல்வதற்குப் பதிலாக லூக்கா அப்போஸ்தலருடைய நடபடிகள் புத்தகத்தை சந்தோஷமாக முடிக்கிறார். பின்பு பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே இரண்டு வருஷ முழுவதும் தங்கி, தன்னிடத்தில் வந்த யாவரையும் ஏற்றுக்கொண்டு, மிகுந்த தைரியத்துடனே தடையில்லாமல், தேவனுடைய ராஜ்யத்தைக் குறித்துப் பிரசங்கித்து கர்த்தராகிய இயேசுகிறிதுவைப் பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்தான் " (அப். 28:30,31) என்று எழுதினார்.

ரோம அரசாங்கம் பவுல் தனக்காக வாடகைக்கு வாங்கியிருந்த வீட்டிலே தங்குவதற்கு அனுமதித்தது. யூதர்கள் பவுல் மீது சாட்டிய நிரூபிக்கப்படாத குற்றங்களினிமித்தம் ரோமர்கள் அவரை ஓர் அரசியல் கைதியாக மட்டும் பாவித்தனர் என்பதில் எந்த ஒரு சந்தேகமுமில்லை. கிறிஸ்தவம் இன்று எந்த ஒரு அரசாங்கத்திற்கும் அச்சுறுத்தலாயிருக்கவில்லை. பவுல் எந்த கிறிஸ்தவர்களுக்குப் போதித்தாரோ அந்த கிறிஸ்தவர்கள் அவர் சிறையில் இருந்த போது அவரைப் போய் சந்தித்தார்கள் என்பதை லூக்கா எடுத்துரைக்கிறார். சபையில் சிலர் பவுலுக்கு எதிராகக் காணப்பட்டாலும், பவுல் அதிகமாக நேசிக்கப்பட்டார்.

பவுல் தேவனுடைய ராஜ்யத்தை தைரியமாகவும், தயக்கமின்றியும் பிரசங்கித்ததாக லூக்கா சொன்னார். இது அவருடைய ஒட்டுமொத்த வாழ்க்கையின் பண்பாக இருந்தது. அவர் எங்கெல்லாம் இருந்தாரோ அங்கெல்லாம் பிரசங்கித்தார். பிரசங்கம் அவருடைய வாழ்க்கையாக, அர்ப்பணிப்பாக, கட்டாயமாக இருந்திருக்கிறது. " சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ " என்று அவர் சொன்னார் (1 கொரி. 9:16). உண்மையுள்ள சுவிசேஷ பிரசங்கியார்கள் பிரசங்கிக்க விரும்புவார்கள். உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் பிரசங்கத்தைக் கேட்க விரும்புவார்கள். இயேசு பிரசங்கிக்க விரும்பினார். பவுல் " *பிரயோஜனமானவைகளில் ஒன்றையும் நான் உங்களுக்கு மறைத்து வைக்காமல், தேவனுடைய ஆலோசனையில் ஒன்றையும் நான் மறைத்து வைக்காமல் எல்லாவற்றையும் உங்களுக்கு அறிவித்தபடியினாலே* " என்று சொல்கிறார் (அப். 20:20,26). மேலும், அவர் ரோமக் கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது " *ரோமாபுரியிலிருக்கிற உங்களுக்கும் என்னால் இயன்ற மட்டும் சுவிசேஷத்தை பிரசங்கிக்க விரும்புகிறேன்* " என்று எழுதினார் (ரோமர் 1:15). பவுல் பிரசங்கிக்கவும், கிறிஸ்துவின் அளவற்ற ஐசுவரியத்தைக் காட்டவும் விரும்பியிருக்கிறார். உலகத்தார் மட்டுமே பிரசங்கத்தை பரிகாசம் செய்து அதை தரக்குறைவாகப் பார்க்கிறார்கள்.

மாபெரும் புத்தகமாகிய அப்போஸ்தலர் நடபடிகள் புத்தகத்தில் லூக்கா தன் கடைசி வார்த்தைகளாக " பவுல் இயேசு கிறிஸ்துவைப் பற்றிய விசேஷங்களை உபதேசித்துக் கொண்டிருந்தார் " என்று பதிவு செய்திருக்கிறார். நம்முடைய எல்லா பிரசங்கமும், போதனைகளும் கிறிஸ்துவை மையப்படுத்தினதாக இருக்க வேண்டும். ஏனென்றால், கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக நமக்குள் இருக்கிறார் என்று பவுல் சொல்கிறார் (கொலோ. 1:27). மேலும், அவர் கொலோசே பட்டணத்து கிறிஸ்தவர்களுக்கு எழுதும் போது, " *ஆகையால், நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை ஏற்றுக்கொண்டபடியே, அவருக்குள் வேர் கொண்டவர்களாகவும், அவர்மேல் கட்டப்பட்டவர்களாகவும், அவருக்குள் நடந்து கொண்டு, விசுவாசத்தில் உறுதிப்பட்டு ஸ்தோத்திரத்தோடே அதில் பெருகுவீர்களாக* " என்றார் (கொலோ. 2:6,7). "*கிறிஸ்து எனக்கு ஜீவன் சாவு எனக்கு ஆதாயம்* " என்றும் அவர் சொல்லியிருக்கிறார் (பிலி. 1:21).

லூக்கா ஆதி திருச்சபையின் வரலாற்றையும், பவுலையும் பற்றி உற்சாகப்படுத்தும் விதத்தில் எழுதி முடிக்க விரும்பியிருக்கிறார் என்று நான் நினைக்கிறேன். பவுல் தான் மிகவும் விரும்பிய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப் பிரசங்கிப்பதிலும், போதிப்பதிலும் முடித்துக் கொண்டார்.

" *நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன். இது முதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது; நீதியுள்ள நியாயாதிபதியாகிய கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார்; எனக்கு மாத்திரமல்ல அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார்* " ( 2 தீமோத். 4:7,8).

## முடிவு கட்டுங்கள்

ஆவிக்குரிய வாழ்வில் " *என்னால் முடியாது* " என்பதற்கு ஒரு முடிவு கட்டுங்கள்.

ஏனெனில்,

" என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு " (பிலிப். 4:13) என்று பவுலடியார் கூறியுள்ளாரே.